# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 04 வெள்ளிக்கிழமை (21.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 329




14 இறுகிவரும் சர்வதேசப் பிடி



20 நாட்டுக்கு எதிர்க்கட்சி தேவையில்லை



21 ராகுல்காந்தி மீது கொலை முயற்சியா?



25 சொந்த மண்ணில் தொடரை வென்றது இந்தியா

## கொக்கிளாய் கடலில் சட்ட விரோதமாக தொழில் செய்த மீனவர் மடக்கிப் பிடிப்பு

### நீதிமன்றத்தால் எச்சரிக்கப்பட்டு விடுதலை

முல்லைத்தீவு, ஒக்.21

முல்லைத்தீவு கொக்கிளாய் கடல் பரப்பில் சட்ட விரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த முஸ்லிம், சிங்கள மீனவர்கள் 30 பேர் நேற்று நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளாலும் பொலிஸாராலும் சுற்றி வளைக்கப்பட்டு மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இவர்கள் புல்மோட்டை மற்றும் வெலிஓயாப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த 30 மீனவர்களில் 10 சம் மாட்டிமார் நேற்று மாலை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் பொலிஸாரினால் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களைக்

பக். 26

## மீனவர் நால்வர் தாக்கப்பட்டனர்

முல்லைத்தீவு, ஒக்.21

கொக்கிளாய் கடற் பரப்பில் சட்ட விரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த புல்மோட்டையைச் சேர்ந்த முஸ்லிம் மீனவர்கள் நேற்றுக் காலை மடக்கிப் பிடிக்கப்பட்டனர். இதனை அடுத்து கொக்கிளாய் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த அந்தப் பகுதியைச் சேர்ந்த தமிழ் மீனவர்கள் நால்வர் அங்கு படகில் வந்த

பக். 27

# கொல்லப்பட்டார் கடாபி!

## பங்கரில் பதுங்கியிருந்த வேளை மாட்டினார்

## வீதிகளில் கிளர்ச்சியாளர்கள் கொண்டாட்டம்



கடாபியின் சடலம்



கடாபி இறுதி நேரத்தில் பதுங்கிய இடம்

திரிபோலி, ஒக்ரோபர் 21

லிபிய ஜனாதிபதி மும்மர் கடாபி நேற்று கிளர்ச்சிப் படைகளின் தாக்குதலில் கொல்லப்பட்டார். அவர் பதுங்கியிருந்து பதுங்குழி மீது கிளர்ச்சிப் படைகள் தாக்குதலை நடத்தின. இதில் கடாபி கொல்லப்பட்டார். லிபியாவை கடந்த பல தசாப்தங்களாக ஆட்சி செய்த சர்வாதிகாரி கேணல் மும்மர் கடாபி தாங்கள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டுவிட்டதாக லிபியாவின் இடைக்கால அரசு அதிகாரிகள் நேற்றிரவு அறிவித்துள்ளனர்.

கடாபியின் பிறந்த ஊரான சிர்த்தை தாங்கள் கைப்பற்றிவிட்டதாக இந்தப் படைகள் அறிவித்த சில மணி நேரத்தில் கடாபியை தாங்கள் கொன்றுவிட்டதாக அவர்கள் அறிவித்திருக்கின்றனர். கடாபியின் சடலம் முகம் மற்றும் உடலில் காயங்களுடன் இரத்தம் வழிந்த நிலையில் தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்பட்டது. அதனைப் பார்த்துக் கிளர்ச்சியாளர்கள் ஆர்ப்பரித்தனர்.

பக். 27

## அரசு - கூட்டமைப்பு பேச்சு நேற்று மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.21

அரசு-கூட்டமைப்பு இடையே ஒத்திவைக்கப்பட்டிருந்த பேச்சு நேற்று மீண்டும் ஆரம்பமானது. இந்தப் பேச்சு நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

கடந்த 3 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த இந்தப் பேச்சு பின்னர் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. எனினும் 16 ஆம் திகதியும் பேச்சு இடம்பெறவில்லை. பேச்சுத் தொடர்பாக தாம் அனுப்பி வைத்த கடிதத்துக்கு அரசு இதுவரை பதிலளிக்கவில்லை என கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றுத் திடீரென அரசு-கூட்டமைப்பு பேச்சு ஆரம்பமாகியது.

தமிழர் பகுதிகளில் இடம் பெறும் காணிப் பதிவு மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் குறித்து

பக். 25

## பாரத கொலையின் சந்தேக நபரா துமிந்த?

### தனக்குத் தெரியாது என்கிறார் ஹெகலிய

கொழும்பு, ஒக்.21

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மனின் கொலைச் சந்தேகநபரா அல்லது இல்லையா எனத் தனக்கு எதுவும் தெரியாது என்று ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல நேற்றுக் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் ஹெகலிய இது தொடர்பில் மேலும் கூறியவை .வருமாறு:-

பாரத லக்ஷ்மனின் கொலை தொடர்பாக விரிவான - நீதியான - பக்கச்சார்பற்ற விசாரணைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. விசாரணைகள் முடியும்வரை எம்மால் எதுவும் கூற முடியாது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்தேகநபரா அல்லது இல்லையா என்று எனக்குத் தெரியாது. அவர் இப்போது வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார். அவரிடம் வாக்குமூலம் பெறவோ அல்லது அவரைக் கைதுசெய்யவோ முடியாது.

இப்போதுவரை 10 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் எவர்களோ அவர்கள்

பக். 25

## மீளப்பெறப்பட்ட டிராக்டர்கள்

முல்லைத்தீவு, ஒக்.21

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளின் பாவனைக்கென வழங்கப்பட்ட டிராக்டர்களில் சில வவுனியா மாவட்டத்தின் சேருநுவர பகுதி விவசாயிகளுக்கு வழங்குவதற்காக மீளப் பெறப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதுபற்றி மேலும் தெரியவருவ

பக். 28

## சுரேஷ் எம்.பிக்கு விஸா மறுப்பு

கொழும்பு, ஒக்.21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு விஸா வழங்குவதற்கு கொழும்பிலுள்ள கனேடியத் தூதரகம் மறுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்வரும் வாரம் அமெரிக்காவுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளனர். அதேசமயம், அமெரிக்க இராஜதந்திரிகளுடனான பேச்சின் பின்னர் கனடாவுக்கும் கூட்டமைப்பின் தூதுக்குழு செல்ல ஏற்பாடாகியுள்ளது.

இந்த நிலையிலேயே கனடா செல்வதற்காக விண்ணப்

பக். 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




யாழ்.மாவட்டத்தில் தெளிவான வானிலையும் பிறமாவட்டங்களில் இடி, மின்னல் நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

## சிகரட் விலை அதிகரிப்பு

சிகரட் வகைகளின் விலைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி கோல்ட் லீப், பென்ஸன், மற்றும் பொல்மோல் ஆகிய சிகரெட் வகைகளின் விலை 2 ரூபாவாலும் துன்ஹில் சிகரெட்டின் விலை 3 ரூபாவாலும் உயர்த்தப்பட்டுள்ளது.

# கே.பியின் பணத்தில் தான் இந்த அரசே நடக்கின்றது

'' கள்ளத்தனமான ஒப்பந்தங்களை செய்து கொண்டு புலிகளிடம் எமது இராணுவத்தை அடைவு வைத்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர். புலிக்குட்டிகளுக்குப் பாலை ஊற்றி வளர்த்து விட்டு இப்போது பூனைகளைப் போன்று பதுங்கிக் கொண்டுள்ளனர்'' என்று சாடினார் ஆளும் கட்சிக் கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன.

நேற்று நாடாளுமன்றில் வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ஐ.தே.க. உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவுக்கும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

காலி முகத்திடலில் அமைந்துள்ள இலங்கை இராணுவத் தலைமைகயம் தொடர்பான கேள்வி ஒன்றை தயாசிறி ஜயசேகர எழுப்பினார்.

### இராணுவத் தலைமையகம் இடம்மாற்றப்பட்டதா?

காலம் காலமாகக் கொழும்பு காலி முகத்திடலில் இயங்கி வந்துள்ள இலங்கை இராணுவத் தலைமையகம் அந்த இடத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளதா? அவ்வாறாயின் அதற்கான காரணம் என்ன? இவ்வாறு அகற்றப்பட்டிருந்தால் இப்போது தலைமையகம் எங்கே இயங்குகின்றது? இராணுவத் தலைமையகம் இயங்குவதற்காகப் பல தனியார் கட்டடங்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாக அறிகின்றோம். அப்படியானால் அவற்றுக்கான மாத வாடகை எவ்வளவு. அவற்றின் உரிமையாளர் யார்? என்று தயாசிறி ஜயசேகர பிரதமரிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார். இந்தக்கேள்விக்கு பிரதமரின் சார்பில் ஆளும்கட்சி கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன பதில் அளித்தார்.

'' கௌரவ உறுப்பினர் கூறுவது போல் இராணுவத் தலைமையகம் இடம்மாற்றம் செய்யப்படவும் இல்லை'' வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்படவும் இல்லை'' என்றார்.

''அதேவேளை இராணுவத்தினரின் தேவைகளுக்காக இலக்கம் 37, றோட்டன், பிளேஷில் ஆசிரி சென்றல் வைத்தியசாலை நிறுவனம், கொழும்பு - 3 இல் கோல்பேஸ் ஹொட்டலில் 29 ஆம் இலக்கமுடைய இரு கட்டடங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளன. அவற்றுக்கு மாதாந்த வாடகையாக முறையே 57 லட்சம், 19 லட்சம் ரூபாய் செலுத்தப்படுகிறது'' என்று கூறினார் அமைச்சர் தினேஷ். அப்போது இடைமறித்த தயாசிறி ஜயசேகர ''என்ன ஐயா! இது வேடிக்கையாக இருக்கின்றது. இராணுவத் தலைமையகம் இடம் மாறவில்லை என்றும் கூறுகின்றார். அதேவேளை இவ்வளவு பெரிய தொகையைக் கொடுத்து வாடகைக்கு தனியார் கட்டடங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றார். எதை நம்புவது?'' என்றார்.

தயாசிறியின் இந்த இடைக் கேள்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கு சூட்டைக் கிளப்பி விட்டது.

'' இவர்கள் இப்பொழுது இராணுவத்தினர் மீது அக்கறை கொண்டவர்கள் போல் கதைக்க வந்து விட்டார்கள். இவர்கள் தான் முன்பு கள்ளத்தனமான ஒப்பந்தங்கள் மூலம் இராணுவத்தினரை புலிகளுக்கு விற்றவர்கள்'' என்று காட்டமாகக் கூறினார் அமைச்சர் தினேஷ்.

### கே.பியின் பணத்தில் அரசு நடத்துகின்றனர்

அமைச்சரின் இந்தக் கூற்று தயாசிறிக்கு வாய்ப்பாகப் போய் விட்டது. '' ஐயா! இவர்கள் என்ன கூறுகின்றனர் என்றே, தெரியவில்லை. அப்படியானால் இன்று அரசின் செல்லப்பிள்ளையாக இருக்கும் கே.பி. யார்? இவர் புலி இல்லையா? எங்கள் மீது குற்றம் சுமத்தும் அரசு கே.பிக்கு ராஜபோக வசதிகளைச் செய்து கொடுத்துள்ளதே. கே.பியின் பணத்தில் தான் அரசே செயற்படுகின்றது'' என்று பதிலடி கொடுத்தார் தயாசிறி ஜயசேகர.

இது ஆளும்கட்சி உறுப்பினர்களை உசுப்பி விட்டது. ஒட்டு மொத்தமாகச் கூச்சல் போட்டனர். அமைச்சர் தினேஷ் ஆத்திரமடைந்தவராக எதிர்க்கட்சியினரைச் சாடினார். தயாசிறியும் விட்டபாடில்லை.காரசாரமான வார்த்தைப் பிரயோகங்கள் பறந்தன. அப்போது ''அமைச்சர் தினேஷ் நாடாளுமன்றுக்கு வரும் முன் ஏதோ பிரச்சினைப்பட்டு வந்துள்ளார் போலும் அதனால் தான் சபையிலும் சூடாக இருக்கின்றார்'' என்று குறிப்பிட்டார் தயாசிறி.

நீங்கள் சூட்டை ஏற்றும் வகையில் கேள்விகளை கேட்காவிட்டால் நாங்களும் சூடாகப் பேச மாட்டோம்'' என்றார் அமைச்சர் தினேஷ் ஒரு வழியாக தர்க்கம் ஓய்ந்தது.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியபோது-

*கமநல சேவைகள் அபிவிருத்தி திருத்தச் சட்டம்

*பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான நான்கு சட்டங்கள் திருத்தம் என்பன ஒரே வேளையில் விவாதிக்கப் பட்டன.

### குத்தகை விவசாயிகளுக்கு ஆதரவான சட்டம்

இந்தச் சட்ட மூலத்தை கமத் தொழில் சேவைகள் அமைச்சர் என்.எம்.சந்திரசேன சபையில் சமர்ப்பித்தார்.

காலம்காலமாக விவசாயம் செய்துவரும் குத்தகை கமக்காரர்களுக்கும் நில உரிமையாளர்களுக்கும் இடையிலான பிரச்சினைகளைத் தீர்க்கவும். குத்தகை விவசாயிகளின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்குமே இந்தச் சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.




சபைச் செய்தியாளர்
இரா.புத்திரசிகாமணி

நேற்றைய விவாதத்தின் போது உரையாற்றிய பலரும் குறிப்பிட்ட சட்ட மூலத்துடன் தொடர்பற்ற விடயங்களைப் பற்றியே பேசினர்.

இதனால் சபையில் அடிக்கடி ஆளும் தரப்பினருக்கும் எதிர்க் கட்சியினருக்கும் இடையில் வாக்கு வாதங்கள் இடம்பெற்ற வண்ணமே இருந்தன.

### அடைக்கலநாதனின் ஆதங்கம்

வன்னி மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் வன்னி நிலப்பரப்பில் விவசாயிகள் முகம் கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகளை சபையில் புட்டுக்காட்டினார்.

வன்னிப் பிரதேச மக்கள் எவருடைய தயவையும் எதிர்பாராமல் வாழ்ந்தவர்கள். சுடமாகவும் சொந்தமாகவும் விவசாய உழவு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வைத்து வாழ்ந்தவர்கள்.

இறுதிக்கட்டப் போரில் முள்ளிவாய்க்கால் வரை அவற்றைப் பாதுகாப்பாகக் கொண்டு சென்று விட்டார்கள். ஆனால் இன்று தென்பகுதிக்குக் கடத்தப்பட்டு பழைய இரும்பாக விற்கப்படுகிறது. விவசாயக் காணிகளில் இராணுவத்தினர் பலன் பெறுகின்றனர். இது பெரும் வேதனை.

### இறைச்சியாகும் கால்நடைகள்

இடம்பெயர்வின் போது விவசாயிகளால் விட்டுச்செல்லப்பட்ட பல லட்சம் கால் நடைகள் இன்று காடுகளில் கட்டாக் காலிகளாகத் திரிகின்றன. அதன் உரிமையாளர்கள் அவற்றைப் பிடித்து வளர்க்க இராணுவத்தினர் அனுமதிப்பதில்லை. அதேவேளை இந்தக் கால்நடைகள் யார் யாரோ இறைச்சிக்காக வெட்டி விற்கின்றனர். இந்தக் கொடுமையை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகள் தமது கால் நடைகளைப் பிடித்து வளர்க்க அனுமதிக்க வேண்டும் என்றும் செல்வம் அடைக்கலநாதன் அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

### கொள்ளை இலாபம்பெறும் இடைத் தரகர்கள்

மலை நாட்டில் விளைவிக்கப்படும் மரக்கறி வகைகளைக் கூட வன்னிப் பிரதேசத்தில் உற்பத்தி செய்கின்றனர் எமது விவசாயிகள். ஆனால் இவற்றை சந்தைப்படுத்தும் வாய்ப்புகள் இல்லை.

தமது உற்பத்திகளை உரிய விலைக்கு வன்னி விவசாயிகளால் விற்கமுடிவதில்லை. இடைத்தரகர்களே பெரும் இலாபம் அடைகின்றனர்.

எனவே எமது விவசாயிகளின் உற்பத்திகளை சந்தைப் படுத்தும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் அடைக்கலநாதன் சுட்டிக்காட்டினார். ஆனால் அரச தரப்பில் இருந்து எந்தப் பதிலும் இல்லை.

# நிகழ்வுகள்

**கட்டடத் திறப்பு விழா**

யுனிசெப் நிறுவனத்தின் 87 லட்சம் நிதி உதவியுடன் கோண்டாவில் பரஞ் சோதி வித்தியாலயத்தின் புதிய இரண்டு மாடிக் கட்டடத் திறப்புவிழா இன்று வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கதம்பமலர் விம லராஜன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகவும் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாள ரும் மாகாணக் கல்வி பண்பாட்டலு வல்கள் விளையாட்டுத்துறை அமைச் சின் செயலாளருமான இ.இளங்கோவன் கௌரவவிருந்தினராகவும் வடமா காணக் கல்விப் பணிப்பாளர் ப.விக் னேஸ்வரன், யுனிசெப் நிறுவனத்தின் தலைமைக்கள அலுவலர் மாச்சரய் பாமகூஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ம-311)

**பாராட்டு விழா**

வேலணை மத்திய கல்லூரி கல்விப் பணி நயப்பும் பாராட்டு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சேர்.வைத்தியலிங்கம் துரைசுவாமி ஒன்று கூடல் மண்டபத்தில் பாடசாலை அதிபர் சிவசாமி கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச)

**பரிசளிப்பு**

தேசிய வாசிப்பு மாதத்தை முன் னிட்டு பருத்தித்துறை பிரதேச சபை யின் ஏற்பாட்டில் பரிசளிப்பு விழாவும் கண்காட்சியும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு புலோலி பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரை, பொது அறிவு, சித்திரப்போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (த-313)

* * *

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வெள்ளைப்பிரம் பின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் விழிப் புலனற்றவர்களுக்கான நடமாட்டம் பயிற்சியில் 10 பேரை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும். (ம-313)

* * *

யாழ். நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 9.15 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகவும், ஏ.எஸ் சற்குணராஜ் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

**கண்காட்சி**

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் 'நீரும் மனிதனும்' எனும் கண்காட்சி நேற்று வியாழக்கிழமையும் இன்று வெள்ளிக்கிழமையும் நடைபெறுகிறது. தேசிய நீர் கலாசாரத்தை வலியுறுத்தும் இந்தக் கண்காட்சியை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையும் பார்வையிடலாம். கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இது நடை பெறகிறது. கரைச்சி பிரதேச செயலகமும், கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களமும் இதற்கான ஒத்துழைப்பை வழங்குகின்றனர். (த-121)

**தகவல் தொழில்நுட்பப் பரீட்சை**

ஜி.சீ.ஈ உயர்தர மாணவர்களுக்கான தகவல் தொழில் நுட்பப் பரீட்சை நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணம், தீவகம், தென்மராட்சி வலயத்தை சேர்ந்த பரீட்சை அலுவலகர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டமும் காகிதாதிகள் வழங்கல் தொடர்பான கூட்டமும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சம்பந்தப்பட்ட வலயக்கல்வி அலுவலகங்களில் நடைபெறும்.

இணைப்பு நிலைய உத்தியோகத்தர்களும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களும் இந்த கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் ரி.வை. ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (த-311)

**கருத்தரங்கு**

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் ''அரசியலில் பெண்களின் ஈடுபாட்டை ஊக்குவித்தல்'' எனும் தலைப்பில் இரண்டாவது கருத்தரங்கு இன்று காலை 9 மணிக்கு இராமநாதன் வீதி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் பெண்களது திறன்வளர்ப்பு, அறிவு, அனுபவங்களைப் பகிர்தல் போன்ற முக்கிய விடங்கள் விவாதிக்கப்படவுள்ளன. (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் வழக்கு விசாரணைக்கு உச்சநீதிமன்றம் மறுப்பு

ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் தொடர்பான வழக்கை விசாரிக்க இந்திய உயர்நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

பேரறிவாளன், சாந்தன் மற்றும் முருகன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கை அங்கு விசாரிக்க தடை கோரி உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை விசாரிக்க 3 பேர் கொண்ட ஆயம் நேற்று மறுத்துவிட்டது.

இந்த அமர்வு விசாரணைக்கு குற்றம் சாட்டப்பட்டுள்ள தமிழர் சார்பில் ஆஜரான மூத்த சட்டத்தரணி ராம்ஜெத்மலானி ஆட்சேபனை தெரிவித்ததை ஏற்று நீதிபதிகள் இந்த முடிவைத் தெரிவித்தனர்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டத்தரணி வெங்கட் என்பவர் உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடர்ந்துள்ளார். அதில், சென்னை உயர்நீதிமன்றத்தில் ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோருக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனையை இரத்து செய்யக் கோரி ஒரு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இதன் மீதான விசாரணை வந்தபோது உயர் நீதிமன்ற வளாகத்தில் கூட்டம் கூடியது. இதனால் ஒரு பரபரப்பான சூழல் ஏற்பட்டது. எனவே வழக்கு விசாரணையை சென்னையில் தொடர்ந்ததால் அது தீர்ப்பில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். மேலும் தூக்குத் தண்டனை குறித்த ஒரு வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனவே இந்த வழக்கையும் உச்ச நீதிமன்றத்துக்கே மாற்றி விசாரிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

இதை ஏற்று சிங்கவி தலைமையிலான 2 நீதிபதிகள் கொண்ட அமர்வு இந்த வழக்கை விசாரித்தது. பின்னர் விளக்கம் கேட்டு மூன்று பேருக்கும் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது. இந்த நிலையில் இந்த வழக்கு 3 நீதிபதிகள் கொண்ட குழு விசாரணைக்கு வந்தது. சிங்கவி விடுமுறையில் இருப்பதால் 3 பேர் கொண்ட வேறு குழு முன்பாக வழக்கு விசாரணைக்கு வந்தது.

இதையடுத்து பேரறிவாளன், முருகன், சாந்தன் சார்பில் ஆஜரான மூத்த சட்டத்தரணி ராம் ஜேத் மலானி வாதிடுகையில்:

இந்த வழக்கில் ஏற்கனவே விசாரணை முடிந்து விட்டது. நீதிபதி சிங்கவி தற்போது விடுமுறையில் உள்ளார். அவர் வந்த பிறகுதான் இந்த வழக்கை விசாரிக்க வேண்டும். இந்த அமர்வு விசாரிக்கக் கூடாது. தவறான அமர்வு முன்பு இந்த வழக்கு நேற்று வந்துள்ளது என்று கூறினார். இதை 3 நீதிபதிகளும் ஏற்றுக்கொண்டனர். நீதிபதி சிங்கவி வந்த பின்னர் அந்த அமர்வுக்கு இந்த வழக்கு மாற்றப்படும் என்று கூறி வழக்கை ஒத்தி வைத்து உத்தரவிட்டனர்.

பின்னர் ராம்ஜேத்மலானியுடன், இந்த வழக்குக்காக டில்லிக்குப் போயிருந்த ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியில் வந்தார்.

செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில், ராம்ஜேத்மலானியின் வாதத் திறமையால் மூன்று பேரின் தூக்குக்கயிறும் அறுபடும். அதில் எனக்கு முழுமையான நம்பிக்கை உள்ளது. மூன்று பேரின் தூக்குத் தண்டனையும் முறியடிக்கப்படும் - என்றார்.

# மாணவர் ஒன்றியத் தலைவர் மீதான தாக்குதல் ஒரு படுகொலை முயற்சி

## ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டனம்

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சுப்பிரமணியம் தவபாலசிங்கம் அடையாளம் தெரியாத குழுவினரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உடனடியான விசாரணைகள் நடத்தப்பட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

கந்தர்மடம் பகுதியில் வைத்து கடந்த 16 ஆம் திகதி அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சு.தவபாலசிங்கம் படுகாயமடைந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதூரை வதிவிடமாகக் கொண்ட இவரைத் தனிநாடு தேவையா என்று கேட்டுக் கேட்டு அந்தக் குழுவினர் தாக்கியுள்ளனர்.

இலங்கை அரச புலனாய்வுப் பிரவினரே இதற்குப் பொறுப்பு என்று மாணவர் ஒன்றியத் தலைவர் சு.தவபாலசிங்கம் கருதுவதாகவும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை, மாணவர் ஒன்றிய தலைவர் சு.தவபாலசிங்கத்தை சட்டத்துக்குப் புறம்பான முறையில் படுகொலை செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சியாகவே தாம் இதைக் கருதுவதாகவும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அரசியல் உள்நோக்கத்துடன் நடத்தப்பட்ட நன்கு திட்டமிடப்பட்ட தாக்குதலாகவே கருதப்படும் இந்தச் சம்பவம் தொடர்பாக இன்னமும் இலங்கை அரசின் சட்டத்தை நடைமுறைபடுத்தும் எந்தவொரு அதிகாரிகளும் விசாரணைகளை ஆரம்பிக்கவில்லை என்றும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு விசனம் வெளியிட்டுள்ளது.

அத்துடன் இதுதொடர்பாக ஐ.நாவின் சித்திரவதைகள் மற்றும் நீதிக்குப் புறம்பான படுகொலைகள் குறித்த. சிறப்பு அறிக்கையாளருக்கு தாம் தெரியப்படுத்தியுள்ளதாகவும் ஆசிய மனிதஉரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(த-10)

# மந்திகைப் பொதுச் சந்தை இன்று முதல் ஒருவார காலத்துக்குப் புதிய கட்டடத்தில்

## மழை ஆரம்பித்துள்ளதால் தற்காலிக ஏற்பாடு

வடமராட்சி,ஒக்.21

மந்திகைப் பொதுச் சந்தை இன்று வெள்ளிக்கிழமை முதல், புதிதாகக் கட்டப்பட்டுவரும் சந்தையில் சுமார் ஒரு வார காலத்துக்கு தற்காலிகமாக இயங்கவுள்ளது.

இதற்கென சந்தை வியாபாரிகளுக்கு, புதிதாகக் கட்டப்பட்டு வரும் சந்தையில் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் தலைமையில் எதிர்கட்சி உறுப்பினர்களான ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் கே.மணிதரன் ஆகியோர் உட்பட 8 உறுப்பினர்கள் ஒன்றிணைந்து சபை ஊழியர்களின் உதவியுடன் இடங்களை ஒதுக்கிக் கொடுத்துள்ளனர்.

மந்திகை பொதுச் சந்தை அமைப்பதற்காக கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் அடிக்கல் நடப்பட்டு கட்டட வேலைகள் நடைபெற்று வந்தன. கட்டட வேலைகள் பூர்த்தியடையும் வரை பொதுச்சந்தைக்கு நேரேயுள்ள தனியாரின் காணி ஒன்றில் தற்காலிக சந்தை அமைக்கப்பட்டிருந்தது.

மூன்று வருடங்களாக இயங்கி வரும் தற்காலிக கொட்டகைச் சந்தை சேதமடைந்துள்ளதால் தற்போது மழை பெய்ய ஆரம்பித்ததையடுத்து அங்கு ஒழுக்கு ஏற்படுகிறது. இதனால் தரை சேறும் சகதியுமாக மாற்றமடைகின்றது. மரக்கறி, தேங்காய், பழவகைகள் மழையில் நனைந்து பழுதடைகின்றன. வியாபாரிகள் அந்தரத்தில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு புதிய சந்தைக் கட்டடவேலைகளை விரைவாகப் பூர்த்தி செய்து தருமாறு மந்திகை சந்தை வியாபாரிகள் கடந்த மாதம் 29 ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நடைபெற்றபோது, சபா மண்டபத்திற்குள் சென்று சபைத் தலைவர், உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சபை ஒருமாத காலத்துக்குள் தற்காலிக கொட்டகைச் சந்தையைத் திருத்துவதுடன் அடுத்த மூன்று மாத காலத்துக்குள் புதிதாகக் கட்டப்பட்டு வரும் சந்தையை பூர்த்தி செய்து தருவதாகச் சபையினர் ஏகமனதாக உறுதி அளித்திருந்தனர்.

தற்போது மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் தற்காலிக கொட்டகைச் சந்தைத் திருத்த வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படாததினால், சபைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது முற்பகல் 11.30 மணியளவில் சந்தை வியாபாரிகள் சபைக்கு வந்து தலைவரையும் உறுப்பினர்களையும் சந்திக்கக் காத்திருந்தனர்.

அவ்வேளை நிலமைகளைப் புரிந்து கொண்ட சபை உறுப்பினர்களில் எதிர்கட்சி உறுப்பினரான ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் நாம் இன்றுடன் மூன்று கூட்டங்களை நடத்தி விட்டோம். மக்களுக்காக ஒரு மின் குமிழையாவது போட்டுக்கொடுத்தோமா? சந்தை வியாபாரிகளுக்கு நாம் கொடுத்த உறுதி மொழியின் படி நடந்து கொள்ள வேண்டும். மழை ஆரம்பித்து விட்டது ஆதலால் கட்டப்பட்டு வரும் புதிய சந்தையில் ஒருசில தினங்கள் வரை சந்தையை இயங்கவைத்து இக்காலத்துக்குள் தற்காலிக கொட்டகைச் சந்தையை திருத்தி வழங்க வேண்டும். இந்தப்பணியை இன்றே உறுப்பினர்களாகிய நாம் அனைவரும் ஒன்றாகச் சென்று புதிதாகக் கட்டப்பட்டு வரும் சந்தையில் ஒவ்வொரு வியாபாரிகளுக்கும் கோடுகள் வரைந்து இடத்தை ஒதுக்கிக் கொடுப்போம்- என்றார்.

இந்தக் கருத்தை அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டதுடன், இம்முடிவை சபையின் சார்பில் துணைத் தலைவர் மா. லோகசிங்கம் வெளியில் காத்திருந்த சந்தை வியாபாரிகளைச் சந்தித்து தெரிவித்துக் கொண்டார் இதனைச் சந்தை வியாபாரிகள் அனைவரும் ஏற்றுக்கொண்டனர். (த-236)

# பகிடிவதையின் போது தாக்குதல் மாணவனின் செவிப்பறை வெடித்தது

யாழ்ப்பாணம்,ஒக்.21

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதையின் போது (ராக்கிங்) சிரேஷ்ட மாணவர்களால் துன்புறுத்தப்பட்டார் என்று சொல்லப்படும் சம்பவத்தில் காயமடைந்த முதலாம் வருட மாணவர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பின்னர் வீடு திரும்பினார் என்று யாழ். போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூத்த மாணவர்கள் சொன்னதை மீறி கைக்குட்டையை எடுத்து வந்ததற்காக இவர் தாக்கப்பட்டார் என்று விசாரணைப் பதிவுகளில் இருந்து தெரிய வந்துள்ளது. இரு மூத்த மாணவர்களே இவரைத் தாக்கினர் என்று வாக்கு மூலப் பதிவுகள் கூறுகின்றன.

கடந்த 13 ஆம் திகதி மாணவன் தாக்கப்பட்டுள்ளார். எனினும் தொடர்ச்சியான நோவை அடுத்து 18 ஆம் திகதி குறித்த மாணவன் வைத்தியசாலையில் சேர்ந்துள்ளார். 14 ஆம் இலக்க விடுதியில் சேர்க்கப்பட்ட இவருக்கு இடதுபக்க செவிப்பறை மென்சவ்வு வெடித்துள்ளதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ராக்கிங் செய்வது தண்டனைக்குரிய குற்றம் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையிலும் இந்தச் சம்பவம் குறித்துத் தகவல்கள் வெளியாகி உள்ளன. (உ-15)

# யாழ்ப்பாண மாம்பழத்தில் மயங்கிய அமெ.எம்பிக்கள்

## அரச அதிபரிடம் மாம்பழம் கேட்டனர்

யாழ்ப்பாணம், ஒக்.21

யாழ்ப்பாணத்தின் மாம்பழச் சுவைக்கு மயங்கிய அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ்ப்பாணத்தில் எங்கே மாம்பழங்கள் வாங்கலாம் என்று அரச அதிபர் இமெல்டா சுகுமாரிடம் கேட்டனர்.

யாழ்.மாவட்டசெயலகத்துக்கு நேற்றுமுன்தினம் காலைவிஜயம் செய்த அமெரிக்கக் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களே அரச அதிபரிடம் இவ்வாறு மாம்பழம் கேட்டனர்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

யாழ்.மாவட்டத்தில் சுற்றுலாத்துறை தொடர்பாகவும் பார்க்க வேண்டிய இடங்கள் தொடர்பாகவும் மாவட்ட செயலகத்தால் வெளியிடப்பட்ட வழிகாட்டி நூலை விருப்பத்துடன் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாங்கிப்படித்தனர்.

பின்னர் யாழ்.பொது நூலகம் எரிக்கப்பட்டது தொடர்பாகவும் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் விசாரித்தனர். அதன் தற்போதைய நிலையை அரச அதிபர் படத்தில் காட்டினார்.

தொர்ந்து யாழ்ப்பாணத்தில் கறுத்தக் கொழும்பான் மாம்பழம் எங்கே வாங்கலாம் என்று எம்.பிக்கள் அரச அதிபரிடம் கேட்டனர். அத்துடன் நெல்லிரசம் எங்கே பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர்கள் கேட்டனர். அதன் பின்னர் அமெரிக்க நாடாளுமன்றக் குழுவினர் மாவட்ட செயலகத்தின் வழிகாட்டலில் திருநெல்வேலிச் சந்தைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அவர்களுக்கு மாம்பழம், மற்றும் நெல்லிரசம் என்பன வாங்கிக் கொடுக்கப்பட்டன. (த-15)

# இ.போ.ச. பிரதேச முகாமையாளராக மீண்டும் கணேசபிள்ளை நியமனம்

யாழ்ப்பாணம், ஒக்.21

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பிரதான பிரதேச முகாமையாளராக கணபதி கணேசபிள்ளைமீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவின் பணிப்பின் பேரில் இலங்கை போக்குவரத்துச் சபைத் தலைவர் பந்தசேனவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி கடமையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்ற கணேசபிள்ளைக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை தொடக்கம் மீள் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி 60 ஆவது வயதைப் பூர்த்தி செய்துள்ள கணேசபிள்ளை ஓய்வு பெற்றதையடுத்து பதில் கடமைக்காகப் பிரதேச முகாமையாளர் கே.கேதீசன் நியமிக்கப்பட்டிருந்தார்.

வடபிராந்திய பிரதான பிரதேச முகாமையாளர் பதவிக்கான நேர்முகத் தேர்வு இடம்பெற்ற போது அதில் முஸ்லிம்கள் இருவரும், கேதீசனும் தோற்றியிருந்தனர். அந்த நேர்முகப் பரீட்சையின் முடிவின் பிரகாரம் யாரும் நியமிக்கப்படாத நிலையில் கணேசபிள்ளை மீண்டும் பிரதேச முகாமையாளராக நியமனம் பெற்றுள்ளார். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளிக் கல்வி-டிப்ளோமா பயிற்சிக்கான விண்ணப்பப் படிவம்

வடமாகாண கல்வியமைச்சின் வழிகாட்டல் ஆலோசனையுடனும் சிறுவர் அபிவிருத்தி பெண்கள் விவகார அமைச்சின் அனுமதியுடனும் எமது நிறுவனத்தினால் நடத்தப்படும் மேற்படி கற்கைநெறி (ஆண்டு 2011/2012) க்கான விண்ணப்பங்கள் முன்பள்ளி ஆசிரியர்களிடமிருந்து 14.11.2011 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப்படிவங்களை அலுவலக நேரத்தில் 25.10.2011 ஆம் திகதியிலிருந்து 07.11.2011 வரை வலய ஆரம்பப்பிள்ளை அபிவிருத்தி உதவிக்கல்விப் பணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

இல. 9,
முதலாம் ஒழுங்கை,
லிங்கநகர், திருகோணமலை.

சுந்தரம் டிவகலாலா
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
ஆறுதல்.

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.21

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.க. சிற்றம்பலத்துக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டமையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் பேராசிரியர் இ.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் வாழ்த்துரைகளை தென்னிந்திய திருச்சபை முன்னாள் ஆயர், அருட்கலாநிதி பேராயர் எஸ்.ஜெயநேசன், பெ.கனகசபாபதி, பிரதேச சபை உறுப்பினர் க.கௌரிகாந்தன் ஆகியோர் நிகழ்த்துவர்.

(த-சி)

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் மீள் கேள்வி அறிவித்தல்

**கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.**

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி -24.10.2011-02.11.2011 பி.ப. 2.00 மணி வரை கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.
கடைசித் திகதி - 03.11.2011 நண்பகல் 12.00 மணி வரை
கேள்வி திறந்து பார்க்கும் திகதி - 03.11.2011 பி.ப. ஒரு மணி
கேள்விப்பத்திரம் வழங்கப்படும் இடம் - தலைமை அலுவலகம், சுன்னாகம்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத்தரம் |
|---|---|---|---|
| 1. மருதனார்மடம் சந்தை கொட்டகை திருத்தம் | 5000.00 | 560.00 | M7/C8 |
| 2. மோட்டார் அறையும் தண்ணீர்த்தொட்டிக்கான தாங்கி அமைத்தலும் | 2000.00 | 560.00 | M7/C8 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் குறிக்கப்பட்ட "இக்ராட்" தரத்துக்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

தேசத்தைக் கட்டியெழுப்பும் (NBT) வரியாக மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்துடன் மேலதிகமாக 3% அறவிடப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதி "தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கும் அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் உரிய காலத்துக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

திரு. தி.பிரகாஷ்,
20.10.2011 தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.


## முதலாவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்

நடேசன் - கௌரி தம்பதியரின்
அருந்தவப் புதல்வன்
**சாஜிரான்**




தனது முதலாவது பிறந்தநாளை இன்று (21.10.2011) வெள்ளிக்கிழமை கொண்டாடுகின்றார். இவரை அம்மனதும் முருகனதும் அருளுடன் நோய் நொடிகள் இன்றிச் சீரோடும் சிறப்போடும் பல கலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க என அன்பு அப்பா, அம்மா, அக்கா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா ஆகியோர் இதயம் மகிழ வாழ்த்துகின்றார்கள்.

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்

திருமதி பா.தங்கரத்தினம்
(அம்மம்மா)

## PERSONAL CLASSES

364, Stanly Rd.,
Jaffna.
(Near DMI)

GAQ, BAI, BA Final
தமிழ்- K.தர்மராஜா
Pol. Sci- புவனதாஸ்
(GAQ-7-8/BAII-8-9)
ECO- தயாபரன்

**BA-I ENGLISH**
**8-9.30/11-12.30**

ஆரம்பம்
நாளை
22.10.2011,
சனி 8 மணி

## உடன் தேவை

எமது நிறுவனத்தின் காட்சியறைகளில் பணியாற்றுவதற்கு பின்வரும் பணி நிலைகளுக்கு வேலையாள்கள் தேவை.

- கிளை முகாமையாளர்
- விற்பனையாளர்கள்
- உதவியாளர்கள்
- அலுவலக ஊழியர்கள்
- கள உத்தியோகத்தர்கள்

திறமையுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். மேலதிக விவரமறிய அழையுங்கள்.

**T.P: 0771399950**

(9341)

## SLAS வகுப்புக்கள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான இலங்கை நிர்வாக சேவை (SLAS) ஆள்சேர்ப்புப் பரீட்சைக்கான

- பொது உளச்சார்பு
- பொது அறிவு
- முகாமைத்துவ உளச்சார்பு
- கட்டுரையும் சுருக்கமும்

*யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் (யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே) ஒவ்வொரு ஞாயிறும் ஒரு மணி தொடக்கம் 5 மணி வரை (0773222768)

*அம்பாள் கல்வி நிலையம்(வைரவ புளியங் குளம்) வவுனியாவிலும் நடைபெறவுள்ளது. இதற்கு முன்கூட்டியே பதிவை உறுதிப்படுத்தவும்.
(0770742649)

## காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகில் தொழிற்சாலைகள், நிறுவனங்கள் என்பனவற்றுக்கு ஏற்றவகையில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:0776138978

## வீடு விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு டச்சு றோட்டில் 04 பரப்புக் காணியில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0777913164**


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சக ஆசிரியை
**திருமதி தமயந்தி ஜெயமுகுந்தன்**
அவர்களின் பாசமிகு தந்தை

**சின்னப்பு இராசரத்தினம்**

அவர்களின் மறைவினையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## மரண அறிவித்தல்

### திருமதி யூலிஸ் மெனிக்கா



திருநெல்வேலி (பாற்பண்ணை), கலாசாலை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யூலிஸ் மெனிக்கா நேற்று (20.10.2011) வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற யூலிஸின் அன்பு மனைவியும், சித்திராதேவி, பத்மாவதி, பந்துசேனன், ஜெயசேனன் (வெள்ளை), தர்மசேனன் (தருமு), கருணதாஸ் (குட்டி), பிறேமலா, சௌந்தரநாதன் (ரவி) ஆகியோரின் அன்புத் தாயும், கனகசபேசன், காலஞ்சென்ற காந்தரூபசிங்கம் மற்றும் சாந்தவதனி (ரதி), கலாநிதி, இரஞ்சிதமாலா, செல்வராசனி (லலி), ஸ்ரீஸ்கந்தராஜா, குகாயினி ஆகியோரின் அன்பு மாமியும், கமல்ராஜ், காலஞ்சென்ற கமல்ஜித் மற்றும் கமல்நாத், தாரணி, மென்லியா, செந்தில்குமரன், தயாநந்தினி, காலஞ்சென்ற திலீபன் மற்றும் ஜெயரூபன், மதன்ராஜ், அருண்ராஜ், திலக்ராஜ், குருபிரசாத், நேரியன், தேவகி, நிருஷா, சோபியன், புருசோத்தமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கரிஷா, ரினுசன், சர்மிலி, ஜனுசன், பாபரா, டனியன், தக்சனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2011) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில், ஆலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.


## தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தும் பெற்றோர்களுக்கு ஓர் நற்செய்தி!

தற்போது திங்கள் தோறும் வெளிவருகின்றது

# புலமைச்சுடர் 2012 - 2013

ஒரு வார ஆக்கங்களைத் தாங்கி திங்கள் தோறும் வெளிவரும் முன்னோடிக் கையேடு

2012 (தரம் 04), 2013 (தரம் 03) ஆம் ஆண்டுகளில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களை தயார்படுத்துவதற்கான சிறப்பு வழிகாட்டி

தொடர்புகளுக்கு:
புலமைச்சுடர் ஆசிரியபீடம் - 011 5738855 / 071 6850005
விநியோகப்பிரிவு - கொழும்பு 011 5737599 / 071 6850006
யாழ்ப்பாணம் 021 5677222 / 071 6182182

இவையனைத்தும் 15 ரூபா முதலீட்டில்...

தேசிய ரீதியில் புகழ்பெற்ற கல்விச்சுடர் வளவாளர்களின் அரிய படைப்பு

## இக்கையேட்டை அலங்கரிப்பவை

- கற்றல் குறிப்புகள்
  - தமிழ் மொழி
  - கணிதம்
  - சுற்றாடல்
  - ஆங்கிலம்
  - சிங்களம்
- தரம் 3, 4 படிமுறை மாதிரிப் பரீட்சை வினாத்தாள்
- கட்டுரைக்களம், பொது அறிவு
- மூளைக்கு வேலை விஞ்ஞான விளையாட்டு
- வாரம் ஐந்து வினா - விடை விளக்கம்
- சங்கமம்
- முதல்நிலை மாணவர்களின் அனுபவப் பகிர்வு

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள பத்திரிகை முகவரிடம் முற்பதிவு செய்துகொள்ளவும்.

குறிப்பு: இலவச வினாத்தாள் திருத்தற்சேவையுடன் கூடிய ஆண்டுக்கான சந்தாப் பிரதிகளை பெறவிரும்புவோர் 071 6850006 / 071 4273053 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொள்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சட்டம், ஒழுங்கு அரசியல் மயமாவது சர்வாதிகாரத்துக்கே வித்திடும்...

அரசாங்கத்தின் மீதும் சட்டங்கள் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். பொலிஸ் மற்றும் நீதிமன்றங்கள் மீதும் மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. இவற்றுக்கு நிரந்தரமாகத் தீர்வு காணப்படாவிட்டால் நாடாளுமன்றத்துக்கு எதிராக மக்கள் சட்டத்தைக் கையில் எடுப்பர்.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு எச்சரித்திருக்கிறார்.

நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்திருப்பதாகத் தெரிவித்து, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க நாடாளுமன்றில் புதனன்று கொண்டு வந்த ஒத்திவைப்புப் பிரேரணை மீது பேசுகையிலேயே, மக்கள் நாடாளுமன்றத்துக்கு எதிராகச் சட்டத்தைக் கையில் எடுக்கக் கூடிய ஆபத்தைச் சுட்டிக்காட்டி உள்ளார் ரணில்.

உலக நாடுகள் பலவற்றில் பயங்கரவாதம் அல்லது சிவில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளைகளில், அங்கு அரசாங்கங்கள் செயற்பட்டன, சட்டங்களும் நடைமுறையில் இருந்துள்ளன.

சோமாலியாவில் மட்டும் அங்கு அரசாங்கம் கவிழ்ந்த பின்னர் மக்கள் சட்டம் ஒழுங்கைத் தமது கையில் எடுத்தனர் -

ஆனால், எமது நாட்டில் அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் போதே, மக்கள் சட்டம் ஒழுங்கை தமது கையில் எடுத்துள்ளனர்.இது பெரும் பாரதூரமான, ஆபத்தான நிலையைத் தோற்றுவித்துள்ளது. இதற்கு முழு முதல் காரணம் எங்கள் நாட்டில் சட்டம், ஒழுங்கு ஆகியன அரசியல் மயப்படுத்தப்பட்டிருப்பதே ஆகும் - என்றார் எதிர்க்கட்சித் தலைவர்.

எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துக்களை அரசாங்கம் தட்டிக் கழிக்க முடியாது. அவர் சொல்வது போன்று இத்தகைய ஆபத்தான நிலை தோன்றுவதற்கு அரசாங்கம் மட்டுமன்றி எதிர்க்கட்சியும் காரணம் என்பது மிகவும் வெளிப்படையானது.

இந்த ஆபத்தான நிலைக்கு, அரசமைப்புச் சட்டத்துக்கான பதினேழாவது திருத்தம் நீக்கப்பட்டதே காரணம் என்பதனை ரணில் சரியாகச் சுட்டிக் காட்டிஇருக்கிறார். அதுவும் மெத்தவும் சரி.

சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் பதவியில் இருந்த வேளை, நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களை - தேர்தல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, நீதிச் சேவை ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு - ஆகியவற்றை உருவாக்குவதற்கான 17 ஆவது திருத்தச் சட்டம் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

மேற்கூறிய நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான அங்கத்தவர்களை நியமிப்பதற்குப் பத்து உறுப்பினர்கள் கொண்ட அரசமைப்புக் கவுன்ஸிலை நிறுவுவதற்கும் 17 ஆவது திருத்தச் சட்டம் வகை செய்தது. ஆனால் அப்போதைய நாடாளுமன்றம் 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பத்தாம் திகதி கலைக்கப்பட்டது.

எனினும், அதன் பின்னர் பதவிக்கு வந்த ரணில் மற்றும் மஹிந்த அரசுகள், சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுவதற்கு முதல் தேவையான அரசமைப்புக் கவுன்ஸிலை உருவாக்குவதில் அக்கறை கொள்ளவில்லை.

மாறாக, அந்த இடைவெளியைப் பயன்படுத்தி இப்போது, அரசமைப்புச் சட்டத்துக்கான 17 ஆவது திருத்தம் நீக்கப்பட்டு விட்டது.

இத்தகைய இடைவெளியின் பின்னர், சட்டம் ஒழுங்கு சீர்குலைவதற்கு அவை அரசியல் மயப்படுத்தப்பட்டு விட்டதே பிரதான காரணம். இதற்குத் தக்க உதாரணமாக கொலன்னாவையில் அரச அணியைச் சேர்ந்த இரண்டு குழுக்கள் ஆயுத மோதலில் ஈடுபட்டு உயிரிழப்புகள் உண்டான சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

கட்டுநாயக்கா, புத்தளம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெற்ற சம்பவங்களுக்கும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டியவர்களின் செயற்பாடுகள் அரசியல் மயப்படுத்தப்பட்டதே மூல காரணம் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை.

மேலும் மலையகம், கிழக்கு, வடக்கு ஆகிய பிராந்தியங்களில் உண்டாக்கப்பட்ட கிறீஸ்பூத வன்செயல்களுக்கும் அதனால் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையேயான மோதல்களுக்கும் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்புள்ள நிறுவகங்களும் அரசியல் மயப்படுத்தப்பட்டதே மூலகாரணம். இது இப்போது தெளிந்த நீரோடை போன்று துலங்குகிறது.

சட்டம், ஒழுங்கு, நீதியைப் பரிபாலிப்போர் பக்கச் சார்பின்றிச் சுயேச்சையாகச் செயற்படுவதற்கு அதிகாரத்தில் உள்ளவர்களால் அவை அரசியல் மயப்படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும்; முற்றுப்புள்ளி வைக்கப்படுவது மிகமிக அவசியம்.

இது விடயத்தில் பாட்டும் நானே பாவமும் நானே என்ற நிலை தொடந்தால்,அரசின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிடுவர். நாடாளுமன்றம், ஜனநாயகம், நல்லாட்சி என்பன கேள்விக்குரியனஆகிவிடும். அதனால், லிபியா மற்றும் சூடான் போன்ற நாடுகளில் இடம்பெற்றது போன்று ஜனநாயகம் மறைந்து, சர்வாதிகாரத்துக்கும் மக்களுக்கும் இடையிலான 'போர்' ஆகவும் மாறும் ஆபத்து உண்டு. சட்டம், ஒழுங்கு அரசியல் மயப்படும் போக்கு மிகவும் ஆபத்தானது.

அதனை முளையில் கிள்ளி எறிவதற்கு, உகந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் நட்டமும் ஆபத்தும் மக்களையே விரைவு வேகத்தில் வந்து தாக்கும் என்பதனை அரசியல் மயமாக்கலில் ஈடுபடும் அதிகார சக்திகள் மட்டுமன்றி மக்களும் உணர்ந்து கொள்வது மிகமிக அவசியம். அரசும் மக்களும் அது விளைவிக்கக்கூடிய பாதகங்களை, நட்டங்களை உணர்ந்து செயற்படாவிடில், காலம் தக்க பதில் தரும்; நாடு சீரழியும் பேராபத்து மிகமிக நெருங்கி வரும்.

அரசு என்பது, மக்களால், மக்களுடைய, மக்களுக்காக என்ற கோட்பாடு மறைந்து, நாடு வேறு திசை நோக்கி நகரும் துரதிர்ஷ்டம் தலையெடுப்பது தவிர்க்க முடியாததாகவும் தடுக்க முடியாததாகவும் ஆகிவிடும். அதன் பிறகு மக்களைக் கடவுளே காப்பாற்ற வேண்டும் என்ற தொனி நிலையே உருவாகும்.

# நிகழ்ச்சித்திட்ட அலுவலராக 272 பட்டதாரிகளுக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஒக்.21

வடக்கு மாகாணத்தில் நேர்முகப் பரீட் சை மூலம் தெரிவாகிய 272 பட்டதாரிகளுக்கான நியமன அதிகாரத்தை வடக்கு மாகாண ஆளுநர் இந்த மாத இறுதியில் வழங்குவார்.

இதனையடுத்து வடமாகாணப் பட்டதாரிகளுக்கு நவம்பர் மாத முற்பகுதியில் நிகழ்ச்சித்திட்ட அலுவலர்கள் நியமனம் வழங்கப்படும் என வடமாகாணப் பொது நிர்வாக பிரதிப் பிரதம செயலாளர் தி. இராசநாயகம் தெரிவித்தார்.

வடக்கு மாகாணப் பட்டதாரிகளுக்கான நியமனம் தொடர்ந்துஏன் காலதாமதமாகிறது எனக் கேட்டபோதே பொதுநிர்வாக பிரதிப் பிரதம செயலாளர் இவ்வாறு கூறினார்.

வடமாகாணப் பட்டதாரிகள் நியமனம் தொடர்பாக வடமாகாண ஆளுநர், திறைசேரி பிரதி செயலாளர் மற்றும் அரச சேவை ஆணைக்குழுவினர் ஆகியோரின் அனுமதிகளை எதிர்பார்த்துள்ளார்.

நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பொருத்தமான ஏற்பாடுகளின் கீழ் நியமனம் வழங்கப்படும்.

ஏனைய வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் நிலை குறித்தும் ஆளுநர் ஊடாக அரசுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது - என்றார் அவர். (த-302)

# இலங்கையில் உள்ள முதியோரில் 23 வீதமானோர் முழு வறுமையில்

யாழ்ப்பாணம், ஒக்.21

இலங்கையில் உள்ள முதியவர்களில் 23 வீதமான முதியவர்கள் முழு வறுமை நிலையில் உள்ளனர்.

இவர்களில் 15 ஆயிரம் பேருக்கு விழிவெண்படலம் அகற்றும் கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளவேண்டும்.

இதற்கான ஆரம்பக் கட்ட வேலையை முன்னெடுத்துள்ளேன்.

இவ்வாறு சமூகசேவைகள் அமைச்சர் பிலீஜ்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

முதியோர்களின் இன்றைய நிலை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

உலகில் முதுமை அடைவோர் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. அதிலும் இலங்கையும் ஒரு நாடாக மாறிவிட்டது.

முதியோர் பாதுகாக்கப்பட்டு அவர்களுக்கான அபிவிருத்தி முன்னெடுக்கப்படவேண்டும். அரச ஓய்வூதியம் அல்லது கொடுப்பனவு ஏதாவது பெறாத 80 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் விவரம் சமூக சேவைகள் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் ஊடாக திரட்டியுள்ளேன்.

இவ்வருடத்துக்குள் இந்தச்செயற்றிட்டம் முழுமைபெறும்.

இதன் பின்னர் அனைத்து முதியவர்களுக்கும் மூவாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவது குறித்துத் தீர்மானிக்கப்படும் - என்றார்.

(ம-302)

### யாழ். போதனா வைத்தியசாலை

# சிற்றூழியருக்கான சீருடைகள் இதுவரை கிடைக்கவில்லையாம்

யாழ்ப்பாணம், ஒக்..21

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கு 2010 ஆம் ஆண்டுக்கான சீருடை அதற்கான தையல் கூலி என்பன இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக செய்திகள் வெளியவதையடுத்து சகல ஊழியர்களிடமும் இருந்து நிலுவையில் உள்ள கணக்கு விவரங்கள் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் பதியப்பட்டன.

பதிவு நடைபெற்று பல மாதங்கள் ஆகிவிட்டன. எனினும் எவருக்கும் எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை என்று ஊழியர்கள் விசனமடைந்துள்ளனர்.

இதேவேளை இந்த வருடத்துக்கான சீருடை வழங்கப்பட்டிருந்த போது அதற்கான தையல் கூலியும் இதுவரை வழங்கப்படவில்லை என்று ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

தமக்குக் கிடைக்க வேண்டிய இந்தக் கொடுப்பனவுகளை விரைவில் பெற்றுத் தரும்படி அவர்கள் சம்மந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்த விடயம் சம்பந்தமாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜாவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது;

''ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் பற்றிய விவரங்கள் சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கொடுப்பனவுத் தொகை கிடைக்கப் பெற்றவுடன் ஊழியர்களுக்குரிய கொடுப் பனவுகள் வழங்கப்படும் என்றார். (ம-4-160-26)

## உனை நாள் பணிந்தா? முனை நாள் பணிந்தா?

ஞானக்கதிர்

தனக்குப் பால் தந்தவர் யார்? என்பதைத் தந்தைக்குச் சொல்கிறார் சம்பந்தர். தோட்டையுடைய செவியைக் கொண்டிருப்பவனாகி, இடப வாகனத்தின் மீது ஏறி, ஒப்பற்ற தூய வெண்பிறையைத் தலையில் சூடி, சுடுகாடு பெற்ற பொடியாகிய திருநீற்றைப் பூசியவாறு என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் யாரென்றால் இதழ்களையுடைய வெண்டாமரை மலரிலே தோன்றியவனாகிய பிரமதேவன் முன்பொரு காலத்திலே பணிந்து வழிபட்டு நிற்க, அவனுக்குத் திருவருள் நல்கிய சிறப்பையுடைய பிரமபுரத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானாகிய இவன் என விடை பகர்கின்றார்.

எல்லோருக்கும் தெரிந்த ''தோடுடைய செவியன்...'' என்ற தேவாரத்தின் ஊடாகச் சொல்லப்படுகின்ற செய்தி இது. ஆயினும் ''ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து'' என்று பாடுவதற்குப் பதிலாகப் பலர் ''உனை நாள் பணிந்து'' என்றே பாடுகின்றனர். இது தவறானது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இசைக் கச்சேரி யொன்றில் இந்திய ஜாம்பவான் எனப் புகழப்படுகின்ற பாடகர் ஒருவரும் உனைநாள் பணிந்து என்று பிழை விட்டுப் பாடியமையை அவதானிக்க முடிந்தது. இங்கு உனை நாள் பணிந்து எனப்பாடபேதம் ஏற்படவும் வாய்ப்பு இல்லை.

நம்மவரில் பலர் முதன்முதலாகக் கற்கின்ற தேவாரம் இதுவே. படிப்பதில் தவறு நேராமல் பார்த்துக் கொள்வோம்.

ச.லலீசன், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடமைப்பை பூர்த்தி செய்யாத பயனாளிகள் கொடுப்பனவை திரும்ப செலுத்த வேண்டிவரும்

## ஒக்ரோபர் 31 வரை காலக்கெடு

யாழ்ப்பாணம்,ஒக்.21

யாழ்.மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு வீடமைப்பு நிர்மாணத்திட்ட நிறுவனத்தால் (நேர்ப்) வீடுகள் அமைக்கத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் வீடுகள் அமைக்கத் தவறின் நிறுவனத்தால் வழங்கப்பட்ட தொகையை மீளச் செலுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

வீட்டு வேலைகளைப் பூர்த்தி செய்ய பயனாளிகளுக்கு பல தடவைகள் அவகாசங்கள் வழங்கப்பட்ட போதிலும் கட்டடப் பணிகள் பூர்த்தி செய்யாதவர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பமாக ஒக்ரோபர் 31ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப் பகுதிக்குள் வேலைகள் பூர்த்தி செய்யாதவர்கள் தாம் பெற்ற கொடுப்பனவுத் தொகையை நவம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் திருப்பிச் செலுத்த வேண்டுமெனவும், தவறின் இவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படலாமெனவும் நிறுவன பதில் திட்டப் பணிப்பாளர் க.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். இக்கால அவகாசத்துக்குள் வேலைகளைப் பூர்த்தி செய்தவர்கள் உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நவம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் உரிய கொடுப்பனவுத் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-207)



புத்தூர் மேற்கு கலைமதி முன்பள்ளி விளையாட்டு விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.கிழக்கு பிரதேச செயலக சிறுவர் நலன் மேம்பாட்டு அதிகாரி எஸ்.பத்மகுமார், புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் இ.கோகுலராகவன் ஆகியோர் மங்கல விளக்கேற்றுகின்றனர். (ம-11)

# சிறு குற்றச் செய்திகள்

யாழ்ப்பாணம்,ஒக்.21

வெவ்வேறு இடங்களில் கையடக்கத் தொலைபேசிகளில் ஆபாசப் படங்களைப் பார்த்தவண்ணமிருந்த இரண்டு பேரை கோப்பாய் பொலிஸார் கைதுசெய்து யாழ்.நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர் செய்தனர். இவர்கள் இருவருக்கும் ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கோப்பாய் பகுதியில் ஒருவருக்கும் கொக்குவில் பகுதியில் ஒருவருக்குமே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸார் அந்த இருவரையும் கைதுசெய்து நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர். இவர்களை விசாரித்த நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து ஒவ்வொருவருக்கும் தலா இரண்டாயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதித்ததுத் தீர்ப்பளித்தார். (ம-4)

* * *

உரிய ஆவணங்கள் இன்றி மதுபோதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற கோப்பாயைச் சேர்ந்த ஒருவர் யாழ்.நீதிமன்றில் 8 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார். கோப்பாய் பொலிஸ் பிரிவில் இவ்வாறு சென்றபோதே பொலிஸார் வழக்குப் பதிவு செய்து யாழ்.நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்ப்படுத்தினார். சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து இந்த அபராதம் வழங்கப்பட்டது.

சாரதி அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய குற்றத்துக்காக இரண்டாயிரத்து 500 ரூபாவும், வரிப்பத்திரமின்றி செலுத்திய குற்றத்துக்காக 500 ரூபாவும், காப்புறுதிப் பத்திரமின்றி செலுத்திய குற்றத்துக்காக ஆயிரத்து 500 ரூபாவும், மது போதையில் வாகனம் செலுத்திய குற்றத்துக்காக மூவாயிரத்து 500 ரூபாவும் அபராதமாகச் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-4)

* * *

தென்மராட்சி,ஒக்.21

சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதி ஆகிய இன்றி லொறியைச் செலுத்திய சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நேற்றுமுன்தினம் விசாரித்த நீதிவான் மா.கணேசராஜா எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து இரு குற்றங்களுக்குமாக 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார். அபராதத் தொகையைச் செலுத்தத்தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ம-207)

# அணைக்கட்டுகள் சேதம் கடல் நீர் உட்புகும் நிலை

கொழும்புத்துறை,ஒக்.21

அரியாலை கிழக்கு பிள்ளையார் கோவிலடிப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த கல் அணைக்கட்டு சேதமடைந்துள்ளது. இதனால் இந்தப் பகுதி விவசாய நிலங்களில் கடல்நீர் உட்புகும் அபாயம் தோன்றியுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். 16 வருடங்களுக்குமுன்னர் இருந்த அணைக்கட்டு இடப் பெயர்வின்போது முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

இதனாலேயே இந்த நிலை தோன்றியுள்ளதாகவும் கடந்த வருடம் இந்த வயல்நிலங்களில் செய்கை பண்ணப்பட்ட பயிர்கள் உவர் நீர் உட்புகுந்து கருகிப் போன தாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனமெடுத்து கடல் நீர் உட்புகுவதைத் தடுத்து விவசாயச் செய்கைக்கு உதவுமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-135)

# அரியாலை கிழக்குப் பகுதியில் கட்டாக்காலிகள் அதிகரிப்பு

## நெற்செய்கையாளர் அச்சம்

கொழும்புத்துறை, ஒக்.21

அரியாலை கிழக்குப் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதால் இந்தப் பகுதி விவசாயிகள் நெற் செய்கையை மேற்கொள்வதில் அச்சம் தெரிவிக்கின்றனர்.

கடந்த பெரும்போக நெற்செய்கையின்போது மக்கள் குடியமராத போதிலும் அரியாலை விவசாய சம்மேளனத்தின் முயற்சியால் நல்லூர் கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவியுடன் கட்டி, அரியாலை கிழக்குப் பகுதிகளில் முட்கம்பி வேலிகள் அமைத்து விவசாயம் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது இந்த வேலிகள் சேதமடைந்து அழிவுற்று விட்டது. அதன் காரணமாக கட்டாக்காலி மாடுகள் பயிரை அழிக்கும் நிலை ஏற்படலாம் என்ற அச்சத்தில் பல விவ சாயிகள் உள்ளனர்.

இதேவேளை, இந்த வருடம் நல்லூர் கமநல சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கட்டாக்காலி மாடுகள் கட்டடிப் பகுதியில் பிடிக்கப்பட்டன. ஆனால் கிழக்கு அரியாலையில் ஏராளமான கட்டாக்காலிகள் அலைந்து திரிவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் 750 பரப்பு வயல் நிலங்களில் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படாது காணப்படுகின்றன.

இடப் பெயர்வின்போது கைவிட்டுச் சென்ற மாடுகள் பெருக்கமடைந்துள்ளன. இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-135)

# ஒட்டுவெளிப் பகுதியில் நெற்செய்கைப் பணிகள்

தென்மராட்சி, ஒக்.21

11 வருடங்களின் பின்னர் எழுதுமட்டுவாழ் தெற்கு ஒட்டு வெளி வயல் பகுதியில் நெற்செய்கை மேற்கொள்வதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளை அந்தப் பகுதி நெற்செய்கையாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் உள்ள வாய்க்கால் நடை வரம்புடன் முட்கம்பி வேலி அமைப்பதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இந்த வயல்வெளியில் பல இடங்களில் வரம்புகள் இல்லாததால் வரம்புகள் அமைக்கும் பணியும் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பகுதி நெற்செய்கையாளர்களுக்கு விதைநெல் மற்றும் மானிய உரவகைகள் போன்றவற்றைப் பெற்றுக்கொடுக்க கமக்கார அமைப்பினர் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

# தனங்கிளப்பு கடல் நீரேரியுடன் மழைநீரை இணைக்க வடிகால்

தென்மராட்சி, ஒக்.21

சாவகச்சேரி நகர்ப்பகுதியிலிருந்து வெளியேறும் மழை நீரை தனங்கிளப்பு கடலேரியுடன் இணைக்க சாவ கச்சேரி நகரசபையினரும் இணைந்து தற்காலிக வடி காலை அமைத்து வருகின்றனர்.

இதுவரை காலமும் நகர்ப் பகுதி வடிகால் ஊடாக வரும் மழைநீர் பொது மைதானத்தை அண்டிய பகுதியில் தேங்கி நின்றது.

பொது மைதான தேவை கருதி 523 ஆவது கட்டளைப் பிரிவின் கீழ் இயங்கும் 7ஆவது விஜயபாகு படையணியினரால் வாகன மூலம் வடிகால் அமைக்கும் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இந்த தற்காலிக வடிகாலை நிரந்தர வடிகாலாக மாற்றுவதற்குரிய நிதி மூலங்கள் பற்றி ஆராய்ந்து வருவதாக நகரசபையினர் தெரவித்தனர். (ம-207)

# இரண்டு வருடங்களாகக் கவனிப்பின்றி வண்ணான்குளம் அகலப் பாலம்

வண்ணை, ஒக்.21

வண்ணை மேற்கு, பத்திர காளி அம்மன் வீதியில் அமைந்துள்ள வண்ணான்குளம் அகலப் பாலம் இரண்டு வருடங்களைத் தாண்டியும் இன்னமும் புனரமைக்கப்படாமல் உள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்பாக சேதமடைந்த வீதிப் பாலத்தினூடாக கொக்குவில் மேற்கு மற்றும் வண்ணார் பண்ணை மேற்கு, வடக்கு தெற்கு, ஆனைக்கோட்டை போன்ற பிரதேச மக்கள் போக்குவரத்துச் செய்து வருகின்றனர்.

பருவமழைக் காலங்களில் பெருக்கெடுத்துப் பாயும் வெள்ளம் நாவாந்துறைக் கடலுக்கு இந்த அகன்ற வடிகாலூடாகவே பாயும்.

மரம் தடிகளிலான தற்காலிக கடவையூடாகப் பயணிக்கும் மக்கள் மழை காலங்களில் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டி வரும் என்று கூறப்படுகின்றது.

உரிய அதிகாரிகளுக்கு இது சம்பந்தமாகப் பல தடவை அறிவிக்கப்பட்டும் அவர்களால் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டவில்லையென அந்தப் பகுதி கிராம சேவகர் கவலை தெரிவித்தார்.

இந்த வீதியூடாக மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர், ஆசிரியர்கள், வியாபாரிகளென நாளாந்தம் நூற்றுக் கணக்கானோர் பயணம் செய்கின்றனர். இந்த வீதி வடிகால் பாலம் திருத்தப்படாத நிலையில் வேறு பாதைகளில் நீண்டதூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லை பிரதான வீதியின் இருமருங்கும் பெரியளவில் பனம்விதை நடுகைத் திட்டம்

## சத்தியசாயி சமித்தி நிலையங்கள் ஆரம்பித்தன

வடமராட்சி, ஒக்.21

வல்லை வெளியில் பிரதான வீதியின் இரு மருங்கிலும் பெரியளவில் பனை நடுகைத் திட்டத்தைப் பருத்தித்துறை, யாழ்ப்பாணம் சத்தியசாயி சமித்தி நிலையங்கள் ஒன்றிணைந்து ஆரம்பித்துள்ளன.

கடந்த மாதம் 3 ஆயிரத்து 500 பனம் விதைகளும் இம் மாதம் 2 ஆயிரத்து 500 பனம் விதைகளுமாக இதுவரை 5 ஆயிரத்து 500 பனம் விதைகள் நடப்பட்டுள்ளன.

வல்லை வெளிப் பிரதேசத்தில் அச்சுவேலிச் சந்தி தொடக்கம் வல்லை முச்சந்தி வரையான பிரதான வீதியின் இரு மருங்கிலும் 5 ஆயிரத்து 500 பனம் விதைகளும் நட்டப்பட்டுள்ளன. தொடர்ந்து வல்லை முச் சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதியில் வல்லை உப்பு றோட் சந்தி வரையான பகுதியில் ஆயிரக் கணக்கான பனம் விதைகள் வீதியின் இரு மருங்கிலும் அடுத்து வரும் காலங்களில் நடப்படவுள்ளன.

இதேவேளை வடமராட்சி லயன்ஸ் கழகமும் வல்லை வெளியில் மாதிரி பனந்தோட்டம் ஒன்றை அமைக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்னர் வல்லை வீதியின் இரு மருங்கிலும் பனம் விதைகளை நடும் திட்டத்தை தொழிலதிபர் அமரர் மில்க்வைற் கனகராசா ஆரம்பித்து வைத்திருந்தார்.

நடப்பட்ட பனம் விதைகள் பனை மரமாக வளர்ந்து வரும் வேளையில் கடந்த கால யுத்தத்தின் போது அவை அழிவடைந்ததுடன் அழிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இருப்பினும் ஒரு சில பனை மரங்கள் வடலிகளாக வளர்ந்துள்ளதை வல்லைவெளி வீதியோரங்களில் ஆங்காங்கே காணக்கூடியதாக உள்ளது.

(மு-236)

# கரவெட்டி தபால் நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க இடம்

வடமராட்சி, ஒக்.21

கரவெட்டி தபால் நிலையத்துக்கு நிரந்தர தபால் நிலையக் கட்டடம் அமைக்க நெல்லியடி பழைய சந்தைப் பகுதியில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் கரவெட்டிப் பிரதேச சபைத் தலைவர் எஸ்.வியாகேசு தெரிவித்துள்ளார்.

நிரந்தரக் கட்டடம் எதுவும் இன்றி கரவெட்டி அரசடியில் தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கிவரும் கரவெட்டி தபால் நிலையத்துக்கு நெல்லியடியில் கேந்திர முக்கியத்துவம் கொண்ட பகுதிகளில் இடம் ஒன்றைப் பெற்றுத் தருமாறு பலராலும் கோரிக்கை விடப்பட்டிருந்தது.

வர்த்தக நிலையங்கள், வங்கிகள், சந்தை என்பன அமையப்பெற்ற நெல்லியடி நகர்ப் பகுதியில் ஒன்று கூடும் மக்கள் ஒரே இடத்தில் தபாற் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கோடு நெல்லியடி பழைய சந்தையில் ஒரு பகுதியை தபால் நிலையம் அமைக்க ஒதுக்கிக் கொடுக்க இருப்பதாக சபைத் தலைவர் எஸ்.வியாகேசு தெரிவித்தார்.

(ம-236)

# மானிப்பாய் சந்தையில் வெள்ளத்தால் வர்த்தகர், நுகர்வோர் நெருக்கடியில்

சண்டிலிப்பாய்,ஒக்.21

மானிப்பாய் சந்தைப் பகுதியில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதனால் மக்கள் நடமாட முடியாது பெரும் சிரமம் அடைகின்றனர்.

இங்கு வரும் மக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்கு பெரும் பிரயர்த்தனம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மானிப்பாய், சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி, சண்டிலிப்பாய் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய மானிப் பாய் கோவில்பற்றுப் பகுதியில் வசிக்கும் மக்களின் தேவைகளை மட்டுமல்ல அயல் கிராமங்களில் வசிக்கும் மக்களின் தேவைகளையும் நிறைவேற்றும் ஒரேயொரு சந்தை மானிப்பாய் மத்திய சந்தையாகும்.

ஒரு சிறிய பரப்பளவில் இயங்கி வரும் இச் சந்தையில் ஒரு பகுதியில் மரக்கறி வகைகளும் மற்றொரு பகுதியில் கடல் உணவுகளும் விற்கப்படுகின்றன. அத்துடன் அங்கு இறைச்சிக் கடைகளும், பல வர்த்தக நிலையங்களும் இயங்குகின்றன.

மானிப்பாய் பிரதான வீதியோரமாக இயங்கி வந்த இந்தப் பிரபல்யமான சந்தைக்கு பல ஆயிரக் கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர்.

இந்த நிலையில் மழை காலம் ஆரம்பமானதைத் தொடர்ந்து சந்தைப் பகுதியிலும் சந்தைக்குச் செல்லும் வாசல் பகுதியிலும் வெள்ளம் தேங்கி நிற்கிறது. இதனால் மக்கள் நடமாட முடியாமல் திண்டாடுகிறார்கள்.

இந்த விடயத்தில் பிரதேச சபை உறுப்பினர்கள் கவ்னம் எடுப்பார்களா என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

(ம-115)

# வல்வெட்டித்துறை நகரில் கழிவுகள் கொட்டியோர் கைது

யாழ்ப்பாணம்,ஒக்.21

வல்வெட்டித்துறை நகரப் பகுதியில் பிரதான வீதியில் கழிவுப் பொருள்களைக் கொட்டிய சந்தேகநபர் இருவர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இவர்கள் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். வாழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் இருவருக்கும் தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். இதேவேளை, பொது இடத் தில் மதுபானம் அருந்திய சந்தேகநபர் ஒருவரும் பருத்தித்துறைப் பகுதியில் வைத்து பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(ம-319)

# சந்தேகத்துக்கிடமாக வலி.வடக்கில் நடமாடிய 134 பேருக்கு விளக்கம்

வலி. வடக்கு, ஒக். 21

தெல்லிப்பழைப் பொலிஸாரால் கடந்த 12 ஆம் திகதிவரை வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய 134 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டனர். இவர்களில் 14 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

வலி. வடக்குப் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மக்கள் குடியமர அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் வீட்டின் சொந்தக்காரர்கள் தவிர்ந்த அந்தப் பகுதிகளுடன் தொடர்பு அற்றவர்களின் நடமாட்டங்களால் அப்பகுதிகளில் பொருள்கள் திருட்டுப் போவதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

பொது மக்களின் வீடுகளுக்குள் அத்துமீறிப் பிரவேசித்தல், அங்குள்ள பொருள்களைத் திருடிச் செல்லல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிராம அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் வழங்கிய தகவல்களைத் தொடர்ந்து தெல்லிப்பழை பொலிசார் இந்தப் பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.

இதன்போதே இந்த சந்தேகத்துக்கு இடமானவாகள் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இவர்களில் 14 பேருக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாக தெல்லிப்பழை பொலிஸ் நிலைய குற்றப் பொறுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

(ம-86)

# கடல்தொழில் படகுகள் கையளிப்பு

வடமராட்சி,ஒக்.21

கடந்தகால யுத்தத்தின் போது படையினரால் கைப்பற்றப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களின் படகுகள் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்டைக்காடு கப்பலேந்தி மாதா தேவாலயத்தில் வைத்து வடமராட்சி கிழக்குக் பிரதேசத்துக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரிகளால் இந்தப் படகுகள் உரியவர்களிடம் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வெற்றிலைக்கேணி கிராம அலுவலர் எஸ். அம்பிகைபாகன், கட்டைக்காடு கிராம அலுவலர் செபமாலை ஜூட் மற்றும் கடல் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

(ம-236)

# சிறுவர் முதியோர் தின நிகழ்வுகள் உடுவில் பிரதேச செயலகத்தில்




வலி. வடக்கு, ஒக்.21

வலி. தெற்கு உடுவில் பிதேச செயலகத்தில் சமூக சேவைகள் திணைக்களத்தால் சிறுவர், முதியோர், மாற்று ஆற்றல் உடையோர் தின நிகழ்வுகள் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் மங்கல விளக்கை யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ். மாவட்ட சிறுவர் நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்கள மாவட்ட அலுவலர் எஸ்.சிவகரன், சமூக சேவைகள் திணைக்கள மாவட்ட அலுவலர் ஏ.ஞானவேல், சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.இராஜமனேகரன், சுன்னாகம் சம்பத் வங்கி முகாமையாளர் எஸ். சுரேஸ்குமார், பிரதேச செயலாளர், உதவித் திட்டப் பணிப்பாளர் உட்பட மற்றும் பலர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து இந்தத் தினங்களை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரை கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. இதில் தாவடி விநாயகர் முன்பள்ளி, ஆர்க் மற்றும் வாழ்வகச் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-86)

# சாளம்பனில் அமைக்கப்பட்ட பாலத்தை அகற்ற முயன்றோர் அகப்பட்டனர்

தென்மராட்சி, ஒக்.21

கச்சாய் கடலேரியில் உள்ள சாளம்பன் தீவுக்குப் படையினர், பொதுமக்கள் ஆகியோர் அண்மையில் அமைக்கப்பட்ட பாலத்தை அகற்ற விஷமிகள் சிலர் மேற்கொண்ட முயற்சி படையினரால் முறியடிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீவில் உள்ள இந்து ஆலயத்துக்குச் செல்வதற்குப் பாலம் அமைத்துத் தருமாறு ஆலய அடியார்கள் படையினரிடம் கோரியதையடுத்து இரண்டு மாதங்களுக்கு முன்னர் படையினரும் பொதுமக்களும் இணைந்து தீவிலிருந்து சுமார் 150 மீற்றர் தூரத்துக்குப் பாலம் அமைத்திருந்தனர்.

தீவிலிருந்து படகுகள் சென்று நிறுத்தக்கூடிய தூரம் வரை தண்டவாளங்கள், மரக்குற்றிகள், பலகைகள் போன்றவற்றால் அமைக்கப்பட்டது.

இந்தப் பாலத்தை செவ்வாய்க்கிழமை படகுகளில் வந்த விஷமிகள் பாலத்தில் பொருத்தியிருந்த தண்டவாளம், பலகைகள் போன்றவற்றை அபகரித்துச் செல்லும் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் தகவல் அறிந்த படையினர் படகுகளில் சென்றனர்.

படையினர் வருவதைக் கண்ட விஷமிகள் படகுகளில் தப்பிச் செல்ல முயன்றனர். படையினர் சுற்றி வளைத்ததில் தண்டவாளம் ஏற்றிய நிலையில் குறித்த படகையும் அதில் பயணம் செய்தவர்களையும் பிடித்து கச்சாய் கற்கரைக்குக் கொண்டு வந்தனர். படகை அதில் இருந்தவர்களுடன் படையினர் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்களுக்கு எதிராக மிருசுவில் கெற்பேலிப் பகுதியில் இலங்கை புகையிரத திணைக்களத்துக்குச் சொந்தமான தண்டவாளம் வைத்திருந்ததாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய் தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் மா.கணேசராஜா குறித்த ஐந்து பேரையும் இன்றுவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஓய்வூதியம் பெறுவோரில் 20,000 பேர் வெளிநாடுகளில்

அரச ஓய்வூதியம் பெறும் சுமார் 20 ஆயிரம் பேர்வரை வெளிநாடுகளில் தங்கியிருப்பதாக ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக ஓய்வூதியம் வழங்கும் திட்டம் ஆழ அவதானிக்கப்பட்டு வருவதாக ஓய்வூதியத் திணைக்களத்தின் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் கே.ஏ.திலகரட்ன தெரிவித்தார்.

வெளிநாடு சென்றுள்ள நபர்கள் மீண்டும் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் ஓய்வூதியம் வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த இரு வருடங்களில் வெளிநாடுகளில் சென்று ஓய்வூதியம் பெறும் 3000 பேர் குறித்து எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் இலங்கைப் பணம் அநாவசியமாகச் செலவிடப்படுவதாகவும் எதிர்காலத்தில் ஓய்வூதியம் பெறும் நபர்களின் தகவல்களைப் பெற்று புதியமுறையின்கீழ் அதனைவழங்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# கைதான மாலைதீவு தீவிரவாதிக்கு பாக்.தீவிரவாதிகளுடன் தொடர்பா?

இலங்கையில் கைது செய்யப்பட்ட மாலைதீவு சுல்தான் பூங்கா குண்டுத் தாக்குதல் சூத்திர தாரிக்கும் பாகிஸ்தான் தீவிரவாதக் குழுக்களுக்கும் இடையே தொடர்புள்ளதா என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த 13 ஆம் திகதி பயா கல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட மாலைத் தீவு பிரஜையான 27 வயதுடைய மொஹ மட் அமீன் என்ற நபரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். கைது செய்யப்பட்டவரிடம் இருந்து போலியான மாலைத் தீவு மற்றும் பாகிஸ்தான் கடவுச் சீட்டுக்களை குற்றப் புலனாய்வுப்பிரிவினர்கைப்பற்றினர்.

மொஹமட் அமீனுக்கு இலங்கையில் வசிக்க உதவி புரிந்தவர்கள் யார் என்பது பற்றியும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்டவரை நாடுகடத்த மாலை தீவு அதிகாரிகள் இலங்கையுடன் கலந்துரையாடி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.


## சட்டவிரோதமாக சிகரெட்களை கடத்திய ஆசிரியர் கைது

சட்டவிரோதமாக இலங்கைக்கு சிகரெட் வகைகளைக் கடத்திவந்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 4.30 அளவில் சார்ஜாவில் இருந்து வந்த நபரே சட்டவிரோதமாகக் கடத்தி வந்த சிகரெட் தொகைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 31,600 சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அதன் இலங்கை பெறுமதி 6 லட்சம் ரூபாவுக்கும் அதிகம் எனவும் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் கெக்கிராவைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.



வண்ணை வெங்கடேஸ்வரப் பெருமாள் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற தேர்த் திருவிழாவில் சுவாமி தேரில் ஆரோகணித்து வீதி வலம் வருகிறார்.

## வடமாகாண உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சியும் வவுனியாவில்

யாழ்ப்பாணம், ஒக். 21

வடக்குமாகாண உள்ளூராட்சி மாநாடும் கண் காட்சியும் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் முதலாம் திகதி வரை இடம் பெறவுள்ளது.

உள்ளூராட்சி வரலாற்றில் என்றமில்லாதவாறான ஏற்பாடுகளின் கீழ் உள்ளூராட்சி மாநாடும் - கண்காட்சியும் வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

வடக்குமாகாண உள்ளூராட்சி நிவாரண அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய உள்ளூராட்சிச்சபைகள்இணைந்தே இதனை நடத்தவுள்ளன.

கடந்த உள் ளூராட்சி மாநாடும்- கண்காட்சியும் 2009 இல் யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெற்றமை குறிப் பிடத்தக்கது.

(வ-302)

# 5 தமிழர்கள் மீதான வழக்கில் நெதர்லாந்து மன்று இன்று தீர்ப்பு

## தீர்ப்பு இன்று வெளியாகும்

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஐவர் மீது நெதர்லாந்து நீதிமன்றில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு இன்றுடன் நிறைவு பெறவுள்ளது.

சர்வதேச தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புகளைப் பேணியமை, குண்டுத் தாக்குதல், கொலை என்பவற்றுக்கு துணைபோனமை, உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இந்தக்குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படுமாயின் ஐந்து சந்தேகநபர்களும் 20 வருடங்களுக்கு மேல் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டி வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கொலைகள் இடம்பெறுவதற்கு இந்த சந்தேக நபர்கள் தமிழ் இளைஞர்களை ஊக்குவித்தார் என்று அரச தரப்பு சட்டத்தரணி நெதர்லாந்து நீதி மன்றில் தெரிவித்துள்ளார்.

சுமார் 6 வாரங்களாக விசாரணை செய்யப்பட்டு வரும் வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். மத்திய கல்லூரி மாணவன்
**செல்வன் எட்மன் விதுஷன்**
2011ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கும்,பெற்றோருக்கும் பெருமை தேடித் தந்த எமது மகனைப் பாராட்டுவதோடு அத்துடன் கற்பித்தலுக்கு வழிகாட்டிய அதிபர், அனைத்து ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர் கல்வியில் மேலும் பல வெற்றிகளைப் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

24/1 கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

மனதார வாழ்த்துவோர்:
றெஜி.சுதா குடும்பத்தினர்.

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

கைதடி கிழக்கு கைதடியைச் சேர்ந்த
தயாரூபன் - பாமினி தம்பதியரின்
செல்வப் புதல்வன்
த. சண்முகேஷ்



தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (21.10.2011) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அப்பா, அம்மா, அப்பப்பா,அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, பெரியமாமா, சின்னமாமா, சின்னத்தை, (கொலன்ட்), மாமாமார், அத்தைமார், மச்சான்மார்,மச்சாள்மார் அண்ணாமார், அக்காமார் மற்றும் உறவினர்கள் அனைவரும் கைதடி வீரகத்திப் பிள்ளையார் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

கைதடி கிழக்கு,
கைதடி

குடும்பத்தினர்.

## பாடசாலைக்கு உபகரணங்கள்

காரைநகர், ஒக்.21

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தால் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்துக்கு பல்லூடக எறிகருவி, மடிக்கணினி, போட்டோ பிரதி இயந்திரம் என்பனவழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள டிஜிற்றல் நூலகத்தின் பயன்பாட்டுக்காகவே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(வ-250)

வேலணை மத்திய கல்லூரி
கல்விப்பணி நயப்பும் பாராட்டு விழாவும்



வேலணை மத்திய கல்லூரியில் 2002-2011 காலப்பகுதியில் முதல்வராகப் பணியாற்றி,கல்லூரி மாணவர்களின் பல்துறை ஆற்றல்களின் விருத்திக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிக் கல்லூரித்தாயை முந்தியிருக்கச் செய்த கல்லூரியின் பழைய மாணவன்
உயர்திரு. **பொன்னம்பலம்அருணகிரிநாதன்** அவர்களின்
(B.A(Hons), Dip.in Edu, M.Ed., SLPS-1,J.P)
கல்விப்பணி நயப்பும் பாராட்டு விழாவும் நடைபெற உள்ளது.

தலைமை:- உயர்திரு. சிவசாமி கிருபாகரன் (கல்லூரி முதல்வர்)
(B.Sc, Dip. in Edu., M.Ed, SLPS)
காலம்:- இன்று (21.10.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணி
இடம்:- சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி ஒன்று கூடல் மண்டபம்

மேற்படி விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஆளணியினர், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியளம் கேட்டீர்களா?

### நல்ல மனிதர்களை உருவாக்க...!

ஒக்ரோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. வாசிப்பு அருகி வருவதனாலேயே இத்தகைய மாதம் பிரகடனப்படுத்தப்பட்டு விழிப்புணர்வு ஊட்டப்படுகின்றது. பல இடங்களிலும் வாசிப்பு மாத செயற்திட்டங்கள் நூலகங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உள்ளூராட்சி மறுசீரமைப்பு வேலைத் திட்டங்களில் நூலகத்தின் பணி தனியே புத்தகங்களை இரவல் வழங்கிப் பெற்றுக் கொள்வதல்ல என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. பிரதேசத்தின் ஆவணக் களஞ்சியமாகவும், பிரதேசத்தின் வாசிப்பை மேம் படுத்தும் சமூகப் பொறுப்பு மிகு நிறுவனமாகவும் நூலகங் கள் அமைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, அர்ப் பணிப்புடன் ஒரு புறமும், ஏனோதானோ என மறுபுற முமாக வாசிப்பு மாத செயற்திட்டங்கள் நூலகங்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இன்று நூலகங்களை நோக்கி வாசகர்களை இழுப் பது பெரும் பிரச்சினையாகும். முன்னர் ஒருவரை உமது பொழுதுபோக்கு என்ன என்று கேட்டால் புத் தகம் படிப்பது, பந்தடிப்பது, முத்திரை சேகரிப்பது, செல் லப் பிராணிகளை வளர்ப்பது எனப் பதில் வரும். இன்றுள்ள பிள்ளையைக் கேட்டால் இதற்கு விடை சொல்ல அவன் சங்கடப்படுவான். இல்லையேல் தொலைக்காட்சி பார்த்தல், கணினியில் விளையாடுதல், கணினியில் நண்பர்களுடன் 'சற்றிங்' செய்தல் என்றே பதில் தருவான். எம்மத்தியில் இருந்த நல்ல பழக்கங்கள், ஆக்கபூர்வ மான பொழுதுபோக்கு அம்சங்கள் மெல்ல மெல்ல அகன்று வருகின்றன.

காலை எழுந்தவுடன் தனிப்பட்ட வகுப்பு, அதன் பின் பாடசாலை, அதையடுத்து 'ரியுசன்', தொடர்ந்து தனிப் பட்ட வகுப்பு எனச் செக்குமாடாய் ஒரே புத்தகத்தை அரைத்து, அரைத்துப் பரீட்சை மையத்தில் இயங்கும் பிள்ளையை வாசிக்கச் செய்வது எவ்வாறு? பாடப்புத் தகத்தில் வெறுப்படைந்த அப்பிள்ளை இன்னொரு புத்தகத்தை விரும்புமா? இவை இன்றுள்ள பிரதான கேள்விகள்.

வடமாகாண கல்வித் திணைக்களம் அண்மையில் ஒரு வேலைத்திட்டத்தைச் செய்தது. மாகாணத்திலுள்ள 12 வலயக் கல்வித் திணைக்களங்களில் இருந்து தரம் 8 இல் கல்வி கற்கும் 50 பிள்ளைகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு மூன்று நாள் வதிவிடப் பயிற்சியொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்த மாணவர்களுக்கு கவிதை, சிறுகதை, நாடகம், ஓவியம், ஆக்கம், இசை என அழகியல் சார்ந்த உணர்வுத் தொற்றலை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாக இருந்தது.

இவர்களின் ஈடுபாடு இங்கு மதிப்பிடப்பட்டது. உண்மையில் இவர்கள் அதீத ஆர்வத்துடன் இவற்றில் பங்குபற்றியதுடன் தமது படைப்புகளையும் வெளி யிட்டனர். இவர்கள் தூண்டப்பட்டனர். அதனால் துலங்கினர். மூன்று தினங்களுக்குள் சிறிய தூண்டலை ஏற்படுத்த முடியுமெனில் இருநூறு வரையான தினங் கள் நடைபெறும் பாடசாலைச் சூழலில் இதனை ஏன் ஏற்படுத்த முடியாது என்ற வினா இங்கு எழுந்தது.

சமூக மருத்துவப் பேராசிரியரான அமரர் நந்தி அவர்கள், ஆசிரியர்களுக்கு மிக அதிகளவில் வாசிப்புப் பட்டறைகளை ஏற்படுத்த வேண்டுமென பத்து வருடங் களுக்கு முன்னர் கூறியிருந்தார். அவரது கூற்று இப் போது மேலும் வலிவு பெற்றுள்ளது என்றே கூற வேண்டும். உயர் மட்டத்திலிருந்து மாணவ மட்டம் வரை கல்வித் துறையில் வாசிப்பு ஊக்குவிக்கப்பட வேண்டும். அத னூடாகவே சமூகத்தின் அறிவு மட்டத்தை உயர்த்தலாம். தனியே அறிவுழைப்பாளிகளை மட்டுமல்ல நல்ல மனிதர்களை உருவாக்க வேண்டிய சமூகக் கடமையும் எமக்குண்டு. எனவே, இன்றுள்ள ஆசிரியர்கள் மத்தி யில் அழகியல் உணர்வை ஊட்டுவதும், அதனை மதிப் பிட்டுக் கண்காணிப்பதும், அதன் வழியே மாணவர்களிடத் தில் சுவறப் பண்ணுவதுமே இன்றியமையாதவை.

பிரதேச நூலகங்களும் மாணவ வாசிப்பை ஆசிரியர் களூடாக ஊக்கப்படுத்த முனைய வேண்டும். எனவே, பிரதேச மட்டத்தில் வாசிப்புப் பட்டறைகளை ஒழுங்கு செய்வது மிகுந்த பயனைத் தரும். இன்றுள்ள படைப் பாளிகள், அறிஞர்களை உருவாக்கியவை நூலகங்களே! நாளைய படைப் பாளிகளையும் அறிஞர்களையும் உருவாக்க ஏதாவது செய்யுங்கள். அதுவே வாசிப்பு மாதத்தின் உயர் இலக்காக இருக்கட்டும்.

விழிச்சான் குஞ்சு.

# சந்திரிகா ஊமைபோல் பாசாங்கு செய்து சமாதான முயற்சியைக் குழப்பினார்

## அமெரிக்கத் தூதரகத் தகவல் 'விக்கிலீக்ஸில்' அம்பலம்

கொழும்பு,ஒக்.21

இலங்கை அரசின் பூர்வாங்க சமாதான நடவடிக்கைகளுக்கு சந்திரிகா குமாரதுங்கவும், அவரது ஆலோசகர்களும் குந்தகமாகச் செயல்படுகிறார்கள். வாய்பேச முடியாத மடந்தைகள் போல தம்மைக் காட்டிக்கொண்டு இந்தக் கைங்கரியத்தில் கச்சிதமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

-இவ்வாறு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வாஷிங்டனுக்கு அனுப்பியுள்ள இரகசிய கேபிளில் தெரிவித்துள்ளது. இந்த இரகசிய தகவல் 'விக்கி லீக்ஸ்' மூலமாக வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

அந்தக் காலத்தில் சந்திரிகா குமாரதுங்க, தமது புதல்வர் விமுக்தியை கொழும்பு றோயல் கல்லூரியில் சேர்க்க முயன்றுள்ளார். கல்வியமைச்சராக இருந்த ரணில் இதற்குப் பணம் கோரியுள்ளார். இதனால் சந்திரிகாவுக்கு ஏற்பட்ட மன வைராக்கியம் சமாதான நடவடிக்கைகளைக் குழப்பும் உந்துசக்தியாக உருவெடுத்துள்ளது என்றும் தூதரகம் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளார் என்றும் அதில் விவரிக்கப்பட்டுள்ளது. 2002ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி இந்த கேபிள் அஞ்சல் எழுதப்பட்டுள்ளது. தூதரகப் பிரதித் தலைமை அதிகாரி டபிள்யூ. லூவிஸ் அம்ஸிலெம், 'இரகசிய ஆவணம்' எனத் தலைப்பிட்டு இதை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த அஞ்சலில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தமது புதல்வர் விமுக்தியை றோயல் கல்லூரியில் அனுமதிக்க, அப்போதைய கல்வியமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும், அவரது உதவியாளரும் 25 ஆயிரம் ரூபாவைச் செலுத்துமாறு நிர்ப்பந்தித்தனர் என குமாரதுங்க குறிப்பிட்டுள்ளார். எனினும், இதற்கான ஆதாரங்களை அவர் முன்வைக்கவில்லை.

நான் அந்த லஞ்சத்தைக் கொடுக்கவுமில்லை. எனது மகன் அனுமதியைப் பெறவுமில்லை என்று அவர் விவரித்துள்ளார். இந்தியத் தூதர் குறித்தும் இந்த இரகசிய அஞ்சலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியத் தூதரக அரசியல் தலைவர் தரன்ஜித் சந்து எம்மிடம் இது குறித்துக் குறிப்பிடுகையில், குமாரதுங்க படுமோசமாக ரணில் விக்கிரமசிங்கவை விமர்சித்துள்ளார். பிரதமர் ரணில் நாடளாவிய ரீதியில் மதிக்கப்படுபவர். விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே அவர் ஊழல் பேர்வழி என்கின்றனர். ஜனாதிபதியின் விமர்சனம், அவரது ஸ்திரப்பாடற்ற நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் மற்றுமொரு அறிகுறி என்று பெரும்பாலானோர் கருதுகின்றனர்- என்றார்.

- இவ்வாறு இரகசிய அஞ்சலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-சி)



ஐக்கிய தேசிய கட்சி சார்பாக தெஹிவளை, கல்கிசை மாநகர சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

## சிறுத்தையைக் கொன்றவர்களுக்கு அபராதம்

கொழும்பு,ஒக்.21

சிறுத்தையைக் கொன்றவர்களுக்கு சுமார் நான்கு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்து தீர்ப்பு வழங்கினார் தம்புள்ளை மாஜிஸ்திரேட் நீதிவான் சமரி மஹேஷிகா தனஞ்சூரிய.

மின்னேரியா கிரித்தலே வனாந்தரத்தில் கடந்த ஜூலை 16 ஆம் திகதி சிறுத்தைப்புலி ஒன்றைக் கொன்ற குற்றத்திற்காக தம்புள்ளை பொலிஸாரால் ஆறுபேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இரண்டு லட்சம் ரூபா ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இந்தச் சிறுத்தையை சந்தேகநபர்கள் கொன்றிருந்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணைகளின் பின்னர் தீர்ப்பளித்த நீதிவான் சிறுத்தையைக் கொன்ற அறு பேருக்கும் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

(ச-சி)

## பாரத கொலை விசாரணையை மூடி மறைப்பதற்கு முயற்சி

### தயாசிறி ஜயசேகர எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு,ஒக்.21

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மூடி மறைப்பதற்கு முயற்சிக்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றம் சுமத்தியுள்ளார்.

கொலைச் சம்பவம் குறித்த விசாரணைகளை நடத்தி வந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். கொலையாளிகளைப் பாதுகாக்கும் நோக்கில் இவ்வாறு திடீர் இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

கொலன்னாவ நிலைமைகள் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்தேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல, துமிந்த சில்வா ஆகியோர் குற்றவாளிகள் அல்ல என்று எவ்வாறு கூற முடியும். அதனை பொலிஸ் விசாரணைகளின் பின்னரே தீர்மானிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா விஞ்ஞான குளம் பாடசாலையில் இராணுவத்தினரின் அத்துமீறிய செயற்பாடு

## ஆசிரியர், பெற்றோர் விசனம்

வவுனியா,ஒக்.21

வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட கரப்புக்குத்தி வீதியில் அமைந்துள்ள விஞ்ஞானகுளம் அ.த.க.பாடசாலையில் இராணுவத்தினரின் அத்து மீறிய செயற்பாடுகளால் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் விசனம் அடைந்துள்ளனர்.

இராணுவத்தினரின் செயற்பாடுகள் குறித்து இவர்கள் தெரிவிக்கையில்:

இந்தப் பாடசாலைக்கு அண்மையில் கரப்புக்குத்தி இராணுவ முகாம் அமைந்துள்ளது. அதில் கடமை புரியும் இராணுவத்தினர் அதற்கு முன்னால் உள்ள இந்தப் பாடசாலைக்குச் சொந்தமான கிணறு மற்றும் மலசல கூடங்களைப் பாவித்து வருகின்றமையால் பெரும் இடைஞ்சல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்த இராணுவத்தினர் கிணற்றில் குளித்துவிட்டு தமது உடைகளை கிணற்றின் கட்டிலேயே காய விடுகின்றனர். அந்த ஆடைகள் கிணற்றுக்குள் விழுந்து விடுவதால் குடிதண்ணீராகப் பாவிக்கும் கிணறு அசுத்தமடைகின்றது.

அதேபோல் பாடசாலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதும் மலசல கூடம், கிணறு போன்றவைகளை இராணுவத்தினர் பயன்படுத்துவதால் மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிய வருகின்றது.

மேலும் இந்தப் பாடசாலையில் அதிபர், ஓர் ஆசிரியை ஒரு தொண்டர் ஆசிரியை ஆகியோரே கடமையாற்றுகின்றனர்.

தொண்டர் ஆசிரியை குறிப்பிட்ட நேரம்வரை கடமையாற்றி விட்டு வீடு திரும்பும்போது இராணுவ வீரர் ஒருவர் பின் தொடர்ந்து வந்து தொல்லை கொடுப்பதாகவும் இதனால் அச்சத்துடனேயே அவர் பயணம் மேற்கொள்வதாகவும் தெரிய வருகின்றது.

இதுதொடர்பாக சின்னடம்பனிலுள்ள பொறுப்பதிகாரியிடம் 2 ஆம் தவணையில் பெற்றோர் முறையிட்டபோது அது தொடர்பாக விசாரணையை மேற்கொண்டு 3ஆம் தவணை ஆரம்பமாகும் வரை அந்த இராணுவ வீரரால் தொந்தரவுகள் ஏற்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால் தற்போது 3 ஆம் தவணை ஆரம்பித்துச் சில தினங்களிலேயே அந்த இராணுவ வீரர் முன்னர் போல் செயற்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (எ)

# கிளிநொச்சியில் சி.பி.ஆர் திட்டத்துக்கு சமூக சேவைகள் அமைச்சு நிதி

நாவற்குழி, ஒக்.21

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் சி.பி.ஆர் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான நிதியை சமூக சேவைகள் அமைச்சு அனுப்பி வைத்துள்ளது.

மாற்றுவலுவுள்ளோரைச் சமூக மட்டத்தில் வைத்துப் புனர்வாழ்வளிக்கும் சி.பி.ஆர் திட்டத்துக்கென தெரிவு செய்யப்பட்ட தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்கவென ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கிராம அலுவலர் மட்டத்தில் உருவாக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களின் செயற்பாடு வலுப்படுத்தலுக்கென 40000 ரூபாவும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

சமூக சேவைகள் அமைச்சு சி.பி.ஆர் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான இரு கட்டப்பயிற்சிகளை பிரதேச செயலகத்தின் இரு வெளிக்கள அதிகாரிகள் பெற்றுள்ளனர்.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 20 தொண்டர்களுக்கும் முதலில் 5 நாள் அடுத்து 3 நாள் என இரு கட்டப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது.

இதன் மூலம் மாற்று வலுவுள்ளோர் தொடர்பான புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வது தொடர்பான புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வது பற்றி தொண்டர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

8 நாள் பயிற்சி நெறியிலும், கலந்து கொள்ளும் தொண்டர்களுக்கு நாளாந்தம் 150 ரூபா வீதம் போக்குவரத்துக் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது.

போர், பிறப்பு, விபத்து போன்ற காரணங்களால் மாற்றுவலுவுள்ளவராகியோருக்கு சி.பி.ஆர் திட்டம் பயனுள்ளதாக அமையும். (எ-121)




*இலங்கை இந்துப் பேரவை கிளிநொச்சி புதுமுறிப்பு கிராமத்தில் வாழும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் 20 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளாக நீர் இறைக்கும் இயந்திரம், கோழிக்குஞ்சுகள், விவசாய உபகரணங்கள், விதைதானியங்கள் என்பன வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் இலங்கை இந்துப் பேரவைத் தலைவர் எஸ்.இராஜேந்திரா, செயலாளர் திருமதி சிவநந்தினி துரைசுவாமி, கணேசானந்தா மகா தேவா சுவாமிகள், தலைவர் தி.இராசநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர். (302)*

# ட்ராக்டர் வழங்கலில் மீண்டும் முல்லை. மாவட்டத்தில் பிரச்சினை

## ஆளுநர் மீது மக்கள் சீற்றம்

முல்லைத்தீவு,ஒக்.21

முல்லைத்தீவுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள வெலிஓயா பிரதேச செயலகத்துக்குட்பட்ட கமநல சேவைகள் திணைக்களத்துக்கு முல்லைத்தீவின் ஏனைய கமநல திணைக்களங்களிலிருந்து தலா ஒவ்வொரு உழவு இயந்திரங்களை வழங்குமாறு வடமாகாண ஆளுநர் உத்தரவிட்டதாக அந்தப் பகுதி விவசாயிகள் தன்னிடம் முறையிட்டுள்ளனர் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவ சக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

முல்லைத்தீவு மக்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள் என்ற வகையில் யுத்தத்தின் முன்னர் வீட்டுக்கு ஒரு உழவு இயந்திரங்களை வைத்திருந்தனர்.

எனினும் இறுதி யுத்தத்தில் அனைத்தையும் முள்ளிவாய்க்காலில் விட்டுவிட்டு உயிரைமட்டும் கொண்டு வந்து சேர்ந்தனர். தற்போது அவர்கள் மீளக் குடியமர்ந்த நிலையில் விவசாய நடவடிக்கைகளுக்குப் போதுமான உழவு இயந்திரங்கள் இல்லாதுள்ளது.

இந்த நிலையில் இந்தியாவால் வழங்கப்பட்ட உழவு இயந்திரங்களும் சீரான முறையில் வழங்கப்படாத நிலையில் முல்லைத்தீவு கமநல சேவைகள் திணைக்களத்திலுள்ள உழவு இயந்திரங்களையும் வெலி ஓயாவுக்கு வழங்குமாறு ஆளுநரால் உத்தரவிடப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மக்களின் விவசாயத் தேவைகளுக்குப் போதுமான உழவு இயந்திரங்கள் இல்லாத நிலையில் இவ்வாறான உத்தரவுகள் மீளக்குடியமர்ந்த விவசாயிகளைப் பெரிதும் பாதிப்படையச் செய்யும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

வெலிஓயா பகுதி விவசாயிகள் விவசாயம செய்வதற்கு நாம் தடையில்லை. ஆனால் அவர்களுக்கு தேவையான உழவு இயந்திரங்களை அரசு புதிதாக கொள்வனவு செய்து வழங்காமல் பாதிக்கப்பட்ட மக்களிடம் இருந்து பெறமுனைவது ஏற்றுக் கொள்ள முடியாததாகுமெனவும் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார். (எ)

# பெய்துவரும் அடைமழையால் புதுக்குடியிருப்பு மக்கள் பாதிப்பு

வவுனியா, ஒக்.21

தற்போது பெய்து வருகின்ற கன மழை காரணமாக வன் னியில் மீளக்குடியமர்ந்து தற் காலிக கொட்டகைகளில் வாழ்ந்து வருகின்ற மக்கள் பெரும் அசௌ கரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். புதிதாக மீளக் குடியமர்வு செய்யப்பட்ட உடையார்கட்டு, சுதந்திரபுரம், தேவி புரம், கோம் பாவில் உள்ளிட்ட பகுதிகளில் மக்கள் தகரம் மற் றும் தறப்பாள் கொட்டகைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

மீள்குடியமர்வு செய்யப்பட்டு ஒரு வருடமாகியும் இன்னமும் இம் மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

அரச, அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களின் வீடமைப்பு தொடர்பான செயற்பாடுகள் மிகவும் மந்த கதியிலேயே இடம் பெற்று வருகிறது.

எனவே வருகின்ற பருவ கால பெரும் மழைக்கு முன்பாக அந்த மக்களுக்கு நிரந்தர மாற்று ஏற்பாடுகளை செய்து கொடுக்க அதிகாரிகள் தவறும் பட்சத்தில் மழையின் காரணமாகவும் இடம் பெயர வேண்டிய சூழ்நிலை ஏற் படும் என அச்சம் தெரிவிக்கின்றனர். (எ)

# வவுனியாவில் இருந்து 50 பேர் இன நல்லுறவு வளர்க்க பதுளைக்கு

வவுனியா, ஒக்.21

வவுனியா மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஏற்பாடு செய்துள்ள தேசிய இனநல்லுறவு மேம்பாட்டு வேலைத் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 50 இளை ஞர், யுவதிகள் பதுளை மாவட்டத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் பெரும்பான்மை இனத்தவர்களின் வீடுகளில் தங்கியிருந்து அந்த மாவட்டத்தில் நடைபெறவுள்ள கலை, கலாசார மற் றும் விளையாட்டு, சிரமதானப் பணி என்பவற்றில் ஈடுபடுவதுடன் தலைமைத்துவப் பயிற்சியிலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவர்கள் 13 ஆம் திகதி முதல் நேற்று 20 ஆம் திகதி வரையிலான ஒரு வாரகாலத்துக்கு அங்கு தங்கியிருந்து பல்வேறு கிராமங்களில் நடைபெறவுள்ள வேலைத் திட்டங்களிலும் பங்கு கொள்ளவுள்ளதாக வவுனியா மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப்பணிப்பாளர் எம்.பி. சரத் சந்திரபால தெரிவித்தார்.

இதன்மூலம் இலங்கையில் உள்ள இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சிறந்த ஒரு எதிர்காலத்தை ஏற்படுத்த முடியும்.

போர் இடம்பெற்ற காலப் பகுதியில் இனங்களுக்கி டையே இடைவெளி காணப்பட்டுஇருந்தமையால் இவர்களுக் கிடையிலான ஒற்றுமை இல்லாமை இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# மல்லாவியில் இடிதாங்கி அமைக்க வர்த்தகர்கள் கூடித் தீர்மானம்

துணுக்காய்,ஒக்.21

மல்லாவியில் வர்த்தக சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப.3 மணிக்கு அனிஞ்சியன் குளம் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் வர்த்தக சங்கத் தலைவர் தி.தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அந்தத் தீர்மானங்கள் வருமாறு:

மல்லாவிப் பகுதியில் தற்போது பெய்துவரும் மழையால் பல தொற்றுநோய்கள் ஏற்படாவண்ணம் வாரம் தோறும் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு நகரைச் சுத்தமாக வைத்திருக்க கவனம் செலுத்தல்.

அத்துடன் மல்லாவி நகர்ப் பகுதியில் இடிதாங்கி ஒன்றை அமைத்து மின்னல் இடித் தாக்கத்தில் இருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்ளுதல், இந்தப் பிரதேசத்தில் உள்ள சிறு வீதிகளை சீர்படுத்தல், முக்கிய இடங்களுக்குத் தெருவிளக்குகள் பொருத்துதல் போன்ற விடயங்கள் இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டன.

தற்போது பெய்து வரும் மழையை நம்பி பெரும்போக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளதால் கால்நடை வளர்ப்பவர்கள் தங்களின் பண்ணைகளில் கால்நடைகளைக் கட்டுப்படுத்தல், ஞாயிற்றுக் கிழமைகளில் வர்த்தக நிலையங்களை மூடி விடுமுறை நாளாகக் கடைப்பிடித்தல் அதனை மீறுவோர் வர்த்தக சங்கத்தின் நடைமுறைக்குக் கட்டுப்படாதவர்களாகக் கருதப்படுவார் என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் எதிர்வரும் காலங்களில் மக்களோடு சேர்ந்து அபிவிருத்தியை முன்னெடுத்தல், அத்துடன் இந்தப் பகுதியில் உள்ள வர்த்தகர்கள் அனைவரும் தங்கள் கடைகளுக்கு உரிமம் பெற்று சுகாதார திணைக் களத்தின் அனுமதி என்பன பெற்றிருக்க வேண்டும் எனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் துணுக்காய் உதவி அரச அதிபர் எஸ்.குணபாலன் துணுக்காய் பிரதேச சபை செயலாளர் மு.கிருஸ்ண. நவரத்தினராஜா தவிசாளர் வீ.இராசரெத்தினம் மல்லாவி காவல்துறைப் பொறுப்பதிகாரி ஆகியோர் கருத்துக்களை வழங்கினர். (எ-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் அரச அதிபர் திடீரென இடமாற்றம்

## யாழ். அரச அலுவலகங்களில் பரபரப்பு



மன்னார் மாவட்ட அரச அதிபராக கடமையாற்றி வந்த நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்ற உத்தரவுக்கு உள்ளாகியிருக்கிறார் என்று தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

மன்னார் அரச அதிபர் மொனராகல மாவட்ட அரச அதிபராக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டிருப்பதாகவும், அதேவேளை மொனராகல மாவட்டத்தின் அரச அதிபர் மன்னார் மாவுட்டத்துக்கு நியமனம் பெற்றிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

இந்த வருடம் ஆரம்ப காலப் பகுதியில் மன்னார் மாவட்ட அரச அதிபராக நியமனம் பெற்ற நா. வேதநாயகன் தமது கடமையினை பொறுப் பேற்று மிக குறுகிய காலப் பகுதியினுள் திடீர் இடமாற்றத்துக்கு உள்ளாகியிருக்கின்றமை மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

இவர் தமது பதவியினை பொறுப்பேற்றுக்கொண்ட போது மன்னார் மாவட்டம் பெரிய வெள்ளப்பெருக்குக்கு முகம் கொடுத்திருந்த போதும் அன்றைய அவசரகால நிலையினை எதிர் கொண்டு வெற்றிகரமான நிவாரணப் பணிகளை மக்கள் மத்தியில் முன்னெடுத்து மாவட்டத்தின் நன்மதிப்பினையும் பாராட்டினையும் பெற்றிருந்தார்.

அதேவேளை வடமாகாண விளையாட்டுப்போட்டியின்ன மன்னார் மாவட்டத்தில் வெற்றிகரமாக நடத்தி முடித்து விளையாட்டுத்துறையினரதும் மக்களினதும் நன்மதிப்பினையும் பெற்றிருந்தார்.

பல தடவைகள் ஒத்திவைக்கப்பட்டு பின் இம்மாதம் மன்னாரில் கோலாகலமாக நடந்து முடிந்த வட மாகாண தமிழ் இலக்கிய பெரு விழாவின் ஏற்பாட்டுக்குழு தலைவராகப் பொறுப்பேற்று அந்நிகழ்வினையும் திறம்பட நடத்தி முடித்து வட மாகாண ஆளுநர், வர்த்தக கைத்தொழில்துறை அமைச்சர் உள்ளிட்ட பல்வேறு தரப்பட்டோரினதும் பாராட்டினையும் பெற்றுக்கொண்டதுடன் மன்னார் மாவட்டத்தில் மிகக் குறுகிய காலத்தில் ஆற்றிய பெரும் சேவைக்கான கௌரவத்தினையும் பெற்றுக் கொண்டார்.

இந்த நிலையிலேயே தற்போது அரச அதிபர் வேதநாயகனுக்கு திடீர் இடமாற்ற உத்தரவு கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் அதன் காரணமாக அவர் கொழும்பிலுள்ள உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அவசரமாக அழைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

இதனிடையே அரச அதிபரின் வெற்றிடத்துக்கு மொனறாகல மாவட்டத்தில் அரச அதிபராக கடமையாற்றிவருபவர் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் மன்னார் மாவட்ட அரச அதிபராக நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மொனராகல மாவட்டத்தின் அரச அதிபருக்கு வழங்கப்பட்டிருக்கும் உடனடி இடமாற்றத்தின் எதிரொலியாகவே மன்னார் மாவட்டத்தின் அரச அதிபர் உட்டனடியாக கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க மன்னார் பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலராகக் கடமையாற்றி வந்த சத்தியஜோதி மடு உதவி அரச அதிபராகவும், மடு உதவி அரச அதிபராக கடமையாற்றிய திரேஸ்குமார் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கும் இடமாற்றலாகி சென்றிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

# திருக்கேதீச்சரம் கோயில் புனரமைப்புக்கு இந்திய அரசு ரூ. 32 கோடி வழங்கியது

மன்னார், ஒக்.21

மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள திருக்கேதீச்சரம் கோயிலின் புனருத்தாரணப் பணிக்காக 32 கோடி இலங்கை ரூபாவை அளிக்க இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இலங்கையின் வட பகுதியின் மன்னார் மாவட்டத்தில் உள்ள வரலாற்றுத் தலம் திருக்கேதீஸ்வரக் கோயில் ஆகும். இந்தக் கோயில் கி.பி.7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த ஞான சம்பந்தரால் பாடல் பெற்றது. இந்த ஆலயத்தின் புனருத்தாரணப் பணி, தொல்பொருள்துறை மற்றும் கட்டட மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியால் இணைந்து நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியா - இலங்கை இடையேயான ஒப்பந்தங்களின்படி இந்தக் கோயில் திருப்பணிக்கு இந்திய அரசு 32 கோடியே 60 லட்சம் இலங்கை ரூபா அளிப்பதாக ஒப்புதல் அளித்துள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வட பகுதியில் இயல்பு வாழ்க்கை திரும்புவதற்காக இந்திய அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு நலத்திட்டங்களில் இதுவும் ஒன்று எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# சிறுவர் ஆச்சிரமத்துக்கு வழங்கிய 100 ஏக்கர் காணியில் நெல்விதைப்பு

## ஆச்சிரமத்தின் சிறுவர் இல்லத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.21

பூநகரியில் மகாதேவா சிறுவர் ஆச்சிரமத்துக்கு வழங்கப்பட்ட 100 ஏக்கர் நெற்காணியில் பெரும்போக விதைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் மூலம் சிறந்த அறுவடையை எதிர்வரும் பெப்பிரவரி மாதங்களில் பெறமுடியும் என மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத் தலைவர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மீசாலை யூரைச் சேர்ந்த ஒருவர் எமக்கு வழங்கிய 100 ஏக்கர் நெல்வயல் இந்தவருடம் பண்படுத்தப்பட்டு நெல் விதைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கிடைக்கும் பயன் மகா தேவா சிறுவர் இல்ல மாணவர்களுக்கு முழுமையாகப் பயன்படும். இதற்காக எமது முழு வளத்தினையும் முழுமையாகப் பிரயோகித்துள்ளோம் என்றார். (எ-302)

# பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

முல்லைத்தீவு,ஒக்.21

முல்லைத்தீவு மாங்குளம் மகாவித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. சாதாரணதர, உயர்தரப் பரீட்சைக்குக்குத் தோற்றிய மாணவர்களுக்கான வாழ்க்கைத் தொழில் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சிநெறியில் கடந்த மூன்று வருடங்களுக்குள் ஜி.சி.ஈ. சாதாரண தர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் இணைந்து கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் ஒட்டுவேலை, கட்டுமானப் பயிற்சி மற்றும் குழாய் பொருத்துதல் தையல் பயிற்சி என்பன உள்ளடங்கவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியில் இணைய விரும்புவோர் தமது விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து இன்று வெள்ளிக் கிழமை மாங்குளம் மகா விததியாலய அதிபர் ப.இரவீந்திரநாதனிடம் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஈஸ்வரிபுரத்தில் மீளக்குடியமர்ந்தோர் அடிப்படை வசதிகள் இன்றிச் சிரமம்

வவுனியா,ஒக்.21

வவுனியா ஈஸ்வரிபுரம் கிராமத்தில் அண்மையில் மீளக்குடியமர்ந்த சுமார் 48 குடும்பங்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

வீட்டுவசதி, மலசல கூடம், நீர், மின்சார வசதி மற்றும் ஏனைய வசதிகள் எதுவுமின்றி மிகவும் கஷ்டமான நிலையில் தங்கள் வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

அத்தோடு இவர்கள் பூந்தோட்டம் நலன்புரி முகாமிலிருந்து அண்மையில் ஈஸ்வரிபுரம் கிராமத்தில் குடியமர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடத்தில் அக்கறை எடுத்து அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு மீளக்குடியமர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# தண்டமும் சிறைத் தண்டனையும்

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் கஞ்சா வைத்திருந்த நபரொருவருக்குப் பத்தாயிரம் ரூபா தண்டமும் இருமாத கால கட்டாயச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் ஐந்து கிராம் கஞ்சா வைத்திருந்த ஒருவரைக் கிளி நொச்சிப் பொலிஸார் கைது செய்து கடந்த 17 ஆம் திகதி கிளி நொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினார்.

இதனை விசாரித்த நீதிவான் இந்த நபருக்குப் பத்தாயிரம் ரூபா அபராதமும் இருமாதகால கட்டாயச் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.(க-6)

# கணினி வழங்கப்பட்டது

மல்லாவி, யோகபுரம் மகாவித்தியாலயத்துக்கு மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை மேம்படுத்தவென கல்வி அமைச்சால் கணினி ஒன்று கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழங்கப்பட் டுள்ளது.

இதனால் அந்தப் பாடசாலை மாணவர்கள் கணினி அறிவைப் பெற முடியும் என நம்பிக்கை தெரிவிக்கின்றனர். (எ-415)

# வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி பல சவால்களுடன் இயங்குகிறது

## கல்லூரியின் பீடாதிபதி தெரிவிப்பு

வவுனியா, ஒக்.21

கல்வியியலாளர் வெற்றிடங்களும் கல்விசாரா ஆளணியின் வெற்றிடமும் பற்றாக்குறையாகவுள்ளது. பல்வேறு சவாலுடனேயே கல்லூரியை இயங்கச் செய்ய வேண்டியுள்ளது என வவுனியா கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி க.பேணாட் தெரிவித்தார்.

கல்லூரியின்18ஆவது ஆண்டு விழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் ஆசிரிய கல்வியியலாளர்கள் 28 பேர் நிரந்தரமாக இருக்கின்றனர். இவர்களில் 8 பேர் கல்வி அமைச்சின் தற்காலிக ஏற்பாட்டில் வேறு ஆசிரியர் கல்வி நிறுவனங்களில் கடமையாற்றி வருகின்றனர். அடுத்த ஆண்டு புதிய மாணவர் அனுமதியோடு வ்வுனியா தேசிய கல்வியியல் க்ல்லூரி மீண்டும் முழு அளவில் செயலாற்றத் தொடங்கவுள்ளதால் தற்காலிக இடங்களில் பணியாற்றும் எட்டு ஆசிரிய கல்வியியலாளர்களும் மீண்டும் வவுனியா கல்வியியல் கல்லூரிக்குப் பணிக்கு திரும்புவர் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

அத்துடன் வர்த்தக பாட நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளமையினால் அந்தப் பாடநெறிக்கும் இரண்டாம் மொழி சிங்களத்துக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரிக்கு 2009, 2010 ஆம் ஆண்டுகளில் இடம் பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்தமையினால் ஏற்பட்ட நிலை யாவரும் அறிந்த ஒன்று. எனினும் எனது இடையுறாத முயற்சியின் பலனாக கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட 11 மில்லியன் நிதியை பயன்படுத்தி கல்விப் பகுதிக்கான விரிவுரை மண்டபங்கள் இரண்டு மாணவர் விடுதிகளும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் என்ரிப் திட்டத்தினால் 5 மில்லியன் ஒதுக்கப்பட்டு மூன்று மாணவர் விடுதி புனரமைக்கப்பட்டன. இதன் காரணமாக 2011 ஆம் ஆண்டில் புதிய மாணவர்களை உள்வாங்க முடிந்தபோதிலும் புனரமைக்கப்பட்டு வரும் விடுதிகள் முழுமை பெறும்பட்சத்தில் அடுத்த ஆண்டுகளில் மாணவர்கள் தொகை அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாணவர் விடுதி வசதிகளில் ஏற்பட்ட இடையூறுகள் திருத்த வேலைகள் முடிவுறாமை காரணமாக 2011 ஆம் ஆண்டில் 160 மாணவர்களுக்குள் கல்வி அமைச்சு மட்டுப்படுத்திக் கொண்டது. அத்தோடு 2007, 2008, 2009 ஆம் ஆண்டுகளில் வன்னிப்பகுதியில் இருந்து அனுமதி பெற்றுக் கொள்ள முடியாமல் போன மாணவர்களுமாக 2011 ஆம் ஆண்டில் மொத்தம் 165 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

போதிய விடுதி வசதியின்மையால் வரையறுக்கப்பட்ட மாணவர் தொகையின் காரணமாக கல்லூரியின் பயிற்சி நெறிகளும் மட்டுப்படுத்தப்பட்டன. குறிப்பாக கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் தற் காலிகமாக நிறுத்தப்பட்டமையினால் அந்த மாணவர்கள் இந்தப் பாடநெறிகள் இடம் பெறும் ஏனைய தேசிய கல்வியியல் கல்லூரிகளின் அனுமதியுடன் இங்கு சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதே போல் தகவல் தொழில்நுட்ப பாடநெறியும் உணவு தொழில்நுட்ப பாடநெறியும் ஏனைய கல்வியியல் கல்லூரியில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதன் காரணமாக 6 பாடநெறிகளை 2011 ஆம் ஆண்டு மீள் ஆரம்பிக்கப்பட முடியாது போனது எனவும், தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வவுனியா பொது வைத்தியசாலையின் அத்தியட்சகர் ரி.சத்தியமூர்த்தி, கல்லூரியின் உப பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள், பாடசாலை அதிபர்கள் எனபலரும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தில் ஏற்படும் பிரச்சினைகளைக் கண்டறிவதற்கு

குறிப்பிட்ட தளத்தைத் திறக்கும் போது இணையப்பக்கம் தெரிவதில்லை, காரணம் இணையத்திலோ அல்லது இணையப்பக்கத்திலோ ஏதாவது பிரச்சினை இருக்கும். இதைக் கண்டுபிடிப்பதற்குள் போதும்போதும் என்று ஆகிவிடும். இணைய இணைப்பிலா அல்லது இணையத்தளத்திலா பிரச்சினை என்று கண்டுபிடிப்பதில் சிக்கல் இருக்கிறது. ஆனால் இனி எளிதாகப் பிரச்சினையைக் கண்டுபிடிக்க ஒரு தளம் உதவுகிறது.

இணைய சேவையை வழங்கும் நிறுவனத்திற்குத் தொடர்பு கொண்டு குறிப்பிட்ட இணையதளங்கள் தெரிவதில்லை என்றால் சில நேரங்களில் அவர்களின் ' பயர்வோல்' அல்லது ஏதாவது தடை செய்து வைத்திருக்கலாம்.

அப்படிப்பட்ட நேரத்தில் அவர்கள் சொல்லும் பதில் இந்த இணையத் தளம் தற்போது வேலை செய்யவில்லை என்பதுதான். ஆனால் பிரச்சினை எதில் என்று கண்டுபிடிக்க எமக்கு இந்தத்தளம் உதவுகிறது.

இந்தத் தளத்துக்குச் சென்றவுடன் தோன்றும் விண்டோவில் இருக்கும் கட்டத்திற்குள் Enter பொத்தானை சொடுக்கினால் போதும் அடுத்த நொடியிலே பதிலைச் சொல்லி விடுகிறது இந்தத் தளம்.

இணையத் தளம் சரியாக வேலை செய்கிறது என்றால் UP என்றும் இணையத்தளத்தில் ஏதாவது பிரச்சினை என்றால் Down என்றும் எமக்கு காட்டும். இதிலிருந்தே எளிதாக பிரச்சினையைக் கண்டுகொள்ளலாம். இதற்கான தீர்வைக் காண்பதற்காக http://doj.me/ என்னும் தளத்துக்குச் செல்லலாம்.





# மனித முகத்துக்கு மாற்றீடு

## ஜப்பானியர்களின் புதிய கண்டுபிடிப்பு!

உங்கள் முகத்தை நேரடியாகக் கண்ணாடி இல்லாமல் நீங்கள் பார்க்கலாம் இப்போது. உங்கள் முகம் போலவே அச்சு உருவாக்கித் தருகின்றனர் ஜப்பானிய விஞ்ஞானிகள். இதுவரை நீங்கள் பாத்திராத உங்களை இனி நீங்கள் பாத்திடலாம் , 2,500 ஜப்பானிய ஜென் எனும் கட்டணத்தில் . முதலில் முகத்தை டிஜிட்டல் முறையில் புகைப்படமெடுத்து பின்னர் அதற்கு முப்பரிமாணத் தோன்றத்தை வழங்குவதற்காக கிளே மற்றும் மெழுகு போன்ற பதார்த்தங்களால் உருவாக்குகின்றனர். இந்தச் செயன்முறை (3DPF 3 Dimensional Photo Form) என அழைக்கப்படுகிறது , இந்த நிறுவனத்தை இப்போது எல்லோரும் மனித நகலெடுப்பான் ( human photocopier ) என்று அழைக்கின்றனர். இது தொடர்பான மேலதிக விவரங்களை இந்த நிறுவனத்தின் உத்தியோக பூர்வ facebook Real&f ( http://www.facebook.com/REAL.f.jp) பக்கத்தில் பெறலாம்.

# பென்டிரைவ்களின் ஆயுள்காலத்தை அதிகரிப்பதற்கு

நாம் பயன்படுத்தும் USB பென்டிரைவ்களின் தகவல்களைப் பாதுகாக்கவும், பென்டிரைவ்களின் ஆயுளை அதிகரிக்கவும் ஒரு மென்பொருள் உதவி புரிகிறது.

நல்ல நிறுவனத்தின் பென்டிரைவ் தான் பயன்படுத்துகிறேன், ஆனால் சில நேரங்களில் இந்த பென்டிரைவில் சேமிக்கப்படும் தகவல்களை எடுக்க முடியாதபடி பிழையான தகவல் வருகிறது என்று சொல்லும் அனைவருக்கும் உதவும் வகையில் இந்த மென்பொருள் அமைந்துள்ளது.

இந்தத்தளத்திற்குச் சென்று Setup(install wizard) என்பதை சொடுக்கி மென் பொருளை இலவசமாகத் தரவிறக்கலாம். Portable ஆக வேண்டும் என்றால் Portable என்பதை சொடுக்கி மென்பொருளைத் தரவிறக்கவும். தரவிறக்கிய மென்பொருளை இயக்கியதும் கணினியில் டாஸ்க் பாரில் USB Alert ஐகான் வரும்.

எமது கணினியில் பென்டிரைவைச் செருகியதும் எமக்கு Alert Message வரும். அடுத்து பென்டிரைவில் தகவல்களைச் சேமித்து முடித்தபின் இந்த USB alert IP ஐ சொடுக்கி Eject என்ற பொத்தானை அழுத்தி பென்டிரைவை வெளியே எடுக்கலாம். இப்படி எடுப்பதால் பென்டிரைவின் ஆயுள்காலமும் தகவலும் பாதுகாப்பாகச் சேமிக்கப் பட்டிருக்கும். இணையத்தள முகவரி http://www.usbalert.nl/usbalert/download.php

# கணினியில் சிக்கிய இறுவட்டை வெளியே எடுப்பதற்கு



நீங்கள் அடிக்கடி இறுவட்டைப் பயன்படுத்துபவராக இருந்தால் இந்த சூழ்நிலையில் நீங்கள் என்றாவது சிக்கி இருப்பீர்கள். உங்கள் இறுவட்டு கணினியின் இறுவட்டு அறையில் இருந்து வெளியே வராமல் உங்களை மோசமான நிலையில் சிக்க வைக்கும். எத்தனை முறை இறுவட்டு டிரைவின் முக்கியமான பட்டனை அழுத்தினாலும் அப்படியே டிரைவ் வெளியே வராமல் இருக்கும். இந்த சூழ்நிலையில் என்ன செய்தால் இறுவட்டு டிரைவ் திறக்கப்பட்டு இறுவட்டை வெளியே எடுக்க முடியும் என்பதனைப் பார்க்கலாம்.

முதலில் இறுவட்டு டிரைவ் திறக்கப்பட்டு இறுவட்டு இருக்கும் அந்த பிளாஸ்டிக் ட்ரே வெளியே நீண்டு வரவில்லை என்றால் கவலைப் படாதீர்கள். இந்த சூழ்நிலையை சமாளித்து இறுவட்டை கீழ்க்காணும் வழிகளைக் கையாண்டு வெளியே எடுக்கலாம்.

வழி 1: மை கொம்பியூட்டர் ஐகானில் கிளிக் செய்யுங்கள். உங்கள் டெஸ்க்டொப்பில் இந்த ஐகான் இல்லை என்றால் நிச்சயம் ஆரம்ப மெனுவில் இருக்கும். இதனைத் திறந்தவுடன் உங்கள் கணினியின் டிரைவ்கள் அனைத்தும் காட்டப்படும்.

இதில் Devices with removable என்ற பிரிவில் இறுவட்டின் படத்துடன் ஒரு ஐகான் இருக்கும். அல்லது சிக்கிக் கொண்ட இறுவட்டில் ஏதேனும் ஒரு நிறுவனம் தந்துள்ள பக்கேஜ் என்றால் நிறுவனம் தந்துள்ள ஐகானுடன் அந்த டிரைவ் காட்டப்படும்.

இதன் மீது ரைட் கிளிக் செய்திடுங்கள். கிடைக்கும் மெனுவில் Eject என்ற பிரிவில் கிளிக் செய்திடுங்கள். உங்கள் இறுவட்டு டிரைவில் உள்ள எஜெக்ட் பட்டன் தேய்ந்து போய் நீங்கள் அழுத்துகையில் அதன் செயற்பாடு மேற்கொள்ளப்படாத சூழ்நிலையில் இந்த வழி செயற்படும். இதற்கும் இறுவட்டு டிரைவ் திறக்கவில்லை என்றால் அடுத்த வழியைப் பார்க்கலாம்.

வழி 2: பேப்பர் கிளிப் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். (ஜெம் கிளிப் என்றும் சிலர் இதனை அழைக்கின்றனர்) அதன் ஒரு முனையைப் பிரித்து நீட்டுங்கள். இறுவட்டு டிரைவின் முக்கியமான பட்டன் அருகே சிறிய துளை இருப்பதைக் காணுங்கள். நிச்சயம் இதுவரை நீங்கள் இதனைக் கண்டு கொள்ளாமல் இருந்திருப்பீர்கள். இப்போது நிச்சயம் இதன் உதவி வேண்டியதிருக்கிறது. இந்தத் துளையில் பிரித்த பேப்பர் கிளிப்பின் சிறிய கம்பியை மெதுவாக உள்ளே செலுத்தவும். சிறிது உள்ளே செலுத்தியவுடன் அது ஒரு இடத்திற்கு மேல் செல்லாது.

இந்த இடத்தில் சிறிய அளவில், மிகச்சிறிய அளவில் அழுத்தம் கொடுக்கவும். எஜெக்ட் செய்யும் போது இயங்கும் இன்டர்னல் லாக் உள்ள இடத்தில் இந்த அழுத்தம் கிடைப்பதால் டிரைவின் கதவு திறக்கும்.

உடனே இறுவட்டை எடுத்துவிட்டு மீண்டும் டிரைவின் கதவினை மூடவும். மறக்காமல் பேப்பர் கிளிப்பை எடுத்துவிடவும். ஏனென்றால் பலர் [illegible] வெளியே வந்த சந்தோஷத்தில் பேப்பர் கிளிப்பைச் செருகி [illegible] வைத்துவிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் அனைவரும் சம உரிமையுடன் வாழவேண்டும் என்பதே எனது இலக்கு

## மட்டக்களப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஒக்.21

இலங்கையில் தமிழ் மக்கள் சம உரிமையுடனும் வாழ்வாதார மேம்பாட்டுடனும் வாழ வேண்டும் என்பதே எனது இலக்காகும். மக்கள் தொடர்ந்தும் அடிமைகளாக இருப்பதற்கு நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்.

இவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டத்தினை நேற்றுமுன்தினம் புதன் கிழமை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

கொழும்பை மட்டும் மையப் படுத்தியிருந்த அபிவிருத்திகளை வடக்கில் கிளிநொச்சி, கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை என்று அனைத்துப் பிரதேசங்களுக்கும் விரிவுபடுத்தி மக்களை மேம்பாட்டையச் செய்து கிராமம், நகரம், மாவட்டம் என்று முழு நாட்டையும் அபிவிருத்தி செய்வதே எமது நோக்கமாகும். இதற்காக மக்கள் அனைவரும்



ஒத்துழைப்புகளைத் தரும் போதுதான் அது மேலும் திறனுள்ளதாகக் கொண்டு செல்லப் படும்- என்றார். (ச)

# கால் விரலுக்கு மருந்து கட்டப்போனவர் இரண்டு கைவிரல்களை இழந்த பரிதாபம்!

கண்டி, ஒக். 20

கால் பெருவிரலில் ஏற்பட்ட சிறுகாயத்துக்கு மருந்து கட்டப் போனவருக்கு வலது கையின் இரண்டு விரல்களை இழக்க வேண்டிய பரிதாபநிலை ஏற்பட்டுள்ளது.

கலேன்பிந்துனுவெவ, நாவற்குளத்தைச் சேர்ந்த எஸ். லக்ஷ்மன் சிறிசேன என்ற நபரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இந்நபர் தெரிவித்ததாவது:

கடந்த சனிக்கிழமை புல் வெட்டும் இயந்திரம் மூலம் எனது வீட்டுத் தோட்டத்தில் புல் வெட்டிக்கொண்டிருந்தேன். அப்போது இயந்திரத்தில் வலது கால் பெருவிரல் சிக்கியதால் சிறுகாயம் ஏற்பட்டது. நான் உடனடியாக யக்கல, ஹுருலுவெவ கிராம வைத்தியசாலைக்குச் சென்றபோது தாதியொருவர் எனது கால் பெருவிரலுக்கு மருந்து கட்டிவிட்டு, இடது புயத்தில் ஊசி மருந்தொன்றை ஏற்றினார். ஓரிரு நிமிடங்களில் எனக்குத் தாங்கமுடியாத வேதனை ஏற்பட்டதால் கதறினேன்.

அதன்பின் வைத்தியர் ஒருவர் வந்து என்னைப் பரிசோதித்து விட்டு, வலது புயத்தில் ஊசி மருந்தைச் செலுத்திவிட்டு என்னை அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பினார். அங்கு என்னை பரிசோதித்த வைத்தியர் தவறான ஊசிமருந்து ஏற்றப்பட்டுள்ளது எனக்கூறியதுடன், அதன் விளைவாக எனது வலது கையில் சுட்டுவிரலையும், மோதிர விரலையும் துண்டிக்க வேண்டியுள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்த சம்பவம் பற்றி விசாரணை நடத்தி எனக்கு நியாயம் வழங்குமாறு வடமேல் மாகாண சுகாதார அமைச்சர், மாகாண சுகாதாரப் பணிப்பாளர், பிரதேச சுகாதாரசேவை பணிப்பாளர் ஆகியோருக்கு மனு கொடுத்துள்ளேன்- என்றார்.

இந்தச் சம்பவம் பற்றி வடமேல் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டபிள்யூ. அத்தபத்துவுடன் தொடர்புகொண்ட போது தனக்கு இந்த முறைப்பாடு கிடைத்துள்ளது எனவும் அதுபற்றிய விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# கிழக்கு தமிழ் இலக்கிய விழாவில் சிறப்பு மலர் வெளியிடப்படவில்லை

## இலக்கியவாதிகள் அதிருப்தி

மூதூர், ஒக்.21

கிழக்கு மாகாணத் தமிழ் இலக்கிய விழாவின்போது வழமையாக சிறப்புமலர் வெளியிடப்படுகின்ற போதிலும், மட்டக்களப்பில் நடைபெற்ற இந்த ஆண்டுக்கான இலக்கிய விழாவில் சிறப்பு மலர் வெளியிடப்படவில்லை. சிறப்பு மலர் அச்சடிக்கப்பட்டு வெளியிடுவதற்குத் தயாராக இருந்த போதிலும் அது வெளியிடப்படவில்லை.

அதேவேளை, 3 ஆம் நாள் நிறைவுவிழா பேராசிரியர் கா.சிவத்தம்பி அரங்கில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், விழா புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அரங்கில் நடைபெற்றது. இந்தத் திடீர் மாற்றம் குறித்துப் பார்வையாளர்கள் பலர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (ச)

# கம்பளையில் 106 பேருக்கு டெங்கு

கடந்த செப்டெம்பர் மாதம் வரை கம்பளை நகர எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் 106 டெங்கு நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளார்கள் என்று கம்பளை சுகாதார வைத்திய அதிகாரி திருமதி எஸ்.ஜயசுந்தர தெரிவித்தார்.

நகரசபை எல்லைக்குள் சேரும் கழிவுப் பொருள்கள் சரியாக அகற்றப்படாமையே இதற்குக் காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# அபிவிருத்திக்குழுத் தலைவராக பசீர்

ஏறாவூர் பிரதேச ஒருங்கிணைப்பு அபிவிருத்திக் குழுவின் தலைவராக உள்நாட்டு வர்த்தகக் கூட்டுறவுப் பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூத் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான இந்த நியமனம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டுள்ளது. ஏறாவூர் பிரதேச ஒருங்கிணைப்பு அபிவிருத்திக்குழுவின் தலைவராகப் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா ஏற்கனவே இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வாழ்வாதாரத்தை உயர்த்த நடவடிக்கை

தியத்தலாவை. ஒக். 21

பதுளை மாவட்டத்தில் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று பதுளை மாவட்டச் செயலாளர் ரோஹண கீர்த்தி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் சம்பந்தமான கருத்தரங்கும், பயிற்சியும் வழங்கப்படவுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார். (ச)



திருகோணமலை மாவட்ட செயலகத்தின் புதிய கட்டடத்தினை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைத்துள்ளார். இந்நிகழ்வில் மூத்த அமைச்சர் அதாவுட செனவிரத்ன, பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# வீட்டு ஜன்னலை உடைத்து பண்டாரவளையில் திருட்டு

பண்டாரவளை,ஒக்.21

பண்டாரவளை, திக்கராவ பிரதேசத்தில் மூடியிருந்த வீட்டு ஜன்னலை உடைத்து பெறுமதியான பித்தளைப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று பண்டாரவளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வீட்டு உரிமையாளரான ஆசிரியை தனது கணவர் மரணமானதையடுத்து பக்கத்து வீட்டாரைத் தனது வீட்டைக் கண்காணிக்குமாறு கூறி விட்டு உறவினர் வீட்டில் தங்கியுள்ளார். மாதம் ஒரு முறை தன் வீட்டைப் பார்க்க அவர் வந்து செல்வார்.

வழமைபோல் தன் வீட்டைப் பார்க்க கடந்த திங்கட்கிழமை வந்தபோது, ஜன்னல் உடைக்கப்பட்டு வீட்டிலுள்ள ஆறடி உயரமான பித்தளைக் குத்து விளக்கு உட்பட பல பெறுமதியான பித்தளைப் பொருள்களும், உடைமைகளும் திருடப்பட்டுள்ளன என்று அந்த ஆசிரியை பண்டாரவளைப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (ச)

# கடமை நேரத்தில் மதுமயக்கம்; சப் இன்ஸ்பெக்டர் பணிநீக்கம்

கண்டி,ஒக்.21

கண்டி, தொடம்வெல ஸ்ரீநாத தேவாலயத்தின் பெரஹரவின் போது மது போதையில் பணி புரிந்த சப் இன்ஸ்பெக்டர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபரின் பணிப்புரையின் பேரில் மத்திய மாகாணத்தின் பிரதி பொலிஸ்மா அதிபர் என்.பீ.அம்பன்வெலயின் தலைமையில் நடத்தப்பட்ட விசாரணையின் பின் இவர் பணிநீக்கம் செய்யப்பட்டார்.

பெரஹர கடந்த 12ஆம் திகதி இரவு நடந்த போது, குறிப்பிட்ட சப் இன்ஸ்பெக்டர் மது போதையில் இருந்தார் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அம்பன்வெலக்குக் கிடைத்த தகவலை அடுத்தே அவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். (ச-5)

# நிலுவைச் சம்பளத்தை இன்று வழங்க ஆடைத்தொழிற்சாலைக்கு நீதிமன்றம் உத்தரவு

டிக்கோயா, ஒக். 21

டிக்கோயா டிரென் செட்டர்ஸ் ஆடைத் தொழிற்சாலை நிர்வாகம் இன்று வெள்ளிக்கிழமைக்கு முன் ஊழியர்களின் நிலுவைச் சம்பளத்தை வழங்க வேண்டும் என்று ஹற்றன் நீதிவான் சந்துன் விதான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்தத் தொழிற்சாலை ஊழியர்களுக்குக் கடந்த இரண்டு மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை. இதனைக் கண்டித்து ஊழியர்கள் கடந்த இரண்டு வாரத்தில் பல்வேறு போராட்டங்களை நடத்தினர். அதனையடுத்து, ஹற்றன் பொலிஸார் தலையிட்டு இரு தரப்பினருடனும் பேச்சு நடத்தினர்.

கடந்த 14 ஆம் திகதிக்கு முன்பு நிலுவைச் சம்பளத்தை வழங்க நிர்வாகம் இணக்கம் தெரிவித்தபோதும் அது இது வரை வழங்கப்படவில்லை.

ஊழியர்கள் ஹற்றன் - டிக்கோயா வீதியை மறித்து ஒன்றரை மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பொலிஸார் மற்றும் அதிகாரிகளும் தலையிட்டு ஆர்ப்பாட்டத்தை தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

அதன்பின் பொலிஸார் ஹற்றன் நீதிமன்றில் வழக்கொன்றைத் தொடர்ந்தனர். கடந்த 17ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது தொழிற்சாலையின் உரிமையாளரான பெண் நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

அவரை 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 2 லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் விடுதலை செய்த நீதிவான் நிலுவைச் சம்பளம் இன்று வியாழக்கிழமைக்கு முன் வழங்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டார். (ச)

# விவசாயிகளுக்கு பயிர்விதை வகைகள் விநியோகம்

தியத்தலாவை, ஒக். 21

மொனராகலை மாவட்டத்தில் சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் நலன்கருதி சிறந்த விதை வகைகளை ஊவா மாகாண விவசாயத் திணைக்களம் விநியோகித்து வருகின்றது.

இந்தத் திட்டத்திற்கென ஊவா மாகாணசபை ரூபா 20 லட்சத்தை ஒதுக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
இழுபறியாக இருந்த கடன் மிகுதிகள் இன்று திடீரென வரலாம். குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். குதர்க்கமாக பேசும் சிலரால் கோபம், எரிச்சல் அடையலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து, மன வருத்தம் அடைவீர்கள். வாகனங்களில் நீண்ட தூர பயணங்கள் மேற்கொள்ளலாம். சக ஊழியர் விடுமுறையால் வேலைப்பளு கூடும்.

**இடபம்:**
நண்பர்களுக்காக, உறவினர்களுக்காக தாராளமாகச் செலவு செய்வீர்கள். உங்களை வேண்டாதவர்களாக நினைத்தவர்களே இப்போது அன்போடு நடந்து கொள்வர். அதிக செலவாகும் என நினைத்த காரியம் ஒன்று, குறைந்த செலவில் முடிவுக்கு வரும். தந்தை வழியில் சிறு உதவிகள் கிடைக்கலாம். புதுமையான அனுபவங்களைப் பெறலாம்.

**மிதுனம்:**
மதிப்பு, மரியாதைக்கு பாதிப்பு வரலாம். வழக்கமான பணிகளில் சிறு தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சிலருக்கு வாக்குக் கொடுத்து விட்டு, அதை கடைசி நேரத்தில் காப்பாற்ற முடியாமல் போகலாம். கனவுகளால் மனக் குழப்பங்கள் அதிகரிக்கலாம். பிள்ளைகள் வழியில் கணிசமான பொருள் செலவுகளைச் சந்திக்கலாம்.

**கடகம்:**
எதையும் துச்சமாக நினைத்துச் செயற்படுவீர்கள். அரசியல்வாதிகள் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். வெளிநாட்டுத் தொடர்பு உடையவர்கள் நல்ல செய்திகளைக் கேட்கலாம். ஆரம்பித்த காரியங்கள் துளிர்விட்டு வளரும் நாள். தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வரலாம். பழைய சம்பவம் ஒன்றை நினைத்துப் பார்ப்பீர்கள்.

**சிங்கம்:**
ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்க வேண்டும். ஆசைகள் நிறைவேறுவதில் சிறு தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். தொழில் நிமித்தமாக சிலர் வெளியூர் பயணம் செல்லலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள்.

**கன்னி:**
ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். நீண்ட நாள்களாக சந்திக்காத உறவினர் ஒருவரை எதேச்சையாகச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டும். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். நீண்ட தூரப் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். நண்பர்கள் வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம்.

**துலாம்:**
தொழில் ரீதியாக ஏற்பட்ட தாமத நிலைமை அகன்று, சுறுசுறுப்புக் கூடும். வசதி படைத்தவர்கள் சிலர் உங்களுக்குக் கைகொடுத்து உதவலாம். தொழில் போட்டிகள் விலகி நிம்மதி பெறுவீர்கள். பொழுதுபோக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். மாமன், மைத்துனர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். சிறு பணவரவுகளைப் பெறலாம்.

**விருச்சிகம்:**
செய்ய நினைத்த காரியம் ஒன்றில் மாற்றங்களைச் செய்யலாம். உறவினர்களால் சிறு பிரச்னைகள் உருவாகலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற துடிப்போடு செயல்படுவீர்கள். தந்தை தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்லவும். உறவினர்களுக்குத் தெரியாத விடயம் ஒன்றை நீங்கள் சொல்லலாம். பெரிய மனிதர் ஆசிகளைப் பெறுவீர்கள்.

**தனுசு:**
வீண் பேச்சுகள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். நண்பர்கள் சிலரின் மனம் நோகும் வகையில் பேசுவீர்கள். சிலர் உங்கள் தலையில் வேலைகளைச் சுமத்தி விட்டு தப்பித்துக் கொள்வர். செய்ய மறந்த வேலை ஒன்றால் தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். பயணங்கள் எரிச்சல், தொந்தரவு தருவதாக அமையலாம். எதிலும் கவனம் அவசியம்.

**மகரம்:**
உங்களுக்கு பணம் மற்றும் பொருளுதவி செய்வதாகச் சொன்னவர்கள் சரியான நேரத்தில் கை கொடுத்து உதவுவர். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். தொழில்புரிவோர் சில நடவடிக்கைகள் மூலம் கூடுதல் ஆதாயம் பெறலாம். பெண்கள், மனைவி வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். கொண்டாட்டம் உண்டு.

**கும்பம்:**
கடன் பிரச்சினை ஒன்றைத் தீர்த்து வைப்பீர்கள். திட்டமிட்ட வேலைகளை திட்டமிட்ட நேரத்தில் செய்து முடிப்பீர்கள். குடும்ப உறுப்பினர்களுடன் சந்தோஷமாக பொழுதைக் கழிப்பீர்கள். வீட்டை அழகாக வைத்திருப்பதில் நாட்டம் செல்லும். வெளியூர்களில் இருக்கும் சிலர் உங்களைத் தொடர்பு கொண்டு உதவி கேட்கலாம்.

**மீனம்:**
உங்களிடம் உதவி பெற்ற ஒருவரே. உங்களுக்கு போட்டியாகச் செயற்படலாம். வீண் அலைச்சல்களால் வயிறு உபாதைகளுக்கு ஆள்படலாம். உல்லாசமாகப் பேசி சில விடயங்களில் வம்பில் மாட்டிக் கொள்வீர்கள். உறவினர் அல்லது நண்பர் ஒருவருடன் வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். தர்ம, புண்ணிய காரியம் செய்வீர்கள்.

# இறுகி ...
# சர்வதேச...

தி ஆஸ்திரேலியன் இணையத்தளத்தில் கோல்டன் வைஸ் எழுதிய...
கோல்டன் வைஸ், இலங்கையில் போர் நடந்தபோது ஐ.நாவின்...
பிரதிநிதியாகக் கடமையாற்றி...

இலங்கையில் உள்நாட்டுப் போரானது நிறைவுக்கு வந்து இரு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், இதில் பங்கு கொண்ட இரு தரப்பினரும் பொதுமக்களுக்கு எதிரான தீவிர போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ளமை புதிய சாட்சியம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் 25 ஆண்டுகளாகத் தொடரப்பட்ட உள்நாட்டுப் போரானது 2009இல் நிறைவுக்கு வந்தது. இலங்கைப் படைகள் தமிழ்ப் புலிகள் மீது நடத்திய இறுதிக்கட்டப் போரின் போது பல்லாயிரக்கணக்கான தமிழ்ப் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். பெண்கள், சிறுவர்கள், முதியோர் எனப் பலதரப்பட்ட மக்களைப் புலிகள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தினர். இதேவேளை இலங்கை அரச படைகள் மேற்கொண்ட தாக்குதல்களில் பல ஆயிரக்கணக்கான தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பான சில சாட்சியங்களைச் கடந்த வாரம் ஆஸ்திரேலிய அதிகாரிகளிடம் அந்நாட்டின் அனைத்துலக நீதித்துறை ஆணைக்குழு கையளித்தது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது தமது குடும்பங்கள் மற்றும் நண்பர்களை இழந்த சில தமிழ் மக்களின் நேரடிச் சாட்சியங்கள் உள்ளடங்கலாகத் தம்மிடம் கிடைக்கப்பெற்ற சாட்சியங்களின் சுருக்கக் குறிப்பை நீதித்துறை ஆணைக்குழு, ஆஸ்திரேலிய அதிகாரிகளிடம் கையளித்துள்ளது. இதில் சில சாட்சியங்களை வழங்கியவர்கள் ஆஸ்திரேலியர்கள் அல்லது இந்த நாட்டில் வதிபவர்களாவர்.

இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது கொல்லப்பட்ட பொதுமக்களுடன் தொடர்புபட்ட சம்பவங்களைக் கோடிட்டுக் காட்டுவதாக அமைந்துள்ள அறிக்கையையே தற்போது ஆஸ்திரேலிய சட்டத்தரணிகள் வழங்கியுள்ளனர்.

மருத்துவமனைகள் மீதான தாக்குதல்கள், ஒரு குறிப்பட்ட பிரதேசத்திற்குள் மக்களைச் செல்லுமாறு அறிவித்துவிட்டு அங்கிருந்த பொதுமக்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட வான்தாக்குதல்கள், கொத்துக் குண்டுகள் மற்றும் பொஸ்பரஸ் குண்டுகளைக் கொண்டு பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியமை, படுகொலைகள், சித்திரவதைகள், காணமற்போனவர்கள், உணவு மற்றும் மருத்துவ வசதிகள் மறுக்கப்பட்டமை போன்ற பல சம்பவங்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.


பொதுமக்களின் விசாரணைக்கான பொதுநலவாய இயக்குநர், ஆஸ்திரேலிய தேசிய காவற்துறை ஆகியவற்றிடம் இது தொடர்பாகக் குறிப்பாக மூவர் தொடர்பாக உடனடி விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என ஆஸ்திரேலியாவின் நீதித்துறை ஆணைக்குழு தனது அறிக்கையில் வலியுறுத்திக் கூறியுள்ளது.

முதலாவதாக ஆஸ்திரேலியாவுக்கான இலங்கையின் தூதராகப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள திசார சமரசிங்கவை விசாரணை செய்யுமாறு அதில் கேட்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இறுதிப் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் அரசால் போரற்ற பகுதிகள் என அறிவிப்புச் செய்யப்பட்ட இடங்களில் தஞ்சம் புகுந்திருந்த மக்கள் மீது அப்போது கடற்படை அதிகாரியாகவிருந்த திசார சமரசிங்கவின் கப்பல்கள் தாக்குதல்களை மேற்கொண்டன.

இது போன்றதொரு போர்க்குற்றச்சாட்டானது ஜேர்மனியின் தூதராக நியமிக்கப்பட்டிருந்த இலங்கை இராணுவ அதிகாரி மீதும் சுமத்தப்பட்டு அவர் உடனடியாகப் பதவி விலக்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இரண்டாவதாக ஆஸ்திரேலிய மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளினதும் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டுள்ள பாலித ஹோகன்னவை



விசாரிக்குமாறு ஆஸ்திரேலிய சட்டவாளர்கள், தமது நாட்டு அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் கோரியுள்ளனர்.

பாலித ஹோகன்ன முன்னர் ஆஸ்திரேலியாவுக்கான இலங்கையின் வெளிநாட்டுத் தூதராகவும், தற்போது நியூயோர்க்கில் உள்ள ஐ.நாவுக்கான இலங்கைத் தூதராகவும் கடமையாற்றுகின்றார். இறுதிப் போரின்போது படையினரிடம் சரணடைந்த ஒரு தொகுதியினரை சித்திரவதைக்கு உள்ளாக்கிப் படுகொலை செய்வதற்கு பாலித ஹோகன்ன பொறுப்பாக இருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.




இவ்வா...
தான் எவ...
வில்லை ...
சாட்டை ப...
மூன்றா...
வேண்டிய...
மஹிந்த ரா...
டுள்ளது. ...
இலங்கை ...
படையினா...
கான அ...
வேண்டிய...
விரைவ...
நடைபெற...
களின் த...
யில், எலிச...
தமிழ்ப்...
குற்றச்சாட்...
2009இல் ...
போரின்ே...
அழிக்கப்...
போர்க் கு...
இல்லை. ...
ணுவப் ப...
வையாகத் ...
விசாரணை...
போர் ந...
தன்னால் ...
தனது கட்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரும்
# சப் பிடி

வெஸ் எழுதிய கட்டுரையின் தமிழ் மொழியாக்கம் இது.
து ஐ.நாவின் கொழும்புக்கான நிரந்தர வதிவிடப்
டமையாற்றியவர்.



எந்தவொரு வெளிநாட்டு ஊடகவியலாளர்களும் இப்பிரதேசங்களில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பது தொடர்பாக முழுமையான அறிக்கைகளை வெளியிட முடியவில்லை.

பொஸ்னியாவின் படுகொலைக் களங்களைப் போலல்லாது, இலங்கையின் போர் வலயம் தொடர்பாகச் சுதந்திரமான, சுயாதீன சாட்சியங்களைப் பெற்றுக் கொள்ளமுடியவில்லை.

எனவே போர் வலயத்தில் அகப்பட்டுக் கொண்ட மக்களிடம் பெற்றுக் கொள்கின்ற சாட்சியங்கள் உண்மையில் அங்கு என்ன நடந்ததென்பதைத் தெரியப்படுத்துவனவாகவும், மிகச் சிறந்த சாட்சியங்களாகவும் அமையும். ஆணைக்குழு போன்ற குழுக்களுடன் தற்போதே அவர்கள் கதைக்க ஆரம்பித்துள்ளனர்.

இலங்கை அரசு தனது உள்நாட்டுப் பிரச்சினையைத் தானே தீர்த்துக் கொள்வதாகத் தெரிவித்த போதும் அது தனது வாக்குறுதியை இன்னமும் நிறைவேற்றாமையால் அனைத்துலக சமூகம் தனது பொறுமையை இழந்துவருகின்றது.

நன்னடத்தை தொடர்பான விடயங்கள் ஒருபுறமிருக்க, அனைத்துலக சமூ கத்தின் சட்டங்கள், உடன்படிக்கைகள் மதிக்கப்பட வேண்டும் என இந்த உலகமானது எதிர்பார்த்து நிற்கின்றது.

உள்நாட்டுப் போர் நிறைவுக்கு வந்ததிலிருந்து, இலங்கை அரசானது தன் மீது சுமத்தப்பட்டுவரும் போர்க் குற்றச்சாட்டுக்களை ஏற்க மறுத்து வருவதுடன் அதற்கான சரியான பதிலளிப்பதிதையும் தாமதப்படுத்தி வருகின்றது. ஒரு பொதுமகன் இறந்த தற்குக் கூடத் தமது படையினர் பொறுப்பல்லர் என இலங்கையின் வெளிநாட்டுத் தூதர்கள் கடந்த சில ஆண்டுகளாகப் பதிலளித்து வருகின்றனர்.

போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சாட்சியங்கள் தற்போது அதிகரித்து வருவதால் இதற்கான பொறுப்பை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என அழுத்தங்கள் அதிகரிக்கப்பட்ட நிலையில், தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்களில் ஒரு சில பொதுமக்களின் இழப்புக்குத் தமது படையினர் காரணமாக இருக்கலாம் எனத் தற்போது இலங்கைத் தரப்பு ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆஸ்திரேலியாவானது அதன் சொந்த நாட்டில் நடைமுறையில் உள்ள சட்ட திட்டங்கள் மற்றும் அனைத்துலக சட்டக் கடப்பாடுகளுக்கு ஏற்ப இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்ய வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளது.

போரில் பொதுமக்கள் இழப்பு அதிகளவில் இருந்தது என்பதற்கு இலங்கை அரசு திருப்திகரமான பதிலைத் தெரிவிக்காவிட்டால் அடுத்து இலங்கையில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைவர்கள் பங்குகொள்ளும் உச்சி மாநாட் டைப் புறக்கணிக்க வேண்டும் என்கின்ற கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹார்ப்பரின் வெளிப் படையான கருத்தை யூலியா கிலார்ட்டும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த மாநாட்டை 2013இல் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் சொந்த இடமான அம்பாந்தோட்டையில் மேற்கொள்வது என முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

நன்றி: புதினப்பலகை

இவ்வாறான கொலைகள் இடம்பெறுவதற்கு தான் எவ்விதத்திலும் தலைமை தாங்கியிருக்கவில்லை எனத் தன் மீது சுமத்தப்பட்ட இக்குற்றச்சாட்டை பாலித ஹோகன்ன மறுத்துவருகிறார்.

மூன்றாவதாக விசாரணை செய்யப்பட வேண்டியவர் இலங்கையின் பலம்மிக்க அதிபரான மஹிந்த ராஜபக்ஷ எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. முப்படைகளின் தளபதி என்ற வகையில் இலங்கை அதிபர் தனது படை அதிகாரிகள் மற்றும் படையினர் மேற்கொண்ட போர்க் குற்றங்களுக்கான அனைத்துப் பொறுப்புக்களையும் ஏற்க வேண்டியவராவார்.

விரைவில் ஆஸ்திரேலியாவின் பேர்த்தில் நடைபெறவுள்ள பொதுநலவாய உறுப்பு நாடுகளின் தலைவர்களைச் சந்திக்கும் அதேவேளையில், எலிசபெத் ராணியையும் சந்திக்கவுள்ளார்.

தமிழ்ப் புலிகளின் தலைமை மீதும் போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள போதிலும் 2009இல் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது புலிகளின் தலைமை முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. எனவே அவர்கள் மீது போர்க் குற்றங்களைச் சுமத்துவதில் பயனேதும் இல்லை. போரில் வெற்றியீட்டிய இலங்கை இராணுவப் படைகள் போர்க் குற்றங்களே சிக்கலானவையாகத் தொடர்கின்றன. இவை தொடர்பாக விசாரணை செய்யும் பொருட்டு இலங்கை அரசு [illegible] ஒன்றை நியமித்துள்ளது.

போர் நடந்த காலப்பகுதியில் இலங்கை அரசு தன்னால் முற்றுகையிடப்பட்ட பிரதேசங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தது.

## முயலுக்கு மூன்று கால்



ஓர் ஊரில் குருவும் சீடனும் இருந்தார்கள். இவர்கள் ஒருமாதிரியானவர்கள் .அந்த சீடன் ஒரு முயல் வேட்டைக்காக் காட்டுக்குப் போனான்.

ஒரு முயல் கிடைத்தது பிடித்துவந்து நெருப்பில் சுட்டு அதன் கால்களில் ஒன்றை மட்டும் இவன் சாப்பிட்டான் மீதி மூன்று கால்களையும் கொண்டு போய் தன் குருவிடம் கொடுத்தான். மிகுந்த பணிவுடன், அந்தக் குரு என்ன அந்த அளவுக்கு ஒன்றும் தெரியாத அப்பாவியா? இன்னொரு கால் எங்கே? என்று கேட்டார். சீடன் ''நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்தானே இருந்தது'' என்றான்.

சிஷ்யன் பொய் சொல்கிறான் என்று குருவுக்குத் தெரிந்துவிட்டது. சரி இவன் சொன்னதுதான் சொன்னான் கூறிய பொய்யை காப்பாற்றும் சாமர்த்தியமாவது இவனுக்கு உண்டா என்பதைச் சோதித்துப் பார்க்க வேண்டும் என்று முடிவு செய்தார். கொஞ்சநாள் கழித்து சீடனைக் கூப்பிட்டு, ''நீ பிடித்த முயலுக்கு எத்தனை கால்கள்'' என்று கேட்டார்.

''மூன்று கால்கள்தான் குருவே''! என்றான் அவன். மறுபடியும் ஒரு தடவை இப்படியே கேட்டார். அவனும் இப்படியே பதில் கூறினான்.

சீடன் பரவாயில்லை, பொய்யைக் காப்பாற்றுவதில் மிகவும் பிடிவாதமாகத்தான் இருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டார்.

மீண்டும் சில நாள் வரைக்குப் பின் இவனுக்கு இன்னொரு பரீட்சை வைத்துப் பார்க்கலாம் என்று முடிவு செய்து சீடனைக் கூப்பிட்டார். அவனும் ''என்ன குருவே ?''என்று வந்து நின்றான். குரு அவன் நெற்றியிலேயே ஒரு பொட்டை வைத்து ''நீ தினமும் எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும்? என்றார்.

''செய்கிறேன் ''என்றான்.

''நீ தினமும் ராஜாவுக்கு வைத்திருக்கிற சாப்பாட்டை தெரியாமல் திருடி வந்து எனக்கு கொடுக்க வேண்டும்'' என்றார்.

''இவ்வளவுதானே; கவலைப்படாதீர்கள் என்று கூறிவிட்டு சென்றான். வாக்குக் கொடுத்ததைப் போன்றே சாப்பாட்டை யாருக்கும் தெரியாமல் திருடிக் கொண்டுவந்து குருவிடம் கொடுத்தான்.

இந்தப் பழக்கம் அவனைத் தொடர்ந்தும் இதேமாதிரிச் செய்ய வைத்தது. தினமும் தன்னுடைய சாப்பாடு திருட்டுப் போவது ராஜாவுக்கு அவமானமாகவிட்டது. திருடன் யார் என்பதைக் கண்டுபிடித்தே தீரவேண்டும் என்று தீர்மானம் செய்துவிட்டார். இதனால் ''என்னுடைய சாப்பாட்டைத் திருடிச்செல்பவர் யார் என்பதைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசுவழங்கப்படும்''என்று அறிவித்தார்.

இந்தக் குரு ராஜாவிடம் போய் ''சோறு கறி குழம்பு எல்லாம் சூடாக இருக்கும்வகையில் சுடச்சுட வைத்திருந்தால் திருடனைக் கண்டு பிடித்து விடலாம் ''என்றார்

குரு இப்படிச் சொல்கிறாரே என்பதற்காக ராஜாவும் அதேமாதிரி சோறு குழம்பு எல்லாம் சூடாக ஆவி பறக்க ஏற்பாடு செய்தார்.

இந்த சீடன் நெற்றியிலே பொட்டு வைத்துக்கொண்டு வழக்கம்போல் ராஜாவின் சாப்பாட்டைத் திருடப்போனான் பாத்திரத்தில் எல்லாவகைச் சாப்பாடுகளும் சூடாக இருந்தன. இவன் அப்படியேஅந்தப் பாத்திரத்தைத் தூக்கிக்கொண்டு மெதுவாக வந்தான்.

அந்த ஆவி இவன் நெற்றியில் பட்டு அங்கிருந்த பொட்டு கரைந்து போய்விட்டது. பொட்டு அழிந்ததை வைத்து திருடன் யார் என்பதைக் கண்டுபிடித்தார் ராஜா. உடனே ''என்னுடைய சாப்பாட்டைத் திருடிய இவனைச் சிரச்சேதம் செய்யுங்கள்'' என்று உத்தரவிட்டார்.

தண்டனையை நிறைவேற்றுவதற்காக அவனை அழைத்துக்கொண்டு போகின்ற அந்தச் சமயத்தில் குரு அங்கே வந்து ''சீடனே இப்போதாவது நீ பிடித்த முயலுக்கு எத்தனை கால் என்று உண்மையைச் சொல்'' அப்படிக்கூறினால் உன்னை இந்தத் தண்டனையிலிருந்து காப்பாற்றி விடுகிறேன். என்றார்.

அப்போதும் அவன் ''நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்தான் குருவே''என்று சாதித்து விட்டான்.

சீடனின் திடசித்தம் அவரை ஆச்சரியப்பட வைத்தது. நேராக ராஜாவிடம் போய் இவனுக்காக சிபாரிசு செய்து தண்டனையை ரத்துச் செய்துவிட்டு அதன்பின் அவனுக்கு உபதேசம் செய்ய ஆரம்பித்தார்.

சொன்னது பொய்யாக இருந்தால் கூட அந்தப் பொய்யைக் காப்பாற்றுவதில் உறுதியாக இருக்க வேண்டும்.

**கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆசிரியர் தின நிகழ்வு சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்ற போது அதிபர் அருட்தந்தை ஞானப்பொன்ராஜா, பழைய மாணவர் வைத்திய கலாநிதி ரவிராஜ் மற்றும் ஆசிரியர்கள் இறைவணக்கத்தில் ஈடுபடுகின்றனர். (ம–135)

# எமது இளைய சமுதாயத்தினரை நல்வழிக்கு இட்டுச் செல்ல வேண்டும்

## காரைநகர் உதவி அரச அதிபர் தெரிவிப்பு

காரைநகர், ஒக்.21

எமது ஏனைய சமுதாயம் வெவ்வேறு விடயங்களில் புலனைச் செலுத்திவரும் இந்த வேளையில் அவர்களை நல்ல வழிக்கு இட்டுச்செல்ல வேண்டும்.

சிறுவர்களே வருங்கால சிற்பிகள். அவர்களது கைகளில் எதிர்காலம் தங்கி உள்ளது. அவர்களது உரிமைகளில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் காரைநகர் உதவி அரச அதிபர் த.ஜெயசீலன்.

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு சிறுவர், முதியோர் மற்றும் எழுத்தறிவு தின விழாவில் தலைமை உரையாற்றும் போதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

இதில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

வளரும் பயிர்கள் அவர்கள். எதிர் கால விருட்சங்கள் அவர்கள். இவர்களது உரிமைகளில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். சிறுவர் உரிமைகள் பேணப்பட வேண்டும்.

வீடுகளில் அவர்களது உரிமைகள் எவ்வளவு தூரம் பேணப்படுகின்றது என்பது கேள்விக் குறியாகக் காணப்படுகின்றது.

சிறுவர்களின் உரிமைகள் பேணப்படும் போது அவர்களது எதிர்கால வாழ்க்கை உயர்வடையும். சிறுவர்களும் தங்கள் கடமைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். அன்பு, புரிந்துணர்வு, சமாதானமாக வாழ்தல் போன்றன அவர்களிடையே வளத்தெடுக்கப்பட வேண்டும்.

முதியவர்கள் சுமைகள் அல்ல. அவர்கள் எங்களது சொத்துக்கள். அவர்களது அனுபவங்கள் எங்களது முன்னேற்றத்துக்கு உதவும். அவர்களின் அனுபவங்கள், ஆலோசனைகளை நாம் கேட்டு நடப்பதன் ஊடாக வாழ்வில் உயர் நிலைக்கு வர முடியும். அவர்களது இறுதிக் காலம் சந்தோசமாக இருக்க வேண்டும் என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உப்பு, சீனி போன்றவற்றை உணவில் குறைப்பதுடன் உடற்பயிற்சி, தியானம் என்பவற்றை சிறுவயதில் இருந்தே பழக்கப்படுத்த வேண்டும். இவை எதிர்கால வாழ்வு சிறப்பாக அமைய உதவும். - என்றார்.

இந்த விழாவில் காரைநகர் பாடசாலைகளில் கற்று தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 16 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட 20 முதியவர்கள் கௌரவிப்பு, தெரிவு செய்யப்பட்ட இருபது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் என்பனவும் இடம் பெற்றன.

(ம-250)

# சமூகத்தின் கட்டமைப்பை மாற்றும் சக்தி கொண்டவர்கள் ஆசிரியர்கள்

## கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.அதிபர் உரை

காரைநகர், ஒக்.21

சமூகத்தின் கட்டமைப்பையோ அல்லது உலகத்தையோ மாற்றி அமைக்கும் சக்தி ஆசிரியர்களுக்கு உண்டு.

நல்ல ஆசிரியர்கள் 24 மணி நேரமும் தமது மாணவர்களைப் பற்றியே சிந்திப்பார்கள். அவர்களின் திறன்களை வெளிக்கொணர்வதற்கான சந்தர்ப்பத்தை நல்லாசிரியர் எதிர்பார்த்திருப்பார். மெழுகுவர்த்தி போல் ஆசிரியர் உலகுக்கு ஒளியை ஊட்ட வல்லவர்கள்.

இவ்வாறு தெரிவித்தார் காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலய அதிபர் பொ.சிவானந்தராசா.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் தின விழாவில் வாழ்த்துரை வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயர்தர மாணவர் மன்றத் தலைவர் எஸ்.நிலவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

சமூகத்தின் கட்டமைப்பையோ அல்லது உலகத்தையோ மாற்றி அமைக்கும் சக்தி ஆசிரியர்களிடம் மட்டுமே உள்ளது.

எந்த ஒரு வல்லரசு நாட்டினது இராணுவத்தின் பலத்திலும் பார்க்க ஆசிரியர்களின் பலம் மிக அதிகமானது. சமூகம் ஆசிரியர்களிடம் இருந்து நிறையவே எதிர்பார்க்கின்றது. உதாரணமாக ஆசிரியர்களின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றும் சமூகம் இன்றும் காணப்படுகின்றது.

சில சமூகக் கட்டமைப்புகளில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அந்த மக்கள் பொலிஸ் நிலையம் நாடாது ஆசிரியர்களின் உதவிகளை இன்றும் நாடுகின்றது.

இதை உணர்ந்த இன்றைய அரசு சிவில் பாதுகாப்பு குழுக்களில் ஆசிரியர்களை உள்ளடக்குகின்றது. மத்தியஸ்தர் சபைகளில்கூட ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர். இது ஆசிரியர்களின் பெருமையை உலகுக்கு உணர்த்துகின்றது. மாணவர்களில் ஆசிரியர்கள் அக்கறை கொள்ளும்போது அந்த மாணவர்களின் எதிர் காலம் பிரகாசிக்கின்றது.

இதனையே பண்டைய கால மக்கள் குருபார்வை என அழைத்தனர். மாணவர்களுக்குக் கற்பிப்பதற்காக ஆசிரியர்கள் தினமும் கற்றுக்கொண்டே இருக்கிறார்கள்.

மாறிவரும் உலகில் மாற்றங்களைக் கற்று அதை மாணவர்களுக்கு உணர்த்தாத ஆசிரியர்கள் ஆசிரிய சேவையில் இருந்து ஒதுங்குவது நல்லது.

இன்றைய காலத்திலும் கிராமப் புறப் பாடசாலைகளில் ஆசிரியர் தினம் விமரிசையாகக் கொண்டாடப்படுவது மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர் மீது வைத்துள்ள நம்பிக்கையையே காட்டுகின்றது.

மாணவர்களை நல்வழிப்படுத்துவதற்காக ஆசிரியர்கள் இயன்றவரை தமது கடமைகளை செவ்வனே செய்ய வேண்டும். இதனையே கற்பதை நிறுத்தும் ஆசிரியர்கள் கற்பிப்பதையும் நிறுத்த வேண்டும் என கல்வியாளர்கள் கூறுகின்றனர்.-என்றார். (ம-250)

# சிறுவர் நாடகப் போட்டியில் முதலிடம்

காரைநகர், ஒக்.21

காரைநகர் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற சிறுவர் நாடகப் போட்டியில் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியா லயம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இதேவேளை வலய மட்டத்தில் இடம்பெற்ற திருக்குறள் மனனப் போட்டியில் இந்தப் பாடசாலையைச் சேர்ந்த இருவர் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

தரம் 3 அ.தனரூபன், தரம் 4 லி.அபிராமி ஆகிய இருவரும் மூன்றாம் இடத்தை தீவக வலயத்தில் பெற்றுள்ளனர். (ம-250)

# சமயப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

காரைநகர், ஒக்.21

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் சைவ சமய பாடப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. காரைநகர் பிரதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தங்கள் பாடசாலை அதிபர்கள் ஊடாக விண்ணப்பிக்க முடியும் என்று சபையின் பரீட்சைச் செயலாளர் க.நேர்த்திரானந்தன் அறிவித்துள்ளார்.

தரம் 2 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்காக இப் பரீட்சை அடுத்த மாதம் 10 ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப் பரீட்சைகளில் அதி உயர் புள்ளிகளைப் பெறும் ஐந்து மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களும் வகுப்பு ரீதியாக முதல் ஐந்து இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஈழத்துச் சிதரம்பரத்தில் இடம் பெறும் மணிவாசகர் விழாவில் வைத்து வழங்கப்படும்.

பரீட்சையில் சித்தியடையும் அனைத்து மாணவர்களுக்குமான சான்றிதழ்கள் பாடசாலை அதிபர்கள் ஊடாக மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-250)

# மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டி முடிவு

தென்மராட்சி, ஒக்.21

வடக்கு மாகாண பாடசாலையின் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களிடையே நடத்தப்பட்ட தமிழ் ஆங்கிலமொழி மூலமான மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களின் விவரங்கள் மாகாண கல்விப் பணிப்பாளரினால் அந்தந்த வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த விவரங்களின் படி தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களின் விவரங்கள் வகுப்பு ரீதியாக வருமாறு:

**தரம் 6**

1000 மாணவர்களுக்கு மேல் உள்ள பாடசாலைகள்- எஸ்.யாதவன் (மீசாலை வீரசிங்கம் ம.வி), எஸ்.டனுஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**தரம் 7**

200 மாணவர்களுக்கு கீழ்- எஸ்.கஜீபன் (கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை)

200 இற்கும் 500 இற்கும் இடைப்பட்ட மாணவர்கள்- எஸ்.கஜானனன் (மட்டுவில் சந்திரமௌலீச வித்தி), எஸ்.சர்மிலன் (மட்டு வில் சந்திர மௌலீச வித்தி), எஸ்.விதுஜா (மட்டுவில் சந்திர மௌலீச வித்தி).

1000 மாணவர்களுக்கு மேல் - கே.கம்ஸிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கே.கவிப்பிரியா (மீசாலை வீரசிங்கம் ம.வி), எம்.பானுஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**தரம் 8**

200 மாணவர்களுக்கு கீழ்- பீ.சாருஜா (கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை).

1000 மாணவர்களுக்கு மேல்- த.பாசுபதன் (மீசாலை வீரசிங்கம் ம.வி).

**தரம் 9**

200 மாணவர்களுக்கு கீழ் - ஜ.இலட்சனா (கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை).

1000 மாணவர்களுக்கு மேல்- [illegible] (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), என்.நிரோகாந்த (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**தரம் 10**

200 இற்கும் 500 இற்கும் இடைப்பட்ட பாடசாலைகள்- ஜீ.பிருஷாந்தி (மட்டுவில் சரஸ்வதி வித்தி).

501 இற்கும் 1000 இற்கும் இடைப்பட்ட மாணவர் உள்ள பாடசாலைகள்- கே.சயந்தன் (கச்சாய்அ.த.க.பாடசாலை),வீசதீஸ் (கச்சாய் அ.த.க.பாட சாலை).

**தரம் 11**

200 மாணவர்களுக்கு கீழ்- எஸ்.சண்முகப் பிரியன் (கைதடி குருசாமி வித்தி), ஜீ.கார்த்திகா (இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தி).

201 இற்கும் 500 இற்கும் இடைப்பட்டது- எஸ்.ஜெயநிலா (மட்டுவில் சந்திர மௌலீச வித்தி), எஸ்.துஷாந்தன் (மட்டுவில் சந்திரமௌலீச வித்தி).

**தரம் 12, 13**

201 இற்கும் 500 இற்கும் இடைப்பட்ட மாணவர் உள்ள பாடசாலைகள்- என்.நிதர்சனா (உசன் இராம நாதன் ம.வி), எம்.நிஷாந் (மீசாலை விக்னேஸ்வரா ம.வி).

501 இற்கும் 1000 இற்கும் இடைப்பட்டது- கே.கணேந்திரன் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), பீ.சிவதர்சினி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

1000 மாணவர்களுக்கு மேல்- எஸ்.பவித்திரா (மீசாலை வீரசிங்கம் ம.வி), எஸ்.சரண்யா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி). (ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதிரைக்குக் கொம்பு கொடுக்காதது புரியுது!

**கோப்பாய் சண்முகம்**
**கதையோடு செய்தி**

மருத்துவமனைகள் மக்களுக்கு முழுமையான சேவையை வழங்கும் போது அப்படிப்பட்ட மருத்துவமனைகளை கோயிலாகப் பார்த்து அங்கு பணி புரியும் மருத்துவர்களை கடவுளாக வணங்க வேண்டும்.

அப்படிப்பட்ட மருத்துவமனைகள் வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரில் இயங்கியதை மறுத்துவிட முடியாது. போதிய மருத்துவ வசதிகள் இல்லாமலும் மருத்துவர்கள் இல்லாமலும் இறுதிப் போரில் ஒரு சில மருத்துவர்களைக் கொண்டும் ஒரு சில மருந்துகளைக் கொண்டும் காயப்பட்ட மக்களுக்குச் சிறப்பான சேவையை அந்த மருத்துவமனைகள் வழங்கி வந்தமை பாராட்டத்தக்கது.

அந்த மருத்துவமனைகளின் சேவைகள் போல் இங்கிருக்கின்ற மருத்துவமனைகள் சேவைகளை வழங்காதா என மக்கள் ஏங்கித் தவிக்கின்றனர். அரச மருத்துவமனைகளில் நாளாந்தம் நோயாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வார்த்தைகளால் சொல்ல முடியாதுள்ளது. அரச மருத்துவமனைகள் தமது சேவையை பூரணமாக மக்களுக்கு வழங்கினால் மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளர்கள் மன உளைச்சலுக்கு ஆளாக வேண்டிய நிலைமை ஏற்படாது. அரச மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் நோயாளர்கள் அங்கு கடமை புரியும் தாதியர்கள், ஊழியர்களால் நாளாந்தம் மன உளைச்சலுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர். அப்படிப்பட்ட மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் நோயாளர்கள் தாதியர்களாலும் ஊழியர்களாலும்தான் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது என்று கவலை கூறுகின்றனர்.

வாட்டில் உள்ள நோயாளர்களுக்கு மருந்துகள் கொடுக்கும் போது தாதியர்கள் அவர்களின் மனத்தை துன்புறுத்தாமல் மருந்துகளை வழங்குவதில்லை என்பது பல நோயாளர்களின் குறை. இதனால் பல நோயாளர்கள் மன உளைச் சலுக்கு ஆளாகின்றனர். உடல்நிலை நோய்வாய்ப்பட்டு உடலையே அசைக்க முடியாமல் அரச வைத்தியசாலைகளை நாடி தங்கள் உயிர்களைக் காப்பாற்றச் சொல்லி வருகின்றவர்களின் மனமும் வாடிப் போவது தகுமா? இந்த நேரத்தில் ஒரு சாதாரண மனிதன் கூட அவர்களுக்கு உதவி செய்ய பின் நிற்கமாட்டான் என்பது தெரிந்தும் தொழிலாகச் செய்யும் தாதியர்களும் ஊழியர்களும் ஏன் பொறுமை இழப்பது தகுமா? ஒட்டுமொத்தமாக அனைவரும் இவ்வா றானவர்கள் என்று சொல்ல முடியாது.

நோயின் தாக்கத்தால் உடலின் வேதனையைத் தாங்க முடியாமல் சிகிச்சை பெற வரும் நோயாளர்களிடம் தாதியர்களும் ஊழியர்களும் நடந்து கொள்ளும் செயற்பாடுகள் அவர்களுக்கு மன உளைச்சலை உண்டு பண்ணி மேலும் வேதனையைக் கூட்டிவிடுகிறது என்ற குறை பலரிடம் இருந்து வருகிறது. தலையிடியும் காய்ச்சலும் தனக்குத் தனக்கு வந்தால் தான் தெரியும் என்று சொல்வார்கள்.

இதை ஏன் சண்முகம் சொல்லுறன் என்று பார்க்கிறியளா?

கடந்த 6 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல அரச வைத்தியசாலை ஒன்றில் இரத்த அழுத்தம் காரணமாக வாட்டில் சேர்க்கப்பட்ட ஒருவர் அந்த வைத்தியசாலையில் ஏற்பட்ட மன உளைச்சலைச் சொன்னார் பாருங்கோ. கேட்ட எனக்கே மனம் வெந்து போச்சு. அந்த வைத்தியசாலைக்கு எந்த நோய் வந்தாலும் என்னைப் போகாமல் பார்த்துக் கொள் கடவுளே என்ற மாதிரி இருந்தது.

எக்ஸ்ரே எடுக்க வேண்டும் என்று சொல்லி இவரை அந்த வைத்தியசாலையில் உள்ள எக்ஸ்ரே எடுக்கும் அறைக்கு வருமாறு அழைப்பு வந்தது. இவ ரும் அந்த எக்ஸ்ரே எடுக்கும் அறையின் வாசலில் போய் நின்றார். இவருடன் பல நோயாளர்கள் எக்ஸ்ரே எடுப்பதற்காக அந்த அறை வாசலில் நின்றிருந்தனர். இவ ருக்கு முன்னே ஒரு வயது முதிர்ந்த ஒரு வர் தள்ளாடித் தள்ளாடிக் கொண்டு நின்றிருந்தார். அந்த எக்ஸ்ரே எடுக்கும் அறைக்குள் நின்ற தாதியர்கள் ஏதோ மும்முரமாகக் கதைத்துக் கொண்டிருந்தனர். எக்ஸ்ரே எடுப்பதற்காக நோயாளர்கள் பல மணி நேரம் காத்துக் கொண்டு அந்த அறை வாசலில் நிற்கிறார்கள் என்று கூடக் கவனிக்காமல் அவர்கள் தங்கள் கதையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

பல மணிநேரம் கழித்து ஒவ்வொருவராக அறைக்கு உள்ளே அழைத்தனர். அவருக்கு முன்னே நின்றிருந்த முதியவர் உள்ளே சென்றார். அந்த எக்ஸ்ரே அறை யில் நின்ற தாதியர்கள் அந்த முதியவரைப் பார்த்ததும் செருப்பை வெளியே கழட்டிவிட்டு வரத் தெரியாதா, சேட்டையும் கழட்டிவிடு எனக் கண்டபடி பேசினர்.

பாவம் அந்தப் பெரியவர், ஏலாமல் இருக்கும் தருணத்தில் இப்படியாகப் பேசினால் எப்படி இருக்கும்? அவருக்குக் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. ஆனால் அந்த எக்ஸ்ரே அறையில் நின்றவர்கள் சப்பாத்துடன் நிற்கும் போது இவரை ஏன் செருப்பைக் கழட்டிவிட்டு வரும்படி சொல்லுகின்றார் என்று புரியாத புதிராகப் பார்த்துக் கொண்டிருந்தவர் தானும் எக்ஸ்ரே எடுத்துவிட்டு வாட்டுக்கு வந்துவிட்டார். அதேநாள் அந்த வாட்டுக்கு வந்த ஒரு பெண் தாதியர் அந்த வாட்டில் இருந்த நோயாளர்கள் எல்லோரையும் பார்த்து ஒவ்வொருவரும் 10 பிளாஸ்ரிக் போத்தல் வாங்கி வைத்திருக்குமாறு கடும் தொனியில் தெரிவித்தார். அதன் பின் நோயாளர்கள் எல்லோரும் அரக்கப் பரக்க பிளாஸ்ரிக் போத்தல்களை எடுப்பதற்காக அலைந்தனர். கஷ்ரப்பட்டு ஒருவாறு பிளாஸ்ரிக் போத்தல்களைச் சேகரித்து வைத்திருந்தபோது அந்த வாட்டுக்கு வந்த டாக்டர் ஒருவர் ஒவ்வொரு நோயாளர்களுக்கும் தனித்தனியாக ஒவ்வொரு பிளாஸ்ரிக் போத்தல்களை வழங்கியுள்ளார். மறுபடியும் அந்த வாட்டுக்கு வந்த அதே பெண் தாதியர் நோயாளர்களுடன் எரிந்து விழ ஆரம்பித்தார். அவருடன்கூட ஊழியர் ஒருவரும் சத்தம் போட்டார். ஊழியர் ஒருவர் அந்த வாட்டில் உள்ள குப்பை வாளியில் இருந்த குப்பைகளைப் பார்த்துவிட்டு அந்தக் குப்பைகளில் இருந்த ஒரு சோதிப் போத்தலை எடுத்து அதை யார் போட்டது என்று கேட்டுவிட்டு, எழாமல் இருந்த ஒரு நோயாளியைப் பார்த்து அவர்தான் அந்தச் சோதிப் போத்தலை குப்பைத் தொட்டியில் போட்டார் என்று அந்தப் பெண் தாதியரிடம் தெரிவித்தார்.

அந்த நோயாளி மருத்துவமனையில் சாப்பிடும் ஒருவர். அவர் சோதிப் போத்தல் கொண்டு வந்திருக்க முடியாது. இந்த ஊழியர் ஏன் அவர் மீது குற்றத்தைச் சுமத்துகிறார் என்று அங்கிருந்தவர்களுக்கும் புரியவில்லை. அந்த மருத்துவமனையில் இரத்த அழுத்தம் காரணமாகச் சோதிக்க எனது நண்பர் சேர்க்கப்பட்ட ஒரு நாளில் இவ்வளவு சம்பவங்கள் இடம்பெற்றிருக்கிறது என்றால் பல நாள்கள் இருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் என்ன பாடு படுவார்கள்? ✱


# மரண அறிவித்தல்



## இராமலிங்கம் சபாரத்தினம்
## (சபா அண்ணன்)

புங்குடுதீவு, 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு கேணியடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சபாரத்தினம் நேற்று முன்தினம் (19.10.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு- பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும் கனகாம்பிகையின் அன்புக் கணவரும் திருச்செல்வம், திருச்செல்வி, அருட்செல்வன், சற்குணச்செல்வி, அருட்செல்வி, கிருஸ்ணசெல்வன், கலைச்செல்வன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் விநாயகமூர்த்தி, அமரர் சற்குணம், அமரர் பொன்னுத்துரை மற்றும் கண்ணியசீலன் ஆகியோரின் சகோதரனும் அமரர் கண்ணன், அமரர் ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் வாசுகி, குமரதாஸன், மைத்திரிக்கா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும் அன்னலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் கனலிங்கம், பாலச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் யோகி, டினோ, நர்த்தகி, பிரணவன், வைஸ்ணவி, இரட்ணங்கி, கஜானனி, தர்சிகன், சிந்துஜன், தர்சிகா, சானுஜன், தர்சனா, சங்கீதா, டிலக்சன், அபிலேஷ், அஸ்வின் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.10.2011) முற்பகல்10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகக் கோம்பையன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கேணியடி, கொக்குவில்
மேற்கு, கொக்குவில். (9322)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
21 ஒக்ரோபர் 2011 வெள்ளிக்கிழமை

# மனைவியிடம் தாபரிப்புக் கோரி வழக்குத் தொடர்ந்த கணவன்

கொழும்பு,ஒக்.21

கணவனிடமிருந்து மனைவி தாபரிப்புக் கோரி வழக்குத் தொடருவதே பெரும்பாலும் அறியப்பட்டாலும், வெலிகமை மிரிஸ்ஸ பிரதேசத்திலிருந்து சற்று வித்தியாசமான வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது.

வாகன விபத்தொன்றுக்கு இலக்காகி நோயாளியானத ன் பின்னர் தம்மைக் கைவிட்டு நீங்கிச் சென்றுள்ளமை சம்பந்தமாக தனது மனைவியிடமிருந்து பராமரிப்புக் கோரி வெலிகமை மிரிஸ்ஸ பிரசேத்தில் வசிக்கும் நபரொருவர் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மாத்தறை மேலதிக நீதிவான் செல்வி துலானி அமரசிங்க அந்த நபரின் மனைவியான பிரதிவாதியை 50 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுவித்து வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜனவரி 10 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

2003 ஆம் ஆண்டு குறித்த நபர் விபத்தொன்றுக்கு உள்ளாகி நிரந்தர நோயாளியாகியுள்ளார். அதன் பின்னர் மனைவி அவரைக் கைவிட்டுச் சென்றுள்ளார்.

இந்த நிலைப்பாட்டுக்கு அமைய தனது வாழ்க்கையை நடத்திச் செல்வது தொடர்பாக அவர் மனைவியிடமிருந்து தாபரிப்புக் கோரி நிற்கிறார். (ம-22)

## வீடு வாடகைக்கு

மல்லாகம் நீதிமன்ற வீதியில் 100M தூரத்தில் சகல வசதிகளுடன், பல வாகனங்கள் தரிக்கக் கூடிய நிறுவனங்களுக்கு உகந்த வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 0212241604, 0776365846

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 2 ஸ்ரீ XXXX தொடரிலக்கமுடைய மைனர் கார் (Butter Colour) விற்பனைக்குண்டு.

மேலதிக விவரங்களுக்கு :

07732488

## கூட்டம் பிற்போடப்பட்டது

தென்மராட்சி,ஒக்.21

தென்மராட்சி பிரதேச செயலகத் தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த பிரதேச ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் நவம்பர் 8 ஆம் திகதி நடை பெறும் என பிரதேச செயலர் திருமதி அ. சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

(எ-207)

## 5 வருடங்களுக்கு மேல் கடமையாற்றுவோர் விவரம் கோரல்

யாழ்.மாவட்ட சுகாதார திணைக்கள நிறுவனங்களில் ஐந்து வருடங்களுக்கு மேல் பணியாற்றும் சகல தர உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரிடமிருந்து 2012 ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்துக்குவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத் தலைவரின் விதப்புரையுடன் எதிர் வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

(ம-207)

# அவலத்தின் மத்தியில் பயணிக்கும் மக்கள்

வலி.வடக்கு,ஒக்.21

சாவகச்சேரியில் உள்ள பழைய பாடசாலை வீதியையும் - கல்வயல் பகுதியையும் இணைக்கும் இராமலிங்கம் வீதியில் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றார்கள்.

குறிப்பிட்ட வீதி திருத்தும் பணி நடைபெறுவதால் வீதியில் கற்கள் குவிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு போடப்பட்டுள்ள கற்கள் வீதியால் பயணிக்கும் மக்களுக்கு பெரும் இடையூறுகளை விளைவிப்பதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இப் பகுதியில் நாளாந்தம் மாலை வேளையில் மின் வெட்டு இடம் பெறுவதால் இதனால் பயணிக்க முடியாத நிலை உள்ளது.

பகலிலேயே இந்த வீதியூடாகப் பயணிக்க முடியாத நிலையில் இரவில் பயணிப்பது என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல.

வீதிகளில் பறிக்கப்பட்ட பெரிய கற்களை ஓரங்களில் ஒதுக்கிவிடாது உள்ளமையால் விழுந்து எழும்பும் நிலையும் உள்ளது.

இந்த விடயத்தில் உரியவர்கள் கவனம் எடுப்பார்களா என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(ம-86)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 08 ★ 07 ★ 1941



விண்ணில் 21 ★ 09 ★ 2011

### அமரர் இசிதோர் திருச்செல்வம்

ஊனை உருக்கி உதிரம் கொடுத்த உன்னத தந்தையே!
எம்மை விட்டு நீங்கள் விழிமடல் மூடிய நேரத்தில்
கலங்குகின்றோம் உம்மை எண்ணி
அருமைத் தந்தையே படைத்தவன் அழகில் மயங்கினையோ?
படைத்தவனே உன்னை அழைத்தானோ?
போதும் இல்வாழ்வு என்று நினைத்தாயோ
நிலையில்லா வாழ்வு என துறந்தனையோ?
நிலைபெறும் இறைவனில் கலந்தனையோ?
உங்கள் ஆன்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

எமது தந்தையின் உயிர்பிரிந்த வேளை தோளோடு தோள்நின்று உதவியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலிகள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதி யாத்திரை வழிபாட்டை மேற்கொண்ட அருட் தந்தையர்களுக்கும் அருட் சகோதரிகளுக்கும் மற்றும் பல்வேறு உதவிகள் புரிந்து எமது துயரில் பங்கு கொண்ட அன்புள்ளங்கள் அனைவருக்கும் எம் உள்ளம் கனிந்த நன்றிகளை தெரிவிப்பதோடு இன்று (21.10.2011) வெள்ளிக்கிழமை புனித மரியன்னை பேராலயத்தில் காலை 6.00 மணிக்கு நடைபெறும் ஆத்மசாந்தி திருப்பலியிலும் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலம் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல 11,
பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 - 08 - 1945



உதிர்வு 22 - 10 - 2008

### அமரர் முத்தையா பாலசுப்பிரமணியம்

திதி : 21.10.2011

அரவணைத்து அன்பு செய்தீர்,
இன்பமாய் நாம் வாழ
ஏணியாயிருந்து நீர் உழைத்தீர்
ஆண்டுகள் மூன்று கழிந்திட்டாலும்
எம் மனதில் உம் நினைவு
என்றென்றும் நிலைத்திருக்கும்.
உங்களது ஆத்மா சாந்தி பெற அருளுமாறு
சிவபூதநாதேஸ்வரர் பாதம் பணிகின்றோம்.

செல்லப்பா வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

என்றும் உமது நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
மற்றும் பேரப்பிள்ளைகள்.

(9327)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 . 12 . 1938



உதிர்வு 15 . 01 . 2006

### அமரர் செல்லத்துரை தாமோதரம்பிள்ளை

திதி : 21.10.2011

ஐந்தாண்டுகள் கழிந்தாலும் ஆறுதல் இல்லை
அப்பா என அழைத்து அறிவுரை கேட்க அருகில் இல்லை
எம்முடன் வாழ்ந்த நாளில் உங்கள் பசுமையான
நினைவுகள் இன்னும் மறையவில்லை
பல ஆண்டுகள் நீண்டாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சில் நிறைந்திருக்கும்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

குடியிருப்பு
முத்துமாரி கோயிலடி,
மந்துவில் வடக்கு, கொடிகாமம்.

## யப்பான் இஞ்சின் விற்பனைக்கு உண்டு

SUBARU RGV 7500
ROBIN GENERATOR
(பெற்றோல் இஞ்சின் டீசல் OR மண்ணெண்ணைக்கு மாற்றலாம்)
S. நிஜந்தன்.
சென். மேரிஸ் றோட், ஊர்காவற்றுறை.
தொ.பேசி. 0776109977, 0777909412

## ஒத்து இடமாற்றம்

வவுனியா தெற்கு வலயப் பாடசாலையொன்றின் விஞ்ஞான பாட ஆசிரியர் யாழ். மாவட்டப் பாடசாலைக்கு ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு : 0776648242

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டில் கீழ் கண்ட வேலைக்கு 30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் தேவை.

1)வீட்டில் தங்கியிருந்து வீட்டுவேலை செய்யக்கூடியவர்
சம்பளம்:- ரூ.12,000/=

2)ஒவ்வொரு நாளும் போய்வந்து வேலை செய்யக்கூடியவர்
சம்பளம்:-ரூ.10,000/=

தொடர்பு : 0771392137

தயவு செய்து வேலைக்கு வரவிரும்பும் நபர் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 - 12 - 1941



மறைவு 31 - 10 - 2010

திதி: நவமி

### அமரர் பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம்

குடும்பமென்ற விருட்சத்தின் ஆணிவேராய்
என்றென்றும் எம் இதயத்தில்
வேராய் இருந்து ஒளியாய் ஒளிர்ந்து
நற்பண்புகள் பல கற்றுத் தந்து
நற் பலன்கள் பல அளித்து
நலமோடு நாம் வாழ நல்வழிகாட்டி
எம்மை வாழ வைத்த எங்கள் அன்புத் தெய்வமே
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
ஆறாது எம் துயரம்
எட்டாத தூரமேன் சென்றீர்கள் -அப்பா
எம்மை இங்கு தவிக்க விட்டு

பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.

(9326)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 வருடங்களாக கல்விப் பணியில் ஈஞ்சடி நாவலர் பாலர் பாடசாலை

சுதுமலைப்பிரதேச மக்களின் சிறந்த நற்சிந்தனைகளாலும், உயர்ந்த நோக்கத்துடனும் உருவாக்கப்பட்ட சுதுமலை ஈஞ்சடி நாவலர் பாலர் பாடசாலை நிறைவான பணியைத் தளரவிடாமல் தற்போதும் வழங்கி வருகின்றது.

சைவத்தையும், தமிழையும் தனது மூச்சாகக் கொண்டு அர்ப்பணிப்பான சேவையை வழங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் பெயரினை தன்னகத்தே கொண்டு விளங்கும் இந்தப் பாலர் பாடசாலை ஏனைய பாலர் பாடசாலைக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குவதும் பாடசாலையின் ஓர் தனிச் சிறப்பான விடயமாகும்.



நாவலர் காட்டிய வழியில் உருவாக்கம் பெற்றமையால் பாடசாலை வளாகத்துக்கு முன்னால் நாவலர் பெருமானின் சிலையை அமைத்து அதனை வழிபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

''வீதிகள் தோறும் பள்ளிகள்'' என சுப்பிரமணிய பாரதியார் கூறியதற்கு இணங்க விருட்சம் பெற்ற பாலர் பாடசாலைகளில் ஈஞ்சடி நாவலர் பாடசாலையும் தனக்கான ஓர் சிறப்பினைக் கொண்டுள்ளது.

கிராம மக்களின் பேருதவியே இந்தப் பாடசாலை மேன்மையடைவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

மனிதனின் வாழ்வில் கல்வி அறிவானது ஆரம்பக் கல்விக் கூடங்களில் தான் அமைகின்றது. இந்தக் கல்வியின் அத்திபாரக் கல்வி ஆனது விளையாட்டு, பாட்டு, நடனம், பொருள்களைப் பாவித்து மாணவர்கள் தமது திறன்களை வளர்த்துக் கொள்ளல் போன்ற செயற்பாடுகளில் அமைந்துள்து.

இத்தகைய செயற்பாடுகள் யாவற்றையும் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் அன்னையைப் போல் அரவணைத்து மாணவர்களின் விருப்பங்களுக்கு ஏற்றாற் போல் வழங்கி வருகின்றார்கள்.

''வளரும் பயிரை முளையிலே தெரியும்'' என்பது போல இந்தப் பாடசாலையில் கற்கும் மாணவர்களின் திறன்கள், அவர்களின் ஒவ்வொரு செயற்பாடுகளும் எவ்வளவு திறமையுடைய மாணவராக உருவாகுவான் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

பாடசாலையின் ஆரம்ப காலம் முதல் ஆசிரியராகக் கடமையாற்றிய திருமதி அழகேஸ்வரி நவரட்ணம் தனது ஒருங்கிணைப்பின் கீழ் ஏனைய ஆசிரியர்களுடனும் ஒன்றிணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரிதும் சேவையாற்றி வருகின்றார்.

அகத்தின் இருளைப் போக்கும் அறிவாலயங்களாகத் திகழும் பாடசாலைகளின் ஒவ்வொரு ஆசிரியருடைய பங்களிப்புகளுமே கல்வியை வளர்ச்சியடையச் செய்தது மட்டுமல்லாமல் சிறந்த மாணவர்களை உருவாக்கவும் சான்றாக அமைகின்றது.

அந்த வகையில் இந்தப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டல்கள், கற்றல் செயற்பாடுகள் யாவும் பாடசாலையின் ஒவ்வொரு முன்னேற்றத்துக்கும் படிக்கல்லாக அமைகின்றது.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தன்னிகரற்ற பணியை சுதுமலைப் பிரதேச மக்களின் முன்பள்ளி மாணவர்களுக்காக வழங்கி வரும் இந்தப் பாடசாலை ஏனைய ஆரம்பப் பாடசாலைகளுக்கு அத்திபாரம் போன்றது என்று தான் கூறவேண்டும்.

ஏனெனில் ஏனைய ஆரம்பப் பாடசாலைகளில் இங்கு கல்வி கற்கும் முன்பள்ளி மாணவர்களே கற்றலுக்காகச் செல்கின்றார்கள். இந்த முன்பள்ளி மாணவர்கள் தமது ஆரம்பக் கல்வி சிறப்புடன் பெற்றுக் கொண்டு திறமையுடைய மாணவர்களாக தமது ஆரம்பக் கல்விக்கு ஏனைய பாடசாலைகளுக்குச் செல்வதால் அந்தப் பாடசாலைகள் இந்த மாணவர்களை அன்புடன் அரவணைத்து மேலும் தேர்ச்சியடைவதற்கு வழிகாட்டியாக உள்ளனர்.

இந்த முன்பள்ளி பாடசாலையில் கற்றல் செயற்பாடுகள் மட்டுமன்றி ஏனைய இதர செயற்பாடுகளையும் மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது.

ஆலயச் சூழலில் அமையப் பெற்றுள்ளதால் பாடசாலை வளாகம் எப்பொழுதும் இனிய கற்றலுடன் குளிர்மையான பிரதேசமாகவே காணப்படுவது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் ஆர்வத்தை வலுப்படுத்துவதாக அமைகின்றது. மழலைகள் என்றால் விளையாட்டைத் தான் எப்பொழுதும் விரும்புவார்கள் என்று கூறுவதுண்டு.

அதனால் மழலைகளின் மனதை மகிழ்விக்கும் வகையில் பாடசாலை வளாகத்தில் விளையாடுவதற்கென்றே ஓர் அழகான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

முன்பள்ளி மாணவர்களுக்கு தேவையான அனைத்து விதமான விளை

**சோபனா**

யாட்டு உபகரணங்களும் சுதுமலை கிராமத்தைச் சேர்ந்த நலன்விரும்பிகளால் வழங்கப்பட்டு அவற்றை மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் வைக்கப்பட்டுள்ளது.

முன்பள்ளிகள் அதிகமாக தமக்கான ஓர் விளையாட்டு மைதானம் இல்லாமல் பெரிதும் சிரமப்படுவதை நாம் அறிவோம். ஆனால் ஓர் பாடசாலையின் விளையாட்டு மைதானம் என்பது பிரதானமான ஒன்றாகும் என்பதை இந்தப் பாடசாலையின் நிர்வாகிகள் அறிந்து கொண்டு சமூக சேவையாளர்கள் பலரின் உதவிகளையும் நாடி பாடசாலைக்கென ஓர் விளையாட்டு மைதானத்தைக் கொண்டுள்ளமை பாடசாலையின் சிறந்த கட்டமைப்பை எடுத்துக் காட்டுகிறது.

சுதுமலைக் கிராமத்தைச் சேர்ந்த சமூக சேவையாளர்களும், இந்தப் பிர தேசத்தில் இருந்து வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வசிக்கும் சமூக சேவையாளர்களினதும் உதவிகள் பாடசாலையை இன்னும் மேலும் வளர்ச்சி பெறச் செய்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

*தொடரும்.*

## நினைவலைகள்

09 ஆம் ஆண்டு — 02 ஆம் ஆண்டு

திதி : தசமி



பிறப்பு: 09.12.1968
இறப்பு: 15.10.2002

**அமரர் சூரியஜீவன் சுகானந்தி**

திதி: நவமி



பிறப்பு: 17.04.1941
இறப்பு: 11.10.2009

**அமரர் நல்ல தம்பி பரமேஸ்வரி** (ஆசிரியை)

ஈரவிழிகள் இன்னும் காயவில்லை சலனமின்றி இறைவனிடம் சென்றதன் மாயமென்னவோ பாசத்தின் உறைவிடமே பண்பின் இலக்கணமே நித்தம் துடிக்கும் இதயம் உமை நினைக்க தவறவில்லை சீர்பெற்ற உங்கள் வாழ்வு இனி சொர்க்கத்திலும் சிறக்கட்டுமே

இல. 11, 3 ஆம் குறுக்குத் தெரு,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

நல்லதம்பி
குடும்பத்தினர்

## தவறிவிட்டது

வன்னிச்சி கோயிலடி உடுப்பிட்டியைச் சேர்ந்த வை.இராசமணி, சி.மனோன்மணி ஆகியோரது தேசிய அடையாள அட்டை, மற்றும் விசேட இராணுவ அடையாள அட்டை என்பன பரமேஸ்வராச் சந்திக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடை யில் தனியார் பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழக்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்பு: 0774490257, 0779893137

## விற்பனைக்கு

5 சிறீ ஐயாயிரம் தொடரிலக்க
நல்ல நிலையில் உள்ள
**மொறிஸ்மைனர் கார்**
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0774047536

## வாகனங்கள் விற்பனைக்கு

LEYLAND - 10. WEEL கனரக வாகனம்
LEYLAND - 06. WEEL கனரக வாகனம்
பொருள் விநியோகத்தில்
இருக்கும் ISUZU கண்டர் ரக
வாகனங்கள் இரண்டு
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0779854886
021 222 1252

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு:
16.10. 1948

உதிர்வு:
07.09.2011

**அமரர் சின்னக்குட்டி திருநாவுக்கரசு**

கடந்த 07.09.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (21.10.2011) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த.தர்மகுலசிங்கம் (மருமகன்),
வண்ணாங்கேணி வடக்கு, பளை.

குடும்பத்தினர்.

## உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை



தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகைகள்!

மிக விரைவாக
உங்கள் உறவுகளின்
இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல்உணவுகள், மருந்துப்பொருள்கள் என்பன அனுப்பப்படும்.
வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

DHL WORLDWIDE EXPRESS கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது 650/= ரூபாவிலிருந்து

மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள்,CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட



DHL WORLDWIDE EXPRESS

**திருமுருகன் கொம் நெற்**

இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, பிரதான வீதி, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்தையும் குற்றம் கூறி எதிர்க்கும் எதிர்க்கட்சி நாட்டுக்கு தேவையில்லை

## ஜனாதிபதி கூறுகிறார்



கொழும்பு,ஒக்.21

சகல செயற்பாடுகளையும் எதிர்க்கும் எதிர்கட்சி ஒன்று நாட்டுக்கு அவசியம் இல்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு மற்றும் ஏனைய சகோதர கட்சிகளில் இருந்து கொழும்பு மாநகர சபைக்குத் தெரிவான உறுப்பினர்களுக் கான பதவியேற்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை அலரி மாளிகையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

இவ்வாறு அனைத்துச் செயற் பாடுகளையும் எதிர்ப்பதானது மக்களைக்கஷ்டத்துக்குஉள்ளாக்கு வதாக அமையும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச)

# பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புதிதாக நியமனம்

கொழும்பு,ஒக்.21

புதிய பொலிஸ் ஊடகப் பேச்சாளராக பொலிஸ் அத்தி யட்சகர் அஜித் ரோஹண நிய மிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று முன் தினம் தெரிவித்துள்ளது.

தற்போதைய ஊடகப் பேச் சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மெக்ஷி புரக்டர் பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதவி உயர்வு பெற்று மன்னார் மாவட்டத்துக்குச் செல்வதா லேயே புதிய பேச்சாளர் நிய மிக்கப்பட்டுள்ளார் என்று தெரி விக்கப்பட்டுள்ளது. (ச-சி)



தெற்காசிய விவரண திரைப்பட விழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பிலுள்ள இந்திய கலாசார நிலையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதர் அசோக் கே.காந்தா, இலங் கைக்கான பங்களாதேஷ் தூதர் மஹ்பூப் உஸ்மான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சிரமதானத்தில் படையினர் ஈடுபடுவதை கண்டித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஒக்.21

மாத்தறை, ருகுணு பல்கலைக் கழகத்தில் சிரமதானப் பணி களை மேற்கொள்ளவதற்கு இரா ணுவத்தினர் ஈடுபடுத்தப்படவுள்ள தனைக் கண்டித்து ருகுணு பல் கலைக்கழக மாணவர்களும் விரிவு ரையாளர்களும் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர்.

நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை ருகுணுப் பல்கலைக்கழ கத்தில் இராணுவத்தினரால் சிரமதானப் பணி மேற்கொள்ளப் படவுள்ளதனை இரத்துச் செய்யு மாறு அவர்கள் கோரிக்கை விடுத் தனர். இதேவேளை, ரத்னா லங்கா பாதுகாப்பு நிறுவனம் ஊடான பாது காப்பு ஊழியர்கள் பல்கலைக் கழகத்தில் பாதுகாப்பு நடவடிக் கைகளில் ஈடுபடுவதை நிறுத்து மாறும் ஆர்ப்பாட்டத்தில் எதிர்ப் புத் தெரிவிக்கப்பட்டது. (ச)

# போதைப்பொருள் பாவனையில் வீழ்ச்சி

கொழும்பு,ஒக்.21

கடந்த சில வாரங்களாக கொழும்பில் போதைப் பொருள் கடத்தலிலும் பயன்பாட்டிலும் கணிசமான வீழ்ச்சியேற்பட்டுள்ள தாக பொலிஸ் போதைப்பொருள் பணியகம் தெரிவித்துள்ளது.

ஹெரோயினைக் கடத்து தல், ஒளித்துவைத்தல் ஆகியவற் றில் கையாளப்பட்ட வழிமுறைகள் மாற்றப்பட்டுள்ளன போலத் தெரி கின்றதென சிரேஷ்ட போதைப்பொருள் தடுப்பு அதிகாரியொருவர் தெரிவித் தார். அதனைத் தாம் கவனமாக ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

மகஸின் வீதி, தெமட்டகொட, கிராண் பாஸ், வத்தளை ஆகிய இடங்களில் அதிகளவில் போதைப்பொருள் வர்த்தகம் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு பாகிஸ்தானிலிருந்தே ஹெரோயின் கொண்டுவரப்படுவதாக வும் இலங்கையூடாக அதிகளவு ஹெரோ யின் கடத்தப்படுவதாகவும் போதைப் பொருள் பணியகம் தெரிவித்துள்ளது.(ச)

# பாடசாலை சேவைக்குப் பயன்படாத வாகனங்களைக் கண்டறியச் சோதனை

## களுத்துறையில் அதிரடி

கொழும்பு,ஒக்.21

களுத்துறை நகரிலுள்ள பாட சாலைகளுக்கு மாணவர்களை ஏற்றிவரும் பஸ்கள் திடீர் பரி சோதனை செய்யப்பட்டன. 75 பாடசாலை வாகனங்கள் வாகனப் பரிசோதனை அதிகாரிகளா லும், களுத்துறை தெற்கு போக்கு வரத்துப் பிரிவு பொலிஸாரினா லும் பரிசோதனை செய்யப்பட் டன.

3 பஸ்கள் பாடசாலை சேவைக்கு உகந்ததல்ல என்று இந்தச் சோதனையின் போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவற்றைச் சேவையிலி ருந்து அகற்றிவிடவும் உரிமை யாளர்களுக்கு அறிவுரை வழங் கப்பட்டுள்ளது. பஸ்களின் சில் லுகள் தரமானதாக இல்லாமை, ஆசனம் இடவசதி இன்மை, உதிரிப்பாகம் உட்பட பல குறை பாடுகள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன.

ஏனைய 72 வாகனங்களில் உள்ள குறைபாடுகளை 10 நாள் களுக்குள் நிவர்த்தி செய்து கொள் ளுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

# மிளகின் விலை அதிகரிப்பு

மிளகு கிலோ 1000 ரூபாவால் உயர்ந்துள்ளதாக கொஸ்லாந்தை விவசாயிகள் தெரிவிக்கின்றனர். கடந்த வருடத்தைவிட இந்த வருடம் மிளகின் விலை 3 தொடக்கம் 4 மடங்காக உயர்ந்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (ச-5)

# ஹெரோயின் விற்ற மூன்று பேர் கைது

கொழும்பு,ஒக்.21

காலி, கராப்பிட்டிய வைத்தியசாலை யின் விடுதி ஒன்றில் ஹெரோயின் விற்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூவரைக் காலி குற்றத்தடுப்புப் பிரிவினர் கைதுசெய்ததுடன் அவர்களிடமிருந்து மூன்று பைக்கற் ஹெரோயினையும் கைப்பற்றினர்.

இவர்கள் விடுதி யில் உள்ளவர்களுக்கு ஹெரோயின் விற் பதை அவதானித்த வர்கள் காலி பொலி ஸாருக்குத் தகவல் கொடுத்ததையடுத்தே மூவரும் கைது செய் யப்பட்டனர்.

கைது செய்யப் பட்டவர்கள் போத் தல் மற்றும் வஞ்சா வல பிரதேசவாசி களாவர்.

காலி பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரி வின் பொறுப்பதி காரி பிரியந்த குண சேகரவின் தலைமை யில் மேலதிக விசா ரணைகள் நடை பெற்று வருகின்றன.

Computer Express
Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணினி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 3000/=
Diploma in Multimedia 4Months 3000/=

பதிவுகளுக்கு முந்துங்கள்

Diploma in Computerized Accounting
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.

C,C++,Java,Java Script,VB,Html, ஆகிய Programming Language கற்கை நெறிகள்
University of Madras Bsc பட்டதாரியினால் விரிவுரைகள் வழங்கப்படும்

Batch I -22.10.2011:- 11am or 3Pm Batch II 26.10.2011:- 9 am or 3Pm
Batch III -23.10.2011:- 11am or 3Pm Batch IV 28.10.2011:- 9 am or 3Pm

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

# 24 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

21.10.1987, 22.10.1987 அன்று கடமையின்போது மரணித்த யாழ்.போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்களை நெஞ்சநெகிழ்வுடன் நினைவு கூருகின்றோம்.

01. வைத்திய நிபுணர் அ.சிவபாதசுந்தரம்
02. வைத்திய நிபுணர் கே.பரிமேலழகர்
03. வைத்திய நிபுணர் கே.கணேசரத்தினம்
04. திருமதி பா.வடிவேல்
05. செல்வி இ.மங்கையற்கரசி
06. செல்வி மு.லீலாவதி
07. திரு.கே.செல்வராசா
08. திரு.கே.கிருஸ்ணராசா
09. திரு.மு.துரைராசா
10. திரு.எம்.சண்முகலிங்கம்
11. திரு.வி.வரதராசன்
12. திரு.கே.வேதாரணியம்
13. திரு.யோன்பீற்றர்
14. திரு.இ.சுகுமார்
15. திரு.க.சிவயோகநாதன்
16. திரு.எஸ்.ஜெகநாதன்
17. திரு.கே.சிவராசா
18. திரு.கோ.உரித்திரன்
19. திரு.க.மார்க்கண்டு
20. திரு.இ.இரத்தினராசா
21. திரு.க.நவரத்தினம்

இவர்களின் ஆத்மா சாந்தி பெறவும் உற்றார், உறவினர் ஆறுதல் பெறவும் இறைவனை வேண்டுகின்றோம்.

பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# அறிவித்தல்

மகேஸ்வரி நிதியம்- அலுவலகம் இடமாற்றம்

இலக்கம் 110, 4 ஆம் குறுக்குத் தெருவில் அமைந் திருக்கும் மகேஸ்வரி நிதியத்தின் வடமாகாண தலை மைக்காரியாலயம் எதிர்வரும் 24.10.2011 திங்கட் கிழமையில் இருந்து இல.70 கோயில் வீதி, யாழ்ப் பாணம்(ஆஸ்பத்திரி வீதிக்கு அருகில்), என்னும் முகவரியில் தனது பணிகளை மேற்கொள்ளும்.

* மணல் பெறும் பயணாளிகளும் மேற்கண்ட புதிய அலுவலகத்திலேயே பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.

த.றஜீவ்
செயற்திட்ட இணைப்பாளர்,
மகேஸ்வரி நிதியம்.

# 31ஆம் நாள் நினைவலைகள்



மண்ணில் 18.01.1925
விண்ணில் 21.09.2011

அமரர் நாகன் வேலுப்பிள்ளை

உன் உணர்வுகள்
உன் தீர்மானங்கள்
என்றும்
மதிப்பார்ந்தவை!

உன் கடின உழைப்பு
உன் குடும்பப்
பொறுப்பு
என்றும்
உதாரணமானவை

உன் அழகும்
உன் முதுமையும்
என்றுமே
பேசப்படுபவை

உன் வாழ்வும்
உன் வளமும்
என்றுமே
நேர்மையானவை.

உன் மரணமும்
உன் மாற்றமும்
என்றுமே
வெற்றிடம் தான்
என்றுமே
ஏமாற்றம் தான்.

ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுல் காந்தி மீது கொலை முயற்சியா?



அமேதி,ஒக்.21

உத்தரப் பிரதேச மாநிலம் அமேதியில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட காங்கிரஸ், பொதுச் செயலர் ராகுல் நிகழ்ச்சி நடத்தவுள்ள மேடைக்கு அருகில் துப்பாக்கியுடன் வந்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர். இதற்கிடையில் ராகுல் கார் மூலம் வந்த போது ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் காரை வழிமறித்தனர். இதனால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

ராகுல் தனது சொந்தத் தொகுதியான அமேதியில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறார். இவர் நேற்று பல நிகழ்வுகளில் பங்கேற்பதாக இருந்தது. இந்த நிலையில் புர்ஷத் கன்ஜ் விமான நிலையத்தில் இருந்து கார் மூலம் அமேதிக்கு வந்து கொண்டிருந்தார். இந்த வேளையில் ஒரு கிராம மக்கள் ராகுலின் காரை வழி மறித்தனர். என்ன விடயம் என்று அவரிடம் கேட்டறிந்தார்.

எங்களுடைய தொகுதியில் இதுவரை எந்தவொரு சரியான வேட்பாளரும் நிறுத்தப்படவில்லை. வரவிருக்கும் சட்டசபைத் தேர்தலிலாவது சரியான நல்லதொரு எந்த குற்றச்சாட்டுக்கும் ஆள்படாத நபரைத் தேர்வு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர். அப்படியே செய்கிறேன் என்று அவர்களை ராகுல் சமாதானப்படுத்தினார். ஹசாரேயின் ஊழல் எதிர் போராட்டம் இந்த அளவிற்கு கொண்டு வந்திருப்பதாக இந்தப் பகுதியினர் பேசிக்கொண்டனர்.

தொடர்ந்து நிகழ்ச்சி மேடைக்கு சென்றபோது அந்த வழியில் கைத்துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்த ஒரு நபரை பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர். அவரிடம் விசாரித்ததில் தனது பாதுகாப்புக்காக அனுமதி பெற்று துப்பாக்கி வைத்திருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். எனினும் அவரிடம் தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது. (வ)

# மன்மோகன் - புத்திசாலி இந்திரா - தைரியசாலி

## பால் தாக்கரே தெரிவிப்பு



பால் தாக்கரே



இந்திரா

மும்பை, ஒக். 21

பிரதமர் மன்மோகன் சிங் புத்திசாலி. ஆனால் மிகவும் சாதுவானவர். மறைந்த பிரதமர் இந்திரா காந்தி பெண் என்றாலும் அவரிடம் தைரியமும் ஆட்சித் திறமையும் இருந்தன என்று சிவசேனா தலைவர் பால் தாக்கரே தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் சிறந்த பிரதமர் யார் என்ற கேள்விக்கு சிவசேனா தலைவர் பால் தாக்கரே பதிலளித்துக் கூறியவை வருமாறு:

பிரதமர் மன்மோகன் சிங் புத்திசாலி. ஆனால் மிகவும் சாதுவானவர். மறைந்த பிரதமர் இந்திரா காந்தி பெண் என்றாலும் அவரிடம் தைரியமும் ஆட்சி திறமையும் இருந்தது - என்றார்.

மேலும், பிரதமர் மன்மோகன் சிங்கின் சாதுக்கு காரணம் சோனியா காந்தியின் அழுத்தங்களாக இருக்கலாம். எனினும், எங்களுக்குத் தெரியாது. ஆனால் அவரின் (மன்மோகன் சிங்) வேலை நன்றாக உள்ளது என தாக்கரே மன்மோகன் சிங்குக்கு பாராட்டுத் தெரிவித்ததார். (வ)

# நீதிமன்றில் ஆஜரான ஜெ. வுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

பெங்களூர், ஒக்.21

சொத்துக் குவிப்பு வழக்கு தொடர்பாக ஜெயலலிதா நேற்று பெங்களூர் தனி நீதிமன்றத்தில் ஆஜரானார். ஆஜராக வந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிராக கர்நாடகத்தைச் சேர்ந்த தலித் அமைப்பு ஒன்று ஆர்ப்பாட்டம் நடத்தியது.

பரமக்குடியில் பொலிஸார் நிகழ்த்திய துப்பாக்கிச்சூடு சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து ஜெயலலிதா ஆஜரான பெங்களூர் பரப்பன்ன அக்ரஹார சிறைக்கு வெளியே சமதாசைனிக் தளம் என்ற தலித் அமைப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தலித்துகள் மீதான தாக்குதலுக்குப் பொறுப்பேற்று முதல்வர் பதவியில் இருந்து ஜெயலலிதா ராஜினாமா செய்ய வேண்டும் என்று அவர்கள் கோஷம் எழுப்பினர். இதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களை பொலிஸார் அங்கிருந்து வெளியேற்றினர். (வ)



திருப்பதியில் காணிக்கை செலுத்துவதற்காக நடிகர் ரஜினிகாந்த் தனது குடும்பத்தினருடன் நேற்றுமுன்தினம் மாலை திருப்பதிக்குச் சென்றார்.

# நிபுணர் குழுவை நியமித்தது அரசு

## கூடங்குளம் அணுமின் திட்ட விவகாரம்:

டில்லி, ஒக்.21

கூடங்குளம் அணுமின் திட்டம் தொடர்பாக மக்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் 15 பேர் கொண்ட நிபுணர் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

முன்னதாக கூடங்குளம் அணுமின் திட்டத்தில் பொது மக்களுக்கு ஏற்பட்ட அச்சத் தைப் போக்க குழு ஒன்று அமைக்கப்படும் என்று பிரதமர் மன் மோகன் சிங் அறிவித்திருந்தார். அவரது உறுதிமொழிக்கேற்ப 15 பேர் கொண்ட நிபுணர் குழுவை அமைத்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. (வ)

# மும்பைக் குண்டு வெடிப்பின் முக்கிய ஆதாரங்கள் சிக்கின

டில்லி, ஒக்.21

டில்லி உயர்நீதிமன்ற வாளக ஐந்தாவது வாயிலில் கடந்த செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி இடம் பெற்ற குண்டு வெடிப்புச்சம்பவம் தொடர்பாசக முக்கிய ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 15 பேர் பலியாகினர் மற்றும் 65 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இதனைத் தொடர்ந்து சம்பவம் குறித்து தேசிய புலனாய்வு அமைப்பு தொடர்ந்து விசாரணை மேற்கொண்டது. மேலும் இந்தச் சம்பவம் தொடர்பாக மூன்று நபர்களையும் கைது செய்தது.

பின்னர் காஷ்மீர் கிஷ்ட்வார் குடியிருப்புப் பகுதியில் ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பில் தொடர்புடைய மருத்துவக் கல்லூரி மாணவர் வாசிம் அகமது என்பவரை கைது செய்தனர்.

அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்திய தேசிய புலனாய்வு அமைப்பு அதிகாரிகள் குழு நேற்றுமுன்தினம் மாலை ஜம்முக்கு சிறப்பு விமானம் மூலம் சென்று வாசிம் அகமது தங்கியிருந்த வீட்டைச் சோதனை செய்தனர்.

அப்போது மூன்று தொலைபேசிகள் மற்றும் சில ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன எனவும், இந்த ஆதாரங்கள் வழக்கில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தி உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக தேசிய புலனாய்வு அமைப்பால் கைது செய்யப்பட்ட மூன்று நபர்களில் ஒருவர் விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# தமிழரின் பண்பாட்டை போராலும் அழிக்க முடியவில்லை

## இலங்கைத் தமிழர்கள் பற்றி கர்நாடக இசைக்கலைஞர் டி.எம்.கிருஷ்ணா

சென்னை, ஒக். 21

இலங்கையில் உள்ள தமிழர்கள் அங்கு நடை பெற்று முடிந்த போரால், சொந்தம், சொத்து என அனைத்தையும் இழந்திருந்தாலும் தங்களது கலாசாரத்தையும் பண்பாட்டையும் இழக்கவில்லை என கர்நாடக இசைக் கலைஞர் டி.எம். கிருஷ்ணா தெரிவித்தார்.

அண்மையில் இலங்கையின் பல பாகங்களிலும் இசைக் கச்சேரிகளை நடத்தி முடித்து தற்போது நாடு திரும்பியுள்ள கிருஷ்ணா இந்த இசைப் பயணம் குறித்து தமிழக ஊடகம் ஒன்றுக்கு பேட்டியளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

**கே**- இலங்கைக்குச் சென்று இசை நிகழ்ச்சி நடத்தக் காரணம் என்ன?

**ப**- கடந்த ஆண்டு இலங்கைத் தமிழ் தலைவர் நீலன் திருச்செல்வம் நினைவு தினத்தை முன்னிட்டு, கொழும்பில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பாடினேன். அப்போது அவரின் மனைவி மற்றும் இந்தியத் தூதரக அதிகாரி அசோக் கே. கந்தா ஆகியோர் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, வடக்கு மாகாணத்துக்குச் சென்று பாடுமாறு வலியுறுத்தினர். அப்போது என்னால் போகமுடியவில்லை. அதனால், இப்போது சென்று வந்தேன். என்னுடன், வயலின் அக்கரை சுபலஷ்சுமி, மிருதங்கம் கல்லிடைக்குறிச்சி சிவகுமார், கஞ்சிரா ஆலத்தூர் ராஜகணேஷ், கடம் கிரிதர் உடுப்பா ஆகியோர் வந்தனர்.

**கே**- இலங்கையில் எந்தெந்தப் பகுதிகளில் சென்று இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது?

**ப**-நவராத்திரியை முன்னிட்டு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களில் நடத்த இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன்.

**கே**- இசை நிகழ்ச்சியின் போது, இலங்கைத் தமிழர்களின் உணர்வு எப்படி இருந்தது?

**ப**- போரால் பாதிக்கப்பட்டிருந்தாலும், அதனால் மக்கள் இடம்பெயர்ந்திருந்தாலும், தமிழ் மற்றும் தமிழிசையின் மீது அவர்கள் கொண்ட ஆர்வம் குறையாமல் உள்ளது. போரால் சொந்தம், சொத்து என அனைத்தையும் இழந்த மக்கள் தங்கள் கலாசாரம் மற்றும் பண்பாட்டை இழக்கவில்லை என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது

**கே**- என்னென்ன பாடல்கள் பாடினீர்கள்?

**ப**- தமிழ் மற்றும் தமிழிசைப் பாடல்கள் மட்டும் தான் பாடினேன். சமஸ்கிருதம், தெலுங்கு மொழிகளில் ஒரு பாடல் கூடப் பாடவில்லை.

**கே**- இசை நிகழ்ச்சி இல்லாமல் எங்கு சென்றீர்கள்?

**ப**- யாழ்ப்பாணத்தில் உள்ள பழமைவாய்ந்த ராமநாதன் இசைக் கல்லூரிக்குச் சென்றேன். அங்கு, 1960 முதல் 67 ஆம் ஆண்டு வரை முதல்வராக பிரபல இசைக் கலைஞர் மகாராஜபுரம் சந்தானம் இருந்துள்ளார். அங்குள்ள மாணவர்களுடன் பாடல் மற்றும் இசை சம்பந்தமாக சிறிது நேரம் பேசியது மனதுக்கு நிம்மதியாக உள்ளது.

**கே**- போரினால் பாதிக்கப்பட்ட மக்கள், தற்போதைய தேவையாக எதைக் கருதுகின்றனர்?

**ப**- நிம்மதி... அமைதி... இது தான் அவர்களின் பிரதான தேவையாக உள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தற்போதைய தேவையாக இசையுள்ளது. இசை மூலம் அமைதி திரும்பும் எனக் கருதுகின்றனர்.

**கே**- உங்கள் இசைக் கச்சேரிக்கு, அவர்களிடம் வரவேற்பு இருந்ததா?

**ப**- மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து, நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். யாழ்ப்பாணத்தில், நிகழ்ச்சி முடிந்த பிறகு மேடையேறி அனைவரும் பாராட்டினர். கிளிநொச்சியில் நடந்த கச்சேரியில் பங்கு கொள்ளத் தனியாக வாகனத்தையும் ஏற்பாடு செய்தனர். வவுனியா, யாழ்ப்பாணத்தில் அரங்கம் நிறைய மக்கள் கூட்டம் காணப்பட்டது. போரால் அதிகம் பாதிக்கப்பட்ட, கிளிநொச்சியில் குறைவாக இருந்தாலும், அப்படிப் பட்ட சூழலிலும் மக்கள் வந்தது உற்சாகத்தைத் தந்தது. பாதிக்கப்பட்ட தமிழர்கள், 'கஷ்டப்படும் எங்களுக்காக, இவ்வளவு தூரம் வந்து, இசைக் கச்சேரி நடத்தினீர்கள். அதுவும், தமிழ்க் கச்சேரி நடத்தியதற்கு மிக்க நன்றி' என்றனர்- என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
21 ஒக்ரோபர் 2011 வெள்ளிக்கிழமை

# டெங்கு நோய் பரவலைத் தடுக்க பிரதேசத்தை சுத்தமாக வைத்திருங்கள்

## பருவமழை ஆரம்பித்துள்ளதால் எச்சரிக்கை

பருவமழை ஆரம்பித்துள்ளதால் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் டெங்கு நோய்களிலிருந்து மக்களை காப்பாற்றும் வகையில் பிரதேசத்தைச் சுத்தமாக வைத்திருப்பது எமது கடமையாகும். எனவே அதற்கேற்றவாறு வீதிகளிலும் சுற்றாடல்களிலும் குப்பையைத் தேங்கவிடாது உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும்.

இவ்வாறு வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஆ.சி.கணே சவேல் சுற்றுச் சூழல் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவித்தார்.

பிரதேசசபை மண்டபத்தில் தலைவர் அ.ஜெபநேசன் தலைமை யில் நடைபெற்ற கூட்டத்தில் சுகாதாரக்குழு உறுப்பினரான ஆ.சி.கணேசவேல் மேலும் கூறியதாவது:

மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகச் செயற்பட வேண்டும். அவர்களுக்கு ஏற்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகளை ஆராய்ந்து செயற்பட வேண்டும். மழை காலங்களில் தொற்று நோய்ப் பரம்பல் ஏற்பட வாய்ப்புண்டு. டெங்கு நோய்த்தாக்கம் தற்பொழுது கட்டுப் பாட்டிற்குள் வந்துள்ளது. இதைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும்.

எனவே, சுற்றுச் சூழலைப் பாதுகாப்பாக வைப்பதற்கு வீதிகளிலும் சுற்றாடல்களிலும் தேங்கிக் கிடக்கும் குப்பையை உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும். இதன் மூலம் நுளம்பின் உற்பத்தியைக் கட்டுப்படுத்த முடியும்.

சாவல் கட்டு கிராமத்தில் மக்கள் நெருக்கமாக வாழ்ந்து வருகிறார்கள். மழை காலங்களில் மழை வெள்ளம் வீதிகளில் தேங்கி நின்று போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதுடன் குடியிருப்புக் காணிகளிலும் வெள் ளம் தேங்கி நிற்கின்றது. எனவே மழை நீர் வழிந்தோடக்கூடிய வகையில் திட்டங்களைத் தயாரிக்க பிரதேச சபை முன்வர வேண்டும்- என்றார்.

(ம-115)

# அரச கொடுப்பனவுக்கான செலவினம் அடுத்த ஆண்டில் ரூபா 35,500 கோடி

கொழும்பு, ஒக்.21

அரச சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளுக்கான செலவினம் அடுத்த ஆண்டில் 35 ஆயிரத்து 500 கோடி ரூபாய்களாகும் என்று கடந்த 18 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள 2012 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு-செலவுத் திட்ட சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரவு-செலவுத்திட்ட சட்டமூலம் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 100 கோடி ரூபாய்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அடுத்த ஆண்டில் ஓய்வூதியச் சம்பளங்களை வழங்குவது தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 10 ஆயிரத்து 800 கோடி ரூபாய்களாகும். 2011 ஆம் ஆண்டில் ஓய்வூதியச் சம்பளங்களை வழங்க அரசு 9 ஆயிரத்து 900 கோடி ரூபாய்களை ஒதுக்கியிருந்ததோடு அதற்குச் சமமாக அடுத்த ஆண்டில் அரசின் ஓய்வூதியச் சம்பளச் செலவினம் 900 கோடி ரூபாய்களால் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த ஆண்டில் கடன் வட்டிகளைச் செலுத்துவது தொடர்பாக அரசு 37 ஆயிரம் கோடி ரூபாய்களை ஒதுக்கியுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான உரமாணிய விநியோகத்துக்கு மூவாயிரத்து 500 கோடி ரூபாய்களும் மருந்து வகைகளின் விநியோகத்துக்கு ஆயிரத்து 700 கோடி ரூபாய்களும் ஒதுக்கப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-22)

# மின்கட்டணத்தை உயர்த்த அனுமதி கோரும் அமைச்சர்

கொழும்பு, ஒக். 21

தற்போதுள்ள மின்கட்டணத்தை உயர்த்துவதற்கு மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அனுமதி தேவை என்றும் மின் கட்டணத்தை உயர்த்தாவிடில் அமைச்சு விரைவில் வங்குறோத்து நிலையை அடையும் எனவும் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் மட்டும் இலங்கை மின்சார சபையின் நாளாந்த நட்டம் 16.7 கோடி ரூபா.

பாவனையாளர்கள் நாளாந்தம் சபைக்கு வைக்கும் கடன் சராசரியாக 33 ரூபா.'

மின் கட்டணத்தை அமைச்சால் உயர்த்த முடியாது. அதற்கு மக்கள் மக்கள் பயன்பாட்டு ஆணைக் குழுவின் அனுமதி தேவை. தற்போது ஏற்பட்டுள்ள நட்டம் பற்றி ஆணைக்குழுவுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அனல் மின்உற்பத்தியால் மின்சாரசபை பெரிய நட்டத்துக்கு முகம் கொடுக்கிறது என்பதையும் ஆணைக்குழுவுக்கு தெரிவித்துள்ளோம். தற்போது நிலவும் வரட்சியான காலநிலையால் நீர்மின்சார உற்பத்தி முற்றாகத் தடைப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் 24 மணித்தியாலமும் அனல் மின்னைப் பாவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் நிலமை மேலும் விபரீதமாகும் -என அவர் கூறினார்.

(ம-5)

# தபால் பொதிகளின் வருகை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.21

வெளிநாடுகளில் இருந்து வடபகுதிக்கு வரும் தபால் பொதிகளின் எண்ணிக்கை தற்போது திடீரென அதிகரித்துக் காணப்படுவதாக

யாழ். சுங்கத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் 20 ஆம் திகதி யாழ்.பிரதம தபாலகத்தில் சுங்கப் பகுதியின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

கட்டுநாயக்கா விமானநிலையத்தில் இருந்தே வடபகுதிக்கான தபால் பொதிகள் எவ்வித சோதனையும் இன்றி இங்கே உடன் எடுத்து வரப்படுகின்றன.

இவை சுங்கப் பகுதியினரின் சோதனையின் பின்னர் உடனே உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

தற்போது தீபாவளிப் பண்டிகைக் காலம் ஆகையால் வடக்கே வரும் தபால் பார்சல்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துக் காணப் படுகின்றது.தொலைக்காட்சி, மற்றும் கைத்தொலைபேசிகள் என்பனவும் இவ்வாறு வந்து சேர்வதாகக் கூறப்படுகிறது.

கிளிநொச்சி, வவுனியா , மன்னார், முல்லைத்தீவு போன்ற பகுதிகளுக்குரிய தபால் பொதிகள் உடனடியாகவே சோதனையின் பின்னர் தபால் வாகனம் மூலம் அனுப்பி வைக்கப் படுகின்றன. என்றும் கூறப்பட்டது.

(ம-26)


## சாரதி தேவை

எமது நிறுவனத்துக்கு டிலிவரி வாகனம் செலுத்தக் கூடிய சாரதி தேவை. அனுபவச் சான்றிதழுடன் நேரில் வரவும்.

**மீடியா எலக்ரோ மாட்**
No.1 - 1, 1-H, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


# இரவில் மின்தடையால் சிரமம்

யாழ்ப்பாணம், ஒக்.21

மின்சாரம் தினமும் இரவு வேளைகளில் தடைப்படுவதால் தமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்படுவதாகப் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

தினமும் மாலை 6 மணிக்கு பின்னர் தடைப்படும் மின்சாரம் இரவு 10 மணிக்கு பின்னரே மீண்டும் வருகின்றது. இந்த நேரப் பகுதியிலேயே பிள்ளைகள் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இந்த விடயம் தொடர்பாக தாம் பல தடவை மின்சார சபைக்குள் எடுத்துக் கூறியும் அதனை அவர்கள் பொருட்படுத்தவில்லை என யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-323)







## தவறிவிட்டது

101, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுபாஜினி ஆறுமுகம் என்பவரது மோட்டார் சைக்கிள் ஆவணங்களுடன் சாரதி அனுமதிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை (776033073v) வங்கிக் கணக்குப் புத்தகங்களும் கைப்பையுடன் திருநெல்வேலி பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும்.

தொடர்பு இல:

021 - 222 3280, 077 9254914


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
06 . 02 . 1948



மறைவு
31 . 10 . 2010

அமரர்

**செல்லத்துரை இராசலிங்கம்**

*ஆண்டு ஒன்று ஆனாலும்*
*ஆறவில்லை எம் துயரம்*
*உங்கள் நினைவுகள் என்றும்*
*எங்கள் நினைவில் அகலவில்லை*

கைதடி,
நாவற்குழி தெற்கு,
கைதடி.

என்றும் நினைவுகளுடன்
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை தில்லைநாதன்
(கணக்காளர்)



யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது ஆஸ்திரேலியா சிட்னியில் வசித்தவருமாகிய கணபதிப்பிள்ளை தில்லைநாதன் 18.10.2011 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-கண்ணம்மா தம்பதியரின் ஏக புத்திரனும் கொக்குவில், குளப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அப்பையா தம்பதியரின் மருமகனும் காலஞ் சென்ற ரூபவதியின்(முன்னாள் ஆசிரியர்- கொழும்பு குட்செபேட் கொன்வன்ற்) கணவரும் சுபோதினி, ஷாலினி, தயாளினி, குமரேசன் ஆகியோரின் அன்புத்தந்தையும் கௌரிபாலன், அருள்நந்தி, விக்னேஸ்வரன் ,ராதிகா ஆகியோரின் மாமனும் அஞ்சலி, சிவசங்கரி, வைஷ்ணவி, துளசி,ஜெசுவி,ஜெடின் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கனகாம்பிகை மகேசன்,லீலாவதி பரராஜசேகரம் , ஞானாம்பிகை கனகரட்ணம், திலகவதி நாகரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான துரையப்பா- நாகம்மா, சண்முகம்-தங்கச்சியம்மா ஆகியோரின் பெறாமகனும் காலஞ் சென்ற சின்னப்பு சுப்பிரமணியம் அவர்க்ளின் மருமகனும் காலஞ் சென்றவர்களான செல்வி.விஜயலக்சுமி, ராசலக்சுமி பாலசிங்கம், சீவலக்சுமி நடராசா மற்றும் சண்முகம் தணிகாச்லம், சண்முகம் முத்துலிங்கம் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியா சிட்னியில் நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*528, பலாலி வீதி,*
*திருநெல்வேலி*

*தகவல்:*
*ச.தணிகாசலம் J.P*
*(சகோதரன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றிணைந்து பேரிடரை சமாளிப்போம் வாரீர் அழைக்கிறார் தாய்லாந்துப் பிரதமர் யிங்லக்



பாங்கொக், ஒக்.21
தாய்லாந்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தப் பேரிடரைச் சமாளிக்க அனைத்துத் தரப்பினரினதும் ஒத்துழைப்பு அவசியம் என்கிறார் தாய்லாந்துப் பிரதமர் யிங்லக் சினவத்ரா.

கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவு வரலாறு கண்டிராத வெள்ளப் பெருக்கை சந்தித்துள்ளது தாய்லாந்து. இந்த வெள்ளப்பெருக்கில் சுமார் 300க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகள் மற்றும் வாழ்வாதாரங்களை இழந்துள்ளனர். வெள்ள நிவாரணப் பணிகளை மிகவும் தீவிரமாக அரசு முடுக்கிவிட்டுள்ள போதிலும் பல இடங்களில் இன்னும் தேவையான உதவி சென்றடையவில்லை என்று தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் தாய்லாந்தில் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசிய பிரதமர் யிங்லக், இந்தச் சூழ்நிலையை எதிர்கொள்ள நான் எடுக்காத முயற்சிகள் இல்லை. ஆனால் இந்தப் பிரச்சினையை என்னால் தனியாகத் தீர்த்துவிட முடியாது. அனைத்துப் பகுதிகளிலும் இருந்து எனக்கு ஒத்துழைப்புத் தேவை. அரசியலை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு மக்களின் தேவைகளை நிறைவேற்ற முயற்சி எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இதனிடையே இன்னும் 24 மணிநேரங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் இருப்பதாக எச்சரிக்கை விடப்பட்டுள்ளதால் மக்கள் அனைவரும் தத்தம் இடங்களில் உள்ள மின் சாதனங்களை அணைத்து விடுமாறும் தாழ்வான இடங்களில் உள்ளவர்கள் உடனடியாக வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

கடந்த மூன்று மாதங்களாக தாய்லாந்தைப் புரட்டி போட்ட கன மழையால் வடக்கு மற்றும் மத்திய தாய்லாந்தில் மில்லியன் கணக்கான மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். (ந)

# கிரீஸில் அரசுக்கு எதிராக இரு நாள் பணி நிறுத்தம்

எதென்ஸ், ஒக்.21
கிரீஸ் நாடாளுமன்றில் சிக்கன நடவடிக்கைகளுக்கான இரு முக்கிய மசோதாக்கள் நிறைவேற்றப்பட உள்ளன. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதுமான 48 மணி நேர வேலை நிறுத்தப் போராட்டம் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

இதன் போது விமானப் போக்குவரத்து முதல் அனைத்து பணிகளும் நிறுத்தப்பட்டு முக்கிய நகரங்களில் லட்சக்கணக்கில் மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சர்வதேசநிதியமைப்பு, ஐரோப்பிய யூனியன் மற்றும் ஐரோப்பிய மத்திய வங்கி ஆகிய மூன்று அமைப்புக்களின் நிபந்தனைகளை முழுமையாக அமுலாக்கும் விதத்தில், இரு மசோதாக்கள் கிரீஸ் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட உள்ளன. ஒரு மசோதாவில், வரி உயர்வு, ஓய்வூதியம், சம்பளம் குறைப்பு, ஒப்பந்தத் தொழிலாளர்களை பணியிலிருந்து நீக்குவது உள்ளிட்டவையும் மற்றொரு மசோதாவில் 7 லட்சத்து 50 ஆயிரம் பேர் அரசு ஊழியர்களில், 30 ஆயிரம் வேலையிலிருந்து நிறுத்துவது, குறைந்த சம்பளத்திலான பணிகள் உள்ளிட்டவையும் அடங்கியுள்ளன.

ஏற்கனவே உயர்த்தப்பட்ட வரி, குறைக்கப்பட்ட சம்பளம் இவற்றை எதிர்த்து, கடந்த பல மாதங்களாக அரசு ஊழியர்கள் அவ்வப்போது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தனர். அரசின் சிக்கன நடவடிக்கைகள் மேலும் அதிகரிக்கும் சூழலில், அரசு மற்றும் தனியார் துறையினர் ஒன்றிணைந்து தங்கள் எதிர்ப்பை அரசுக்குக் காட்டும் வகையில், நேற்று முதல் 48 மணி நேர வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். (ந)

# மக்கள் கிளர்ச்சிகளை அடக்க ஆயுதம் விற்ற ஐரோப்பிய நாடுகள்

## சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையில் அம்பலம்

ஜெனீவா, ஒக்.21
மக்கள் கிளர்ச்சிக்கு எதிராகத் தாக்குதல் நடத்தும் மத்திய கிழக்கு, வட ஆபிரிக்க நாடுகளின் இராணுவங்களுக்கு அமெரிக்கா, ரஷ்யா உட்பட பல ஐரோப்பிய நாடுகள் ஆயுத விநியோகம் செய்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.

மக்கள் கிளர்ச்சி மீது தாக்குதல் நடத்தப்பட்ட பஹ்ரைன், சிரியா, எகிப்து, ஏமன் மற்றும் லிபியா ஆகிய நாடுகளின் இராணுவங்களுக்கு கடந்த 2005ஆம் ஆண்டு தொடக்கம் ஆயுதம் விநியோகிக்கும் நாடுகள் குறித்த விவரத்தை 'மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவுக்கான ஆயுதப் பரிமாற்றம்' என்ற தலைப்பில் சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் ஏமன் அரசுக்கு பல்கேரியா, செக் குடியரசு, ஜேர்மன், இத்தாலி, ரஷ்யா, துருக்கி, உக்ரைன், பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் விநியோகித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதேபோன்று சிரியாவுக்கு அதிகம் ஆயுதம் விநியோகிக்கும் நாடாக ரஷ்யா காணப்படுகிறது. இதேபோன்று இந்தியா சிரியாவுக்கு இராணுவத் தளபாடங்களை வழங்குவதாகவும், 2005 முதல் 2009 ஆண்டு வரை பிரான்ஸ் வெடிமருந்துகளை விற்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மக்கள் கிளர்ச்சி ஏற்பட்ட எகிப்து அரசுக்கு அதிகம் ஆயுத விற்பனையில் ஈடுபட்ட நாடாக அமெ ரிக்கா பதிவாகியுள்ளது.

மேலும் மக்கள் கிளர்ச்சி ஏற்பட்ட லிபியாவில் மும்மர் கடாபி அரசுக்கு 2005 முதல் ஆயுதம் விநியோகித்த 10 நாடுகளை மன்னிப்புச் சபை அடையாளப்படுத்தியுள்ளது.

இந்த நாடுகளில் பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி, ரஷ்யா, ஸ்பெயின் மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் உள்ளடங்குகின்றன.

எனினும் கடாபி ஆதரவுப் படையினரிடம் கண்டுபிடிக்கப்பட்ட கனரக ஆயுதங்கள் சோவியட் ரஷ்யா காலத்தில் உற்பத்தியானவை எனக் கூறப்பட்டுள்ளது. (ந)



குரோஷியா ஜாக்ரெப் நகரில் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் அந்தநாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் கோரன் ஜான்டர் கோவின் (வலது)பின்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் எர்கி டௌமியோ ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

# சீனாவின் முடிவால் இந்தியா அதிர்ச்சி

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர நாடுகளின் வரிசையில் இந்தியா இடம்பெற சீனா உதவி செய்யும் என்று நம்பிக்கையுடன் இருந்த நேரத்தில் சீனா திடீரென பாகிஸ்தானுக்கு ஆதரவு அளித்துள்ளதால் இந்தியா அதிர்ச்சியடைந்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென வளர்ந்து வரும் இந்தியா போன்ற நாடுகள் வேண்டுகோள் விடுத்து வந்தன. இந்தியா உறுப்பு நாடுகளின் வரிசையில் இடம் பெறுவதற்கு சீனா உட்பட பல்வேறு நாடுகளின் ஆதரவை கோரியிருந்தது. இந்தக் கோரிக்கைக்கு ஆதரவு நிலையில் இருந்து சீனா திடீரென தன் முடிவை மாற்றிக் கொண்டுள்ளது. அதுமட்டுமன்றி பாகிஸ்தானுக்கு ஆதரவு வழங்கப் போவதாகவும் தெரிவித்துள்ளது. இது குறித்து சீனாவின் வெளியுறவுத்துறைச் செய்தி தொடர்பாளர் ஜியாங்யூ கூறியதாவது: சீனாவும் பாகிஸ்தானும் ஒத்த கருத்துக் கொண்டவையாக திகழ்ந்தாலும் இந்தியா நிரந்தர உறுப்பு நாடாவதற்கு சீனா எவ்வித உறுதியையும் அளிக்கவில்லை என்றார்.

# புக்கர் விருது பிரிட்டிஷ் எழுத்தாளருக்கு

லண்டன், ஒக்.21
ஆங்கில இலக்கியத்துக்காக வழங்கப்படும் உயரிய விருதான புக்கர் விருது பிரிட்டன் எழுத்தாளர் ஜூலியன் பர்னஸ் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.அவரது சென்ஸ் ஒப் அன் என்டிங் என்ற நாவலுக்காக இந்தப் பரிசு வழங்கப்பட்டது.

சிறந்த ஆங்கில நாவல்களுக்கு ஆண்டுதோறும் உயரிய பரிசான புக்கர் பரிசு வழங்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான பரிசை பிரிட்டன் எழுத்தாளர் ஜூலியன் பர்னஸ் வென்றுள்ளார். லண்டனில் நடந்த விழாவின் போது இவருக்கான பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

ஜூலியன் ஏற்கனவே 1984, 1998, 2005 ஆகிய ஆண்டுகளில் இந்தப் பரிசுக்கான இறுதிப் பட்டியல் வரை சென்று வாய்ப்பை இழந்தவர். தற் போது அவரது கனவு நிறைவேறியுள்ளது.

ஜூலியன் பர்னஸ், 10 நாவல்கள், 3 சிறுகதை புத்தகங்கள் படைத்துள்ளார். அவரது படைப்புகள் 30க்கும் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. (ந)

# பாக்.இராணுவத் தளபதி கயானி அமெரிக்காவுக்கு கடும் எச்சரிக்கை

இஸ்லாமாபாத்,ஒக்.21
அமெரிக்கா தரைவழித் தாக்குதலை தொடங்குவற்கு முன் ஒன்றுக்கு 10 முறை யோசிப்பது நல்லது என்று பாகிஸ்தான் ராணுவத் தளபதி அஷ்பாக் பர்வேஸ் கயானி, அமெரிக்காவுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தானின் வடக்கு வஜீரிஸ்தான் எல்லை அருகில் அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள், இவ்வளவு தீவிரமாக குவிக்கப்பட்டது இதுவே முதன் முறை என்பதால், இரு தரப்பிலும் பதற்றம் நிலவுகிறது. இந்தநிலையில் பாகிஸ்தான் ராணுவத் தளபதி கயானி அமெரிக்கா தரைவழித் தாக்குதல் நடத்துவதற்கான வாய்ப்பு இருப்பதை மறுக்கவில்லை. இதுகுறித்து அவர் கூறியதாவது

''அமெரிக்கா தரைவழித் தாக்குதல் நடத்தக்கூடும். ஆனால், அதைச் செய்வதற்கு முன் அவர்கள் ஒன்றுக்கு 10 முறை யோசிப்பது நல்லது. ஏனெனில் பாகிஸ்தான், ஈராக்கோ அல்லது ஆப்கானிஸ்தானோ அல்ல'' என்றார்.

எல்லையில் இருதரப்பிலும் படைகள் குவிக்கப்பட்டதை அடுத்து, பாகிஸ்தான், ராணுவ நிலைக்குழு கூட்டம் நேற்று முன்தினம் நீண்ட நேரம் நடத்தப் பட்டது. அந்தக் கூட்டத்தில் ஒருவர் அமெரிக்காவின் தரை வழித் தாக்குதல் சாத்தியமா எனக் கேட்டதற்கே கயானி இவ்வாறு பதிலளித்துள்ளார். (ந)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்காகப் போராடுவேன்

## ஆங் சான் சூகி சூளுரை



யங்கூன், ஒக்.21
பொதுமன்னிப்பு வழங்கப் படாமல் மியன்மாரில் பல ஆண்டுகளாகச் சிறைத் தண்டனை அனுபவிக்கும் ஏராளமான அரசியல் கைதிகளின் விடுதலைக்காகப் போராடப் போவதாக புதிய முடிவு எடுத்துள்ளார் மியன்மார் நாட்டின் ஜனநாயகத் தலைவி ஆங் சான் சூகி.

அண்மையில்தான் மியன்மார் ஏராளமான அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கியது. இதில் 227 அரசியல் கைதிகள் விடுதலையாகினர். எனினும் சூகியின் தேசிய ஜனநாயகக் கட்சி, மக்கள் யாரை விடுதலை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களோ அவர்கள் இன்னும் விடுதலை செய்யப் படவில்லை என்று அதிருப்தி அடைந்துள்ளது. இதன் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் 1988ஆம் ஆண்டுப் புரட்சியின் போது கைது செய்யப்பட்ட முக்கிய நபர்கள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. அவர்களுடன் சுமார் 2,000 பேர் இன்னும் அரசியல் கைதிகளாக சிறையில்தான் உள்ளனர் என்று குறிப்பிட்டுள்ள சூகி நாடு உண்மையிலேயே விடுதலையடைய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதனால் தான் அந்த அரசியல் கைதிகளின் விடுதலைக்காகப் போராட நான் விரும்புகிறேன், என்றார்.

சுமார் 6,000 அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டிருந்தும் மிகவும் குறைவான அளவு அரசியல் கைதிகளுக்கு மட்டுமே விடுதலை அளித்திருப்பதும் மிகுந்த வருத்தத்தை அளிப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு வீரர்களைக் கௌரவிக்கும் வர்ண இரவு நிகழ்வுகள் நாளை

வலி.வடக்கு, ஒக்.21

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் வர்ண இரவு நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. வடமாகாண ஆளுநரின் செயலாளரும் கல்விப் பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளருமான இ.இளங்கோவன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த வர்ண இரவு நிகழ்வில் 2010 ஆம், 2011 ஆம் ஆண்டுகளில் தேசிய மட்டம், மாகாண மட்டங்களில் விளையாட்டுத் துறையில் சாதனைகளை வெளிப்படுத்திய வட மாகாண கல்வித் திணைக்களப் பாடசாலைகளின் விளையாட்டு வீர, வீராங் கனைகள் கௌரவிக்கப் படவுள்ளனர்.

அத்துடன் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் கீழ் தேசிய மட்டம் மற்றும் மாகாண மட்டத்தில் சாதனைகள் புரிந்தவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

2010 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மற்றும் பெண்கள் பிரிவில் 3 ஆம் இடத்தைப் பெற்ற வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம் ஆகியனவும் கௌரவிக்கப்படவுள்ளன.

ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் 17 வயதுப் பிரிவில் 2 ஆம் இடத்தைப் பெற்ற மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி, 19 வயதுப் பிரிவில் 3 ஆம் இடத்தைப் பெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியனவும் கௌரவிக்கப்படவுள்ளன.

தேசிய மட்டத்தில் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் பதக்கங்கள் வென்ற 17 வீர, வீராங்கனைகளும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

2011 ஆம் ஆண்டில் தேசிய மட்டத்தில் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் முதலிரு இடங்களைப் பெற்ற மானிப்பாய் மகளிர் கல்லூரி, வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம் மற்றும் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி ஆகியன பாராட்டப்படவுள்ளதுடன் 19 வயதுப் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் பதக்கத்தை வென்ற மன்னார் சேவியர் ஆண்கள் கல்லூரியும் கௌரவிக்கப்படவுள்ளது.

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற பாரம் தூக்கும் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் ஏ.நிதனும் இதில் கௌரவம் பெறவுள்ளார்.

தேசிய மட்டத்தில் இடம்பெற்ற போட்டிகளில் பதக்கங்களை வென்ற 21 வீர, வீராங்கனைகளும் பாராட்டுப் பெறவுள்ளனர்.

இலங்கை மெய்வன்மைச் சங்கம் தேசிய மட்டத்தில் 2010 ஆம் ஆண்டு நடத்திய போட்டியில் கலந்து கொண்டு பதக்கங்களை வென்ற கனிஷ்ட மெய்வன்மையாளர்களும் சிரேஷ்ட மெய்வன்மையாளர்கள் 6 வீர, வீராங்கனைகளும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

பெண்களுக்கான இலங்கை மெய்வன்மைச் சங்கம் நடத்திய போட்டிகளில் பதக்கங்களை வென்ற 9 வீராங்கனைகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மாகாண மட்டத்தில் வட மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய விளையாட்டுப் போட்டிகளில் 2010 ஆம் ஆண்டு சாதனைகளை ஏற்படுத்திய 18 வீர, வீராங்கனைகளும்,

2011 ஆம் ஆண்டு சாதனைகளை ஏற்படுத்திய 3 வீர, வீராங்கனைகளும் 2010 ஆம் ஆண்டு தேசிய மட்டப் போட்டிகளில் பதக்கம் வென்ற 4 வீர வீராங்கனைகளும் 2011 ஆம் ஆண்டு பதக்கம் வென்ற 2 வீர, வீராங்கனைகளும் சர்வதேச மட்டத்தில் வலைப்பந்தாட்டப் போட்டியில் 6 போட்டிகளில் 290 புள்ளிகளைப் பெற்ற புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த சிவலிங்கம் தர்சினியும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவர்களுடன் தேசிய மட்ட கபடிப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் கூடைப்பந்தாட்டப் போட்டியில் 3 ஆம் இடத்தையும் பெற்ற அணிகள் கபடிப் போட்டியில் தேசிய மட்ட அணியில் இடம்பெற்ற மூன்று வீரர்களும் கௌரவம் பெறவுள்ளனர். (ம-86)

## தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்கள் இன்று கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.21

தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பிரிவினருக்கான உடற்பயிற்சிப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் கல்லூரி அதிபர் கே.ஜேம்ஸ் சிங்கராயர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாக வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-23)

## உதைபந்தாட்டப் போட்டியில் சென்.அன்ரனிஸ் வி.க.வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.21

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (எ-23)

## ஹென்றியரசர் சம்பியன்

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மாதகல் சென். ஜோசப் வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும்வரை இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் போட்டி நிறைவில் புனித ஹென்றியரசர் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

முதல்பாதி ஆட்டத்தில் புனித ஹென்றியரசர் முன் னிலை பெற்ற நிலையில் ஆட்ட நிறைவில் 2:1 என்ற கோல் கணக்கில் மாதகல் சென்.ஜோசேப் வித்தியாலயத்தை வெற்றி பெற்று கோட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ம-86)

## காலிறுதியில் வென்றது ஆவரங்கால் மத்தி வி.க

வலி.வடக்கு, ஒக்.21

மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே முத்துலிங்கம் ஜெகநாதன் வெற்றிக் கிண்ணத்துக்காக இரண்டாவது ஆண்டாக நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி காலிறுதி ஆட்டம் ஒன்றில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று நேர் சுற்றுக்களை முறையே 25:18, 25:22 , 25:19 புள்ளிகள் என்ற அடிப்படையில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றது. (ம-86)

## இன்றைய ஆட்டம்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கும் இடையேயான சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகளில் 14,16,18,21 வயதுப் பிரிவு அணிகள் மோதவுள்ளன. (ம-86)

ஜோர்ஜ் வெப்ஸ்ரார் கிண்ணத்துக்கான

## சிறந்த அணி தெரிவுப் போட்டியில் தெரிவான அணிகளின் விவரம் வருமாறு

யாழ்ப்பாணம், ஒக்.21

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம், யாழ்.மாவட்டத் துடுப்பாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் இரண்டாவது ஆண்டாக ஜோர்ஜ் வெப் ஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவுக்காக 1.1.2011 திகதியிலிருந்து 16.10.2011 திகதி வரையில் 114 போட்டிகள் நடைபெற்றன.

இந்தப் போட்டியின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களில் யாழ். பல்கலைக்கழக அணி 59 புள்ளிகள் பெற்று முதலாமிடத்திலும் ஜொலிஸ்ரார் வி.க. அணி 51:5 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்திலும் கே.சி.சி.சி விளையாட்டுக் கழக அணி 47 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்திலும் உள்ளன.

மற்றைய விளையாட்டுக்கழக அணிகள் பெற்ற புள்ளிகளின் நிலவரம் வருமாறு:

யாழ்.ஜொனியன்ஸ் வி.க அணி 23.5 புள்ளிகளைப் பெற்று 4 ஆவது இடத்திலும் பற்றீசியன்ஸ் வி.க. அணி 22 புள்ளிகளைப் பெற்று 5 ஆவது இடத்திலும் யாழ். சென்றல் வி.க. அணி 21.5 புள்ளிகளைப் பெற்று 6 ஆவது இடத்திலும் ஸ்ரீ காமாட்சி வி.க. அணி 18 புள்ளிகளைப் பெற்று 7 ஆவது இடத்திலும் கிறாஸ் கொப்பர்ஸ் வி.க 17.5 புள்ளிகளைப் பெற்று 8 ஆவது இடத்திலும் சென்றலைட்ஸ் வி.க. அணி 17 புள்ளிகளைப் பெற்று 9 ஆவது இடத்திலும் ஸ்கந்தாஸ்ரார் வி.க. அணி 16 புள்ளிகளைப் பெற்று 10 ஆவது இடத்திலும் உள்ளன.

மேலும் மானிப்பாய் பரிஸ் வி.க. அணி 14 புள்ளிகளைப் பெற்று 11 ஆவது இடத்திலும் யூனியன்ஸ் வி.க. அணி 11.5புள்ளிகளைப் பெற்று 12 ஆவது இடத்திலும் திருநெல்வேலி கிரிக்கெட் அணி 10 புள்ளிகளைப் பெற்று 13 ஆவது இடத்திலும் நியூஸ்ரார் வி.க அணி 7 புள்ளிகளைப் பெற்று 14 ஆவது இடத்திலும் ஸ்ரான்லி வி.க. அணி 5 புள்ளிகளைப் பெற்று 15 ஆவது இடத்திலும் அரியாலை சென்றல் வி.க அணி 3 புள்ளிகளைப் பெற்று 16 ஆவது இடத்திலும் ஒல்ட்கோல்ஸ் வி.க. அணி 1.5 புள்ளிகளைப் பெற்று 17 ஆவது இடத்திலும் வளர்மதி வி.க., கே.சி.சி.சி. வி.க 'பி' பிரிவு அணிகள் இரண்டும் எதுவித புள்ளிகளைப் பெறாத நிலையில் உள்ளனர். முதலாவது இடத்தைப் பெறும் அணிக்கு ஜோர்ஜ் வெப் ஸ்ரார் வெற்றிக் கிண்ணமும் 10 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்படும். 2011 ஆம் ஆண்டு சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று அணிகள் 2012 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் முக்கோணச் சுற்றுப் போட்டியில் விளையாடத் தகுதியுடையவர்கள் ஆவர். (எ-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சொந்த மண்ணில் வைத்து தொடரை வென்றது இந்தியா

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் ஆட்டத்தில் 5 இலக்குகள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது. இதன் மூலம் 5 ஒரு நாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில் 3 - 0 என்ற கணக்கில் இந்தியா தொடரையும் கைப்பற்றியது. இதன் மூலம் இங்கிலாந்து மண்ணில் இழந்த ஒரு நாள் தொடரை இந்திய அணி தனது மண்ணில் வைத்து மீட்டது.

இந்திய அணி முதலிரண்டு ஒரு நாள் ஆட்டங்களை வென்ற நிலையில் நேற்றைய ஆட்டம் மொஹாலியில் ஆரம்பமானது. வென்றாக வேண்டிய கட்டாயத்தில் இங்கிலாந்து அணி களமிறங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

முதலிரண்டு ஒரு நாள் ஆட்டங்களிலும் திணறிய இங்கிலாந்தின் துடுப்பாட்ட வீரர்கள் நேற்று இந்திய அணிக்கு அதிர்சியளித்தனர். அதிரடியாக ஆடிய இங்கிலாந்து அணி 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இங்கிலாந்து அணி சார்பாக ரொரட் 116 பந்துகளில் 8 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 98 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்தார். ரொட்டுடன் இணைந்து மூன்றாவது இலக்குக்காக பீற்றர்ஸன் அதிரடியாய் துடுப்பெடுத்தாடினார். பீற்றர்ஸன் 61 பந்துகளில் 9 நான்கு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 64 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். இறுதியில் சமித் பட்டேல் அதிரடியாக ஆடி இங்கிலாந்தின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். 43 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 7 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 70 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் பிரவீன் குமார், வினய்க் குமார், விராத் ஹோக்லி, ஜடேஜா தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணிக்கு பார்திப் பட்டேல், ரஹானே ஜோடி சிறப்பான அடித்தளம் அமைத்தது. 79 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலேயே இந்திய அணியின் முதலாவது இலக்கு பறிக்கப்பட்டது. பார்திப் பட்டேல் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த கம்பீர், ரஹானேயுடன் இணைந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். இந்த ஜோடியின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இந்தியா வலுவான இலக்கை நோக்கிச் சென்றது. இரண்டாவது இலக்குக்காக 111 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் கம்பீர் 58 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ரஹானே 91 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்து களம் நுழைந்த ரெய்னா ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழக்க இங்கிலாந்தின் கை ஓங்கியது.

அதன் பின்னர் இணைந்த ஹோக்லி, டோனி ஜோடி பொறுப்பாக ஆட்டத்தை முன்னெடுத்தது. இங்கிலாந்து அணி களத்தடுப்பில் சொதப்ப இந்திய அணி அதனை உரிய வகையில் பாவித்து ஆடியது. 30 பந்துகளில் 35 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஹோக்லி ஆட்டமிழந்தார். அதன் பின்னர் நுழைந்த ஜடேஜா, டோனியுடன் இணைந்து இறுதிவரை போராடினார். ஒரு கட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றி பெறக் கூடியநிலை இருந்தும் இங்கிலாந்து அதனை உரிய வகையில் பயன்படுத்தவில்லை. இறுதிக் கட்டத்தில் ஆட்டம் பரபரப்பாக நெருங்கிய போதும் இங்கிலாந்து அணி உதிரிகளை வழங்க அதனை உரிய முறையில் பயன்படுத்திய இந்திய அணி 49.2 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து 300 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை பதிவு செய்தது. டோனி 31 பந்துகளில் 35 ஓட்டங்களையும், ஜடேஜா 24 பந்துகளில் 26 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். பந்து வீச்சில் பின், பிறஸ்னன் 2 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக ரஹானே தெரிவானார். (15)

# ஆபிரிக்காவை வீழ்த்தியது ஆஸி.

தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் மழையின் சதியால் ஆஸ்திரேலிய அணி 93 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்தியது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் செய்து ஆஸ்திரேலிய அணி விளையாடி வருகின்றது. முதலில் இடம்பெற்ற இரண்டு 'ரி-20' ஆட்டங்களிலும் இரு அணிகளும் தலா ஒரு ஆட்டங்களில் வெற்றி பெற்ற நிலையில் நேற்றைய தினம் முதலாவது ஒரு நாள் ஆட்டம் செஞ்சூரியன் நகரில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பல் ஈடுபட தீர்மானித்தது. ஆஸ்திரேலியாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக வோர்னர், பொன்டிங் களமிறங்கினர். 21 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதலாவது இலக்கு சரிக்கப்பட்டது. வோர்னர் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். 17 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக அந்த ஓட்ட எண்ணிக்கையை வோர்னர் பெற்றார். தொடர்ந்து ஆஸ்திரேலியா துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது 19 பந்து பரிமாற்றம் நிறைவில் 96 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மழை குறுக்கிட்டது.

அதன் பின்னர் ஆட்டம் 29 பந்து பரிமாற்றமாக மாற்றியமைக்கப்பட்டது. அதன்படி துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணி 29 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பொன்டிங் 63, கிளார்க் 44, ஹஸி 21 பந்துகளில் 30 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஸ்ரெய்ன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

மீண்டும் மழை பெய்தமையால் தென்னாபிரிக்க அணிக்கு 29 பந்து பரிமாற்றங்களில் 223 ஓட்டங்கள் வெற்றியிலக்கா நிர்ணயிக்கப்பட்டது. கடினமான இலக்கை நோக்கி ஆடிய தென்னாபிரிக்கா 22 பந்து பரிமாற்றங்களில் 129 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. டூ பளஸ்சிஸ் 27, போத்தா 25, அம்லா 24, கலிஸ் 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஆஸ்திரேலியா தரப்பல் ஜோன்ஷன், குமினஸ் தலா 3 இலக்குகளை கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக பொன்டிங் தெரிவானார். இந்த வெற்றியால் 3 ஒரு நாள் ஆட்டம் கொண்ட தொடரில் ஆஸ்திரேலியா 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. (15)

## பாரத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்படுவர். விசாரணை பக்கச்சார்பின்றி இடம்பெறுகின்றது. இதுபற்றிப் பலரும் பலவாறும் கூறலாம். அதற்கு ஒன்றும்செய்யமுடியாது.

பாரதவின் உறவினர்கள் விசாரணையில் திருப்தியில்லை என்று கூறுகின்றனர். அது அவர்களின் உரிமை. பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டுக் கூறுகின்றனர்.

துமிந்த சில்வா ஒரு கைதியாக அரசின் பாதுகாப்பில் வைக்கப்படவில்லை. அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றார். நோயாளியால் தப்பிச்செல்ல முடியாது.

யார் என்ன குற்றச்சாட்டுகளை முன்வைத்தாலும் அரசின் விசாரணைகள் பக்கச்சார்பின்றி நியாயமாகவே இடம்பெறுகின்றன. விசாரணையின் முடிவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றைய பேச்சில் கடுமையான அதிருப்தியை அரசிடம் தெரிவித்திருக்கிறது.

தீர்வுப் பேச்சுகள் ஒரு பக்கம் நடந்துகொண்டிருக்க, மறுபுறம் இவ்வாறான ஒரு தலைபட்ச, இன ரீதியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமானால் அவை பல்வேறு வகையில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும். அதேசமயம், பேச்சுகளில் தமிழர்கள் நம்பிக்கை இழந்துவிடும் அபாயமும் உள்ளது என்று கூட்டமைப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொருட்டு அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் தடைப்பட்டிருந்த பேச்சு நேற்று மீண்டும் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இந்தப் பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரன், ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன் ஆகியோரும், அரச தரப்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் சஜீன், வாஸ் குணவர்த்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரசு தரப்பு பேச்சுக் குழுவுக்கு தலைமை தாங்குபவரும், அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா மற்றும் பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க ஆகியோர் வெளிநாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதால் நேற்றைய பேச்சில் கலந்துகொள்ளவில்லை.

பேச்சு ஒத்திவைக்கப்பட்டமைக்குக் கடும் கண்டனம் தெரிவித்த கூட்டமைப்பு, தொடர்ச்சியாக பேச்சுக்களை முன்னெடுத்தால்தான் விரைவில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் எனத் தெரிவித்திருந்தது. இந்தநிலையிலேயே நேற்று மீண்டும் 12 ஆம் சுற்றுப்பேச்சு ஆரம்பமானது. இதன்போது, பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உதயனுக்குக் கூறியவை வருமாறு:

அரசு-தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையிலான 12 ஆம் சுற்றுப் பேச்சு இன்று (அதாவது நேற்று) இடம்பெற்றது. இதன்போது முக்கிய பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினோம்.

குறிப்பாக-

1. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் காணிப்பதிவு நடவடிக்கையை அரசு உடன் நிறுத்த வேண்டும்.

2. முல்லைத்தீவு மாவட்டத்தில் எல்லைகளை மாற்றி வெலிஓயா எனும் புதிய சிங்கள பிரதேச செயலாளர் பிரிவை அமைக்கும் நடவடிக்கை உடன் நிறுத்தப்படவேண்டும்.

3. மன்னாரில் சிங்கள அரச அதிபரை நியமிக்கும் முயற்சியை கைவிடவேண்டும்.

4. சம்பூர்,முள்ளிக்குளம் ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களை உடனடியாக மீள்குடியமர்த்த வேண்டும்.

இப்படி தமிழர் தாயக பிரதேசத்தில் நிலவும் நடைமுறைப் பிரச்சினைகளை அரச தரப்பிடம் எடுத்துக்கூறினோம். அதுமட்டுமின்றி இந்தப் பிரச்சினைகளுக்கு விரைவில் சாதகமான பதில்கள் வழங்கப்படவேண்டும் என அவர்களிடம் நாம் வலியுறுத்திக் கூறினோம். நாம் முன்வைத்த பிரச்சினைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டுசெல்வதாக அரசதரப்பில் பேச்சில் பங்குபற்றியோர் எமக்கு உறுதியளித்தனர்.

ஒருபுறம் அரசியல் தீர்வுக்காண பேச்சுக்களை முன்னெடுக்கும் அரசு மறுபுறம் காணிப்பதிவு உட்பட தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டால் [illegible] பேச்சுக்களில் நம்பிக்கைவைக்கமாட்டார் என்பதையும் நாம் அவர்களிடம் தெளிவாக எடுத்துக்கூறினோம் - என்றார் அவர். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி சுமதி செல்வரத்தினம்
அவர்களது அன்புத் தந்தை

**பொன்னையா கந்தையா**

அவர்கள் காலமானதையிட்டு
துயரடைவதுடன், அன்னாரது ஆத்மா
சாந்தியடையப் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/கொழும்புத்துறை
இந்து மகா வித்தியாலயம்.

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 | 21 |
| 03 | 09 |
| 1933 | 2011 |



**அமரர் கிருஷ்ணசாமி இராசம்மா (அரியம்)**

கடந்த 21.09.2011 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் கிருஷ்ணசாமி இராசம்மா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தும், இறுதிச்சடங்கில் அஞ்சலி செலுத்த உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு அன்னாரின் நினைவாக இன்று (21.10.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரசுவதி கணபதிப்பிள்ளை

உடையார்வளவு, புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த திருமதி சரசுவதி கணபதிப்பிள்ளை நேற்று (20.10.2011) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட மகளும் காலஞ்சென்றவர்களான சின்னப்பா - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் இராசநாயகம், சந்திராணி, புஸ்பராணி, இரத்தினசிங்கம் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற சாரதாதேவி மற்றும் சின்னப்பா, இரத்தினேஸ்வரன், செந்தமிழ் ஆகியோரின் மாமியும் மஞ்சுளா ரவீந்திரன், தாரணி மயூரன், குமரன், செந்தூரன், ஆரணி, அனுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சஞ்சீவணி, நிலக்ஷி, மதுவந்தி ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் பூபதி, மகேஸ்வரி, இளையதம்பி, சின்னத்தம்பி (ஆஸ்திரேலியா), சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விலங்கன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடையார்வளவு,*
*புன்னாலைக்கட்டுவன் தெற்கு,*
*சுன்னாகம்.*
தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பூபதி ஆசைப்பிள்ளை



6 ஆம் வட்டாரம், மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூபதி ஆசைப்பிள்ளை நேற்று (20.10.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும் நாகலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளையின் அன்பு மனைவியும் இராசம்மாவின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற கனகரட்ணத்தின் அன்பு மைத்துனியும் தேவராசா (சரவணை), காந்தி (நாரந்தனை), ராணி, ஸ்ரீகாந்தராணி, திலகன், திரு (அரியாலை) ஆகியோரின் பாசமிகு தாயும் பாக்கியம் (சரவணை), கமலாதேவி (நாரந்தனை), ராசன், ஞானம், வவி, றஜனி (அரியாலை) ஆகியோரின் மாமியும் வினோ - மணி, அச்சுதன் (மொடோன்ஸ்ஸ்ரைல்), விஜி, ஈசன் (வானுஷா பான்சிகவுஸ்), நிறஞ்சன், நிதர்சன், யசோ, லக்சி - ரூபன் (France), தர்சி - இதயம், கனிஸ்ரா விதுசன், ரதன் (Germany), ஜகீம், சிந்து, கபில், கிரிஷாந் (யாழ். பல்கலைக்கழகம்), லக்சிகா, வேணுகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சானு, விஸ்ணு, லௌசி, கீர்த்திகன், வானுஷா, யனுஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
6 ஆம் வட்டாரம், மண்டைதீவு.
குடும்பத்தினர்.

## சுரேஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பித்திருந்த சுரேஷ் பிரேமச்சந்திரனின் விஸா விண்ணப்பத்தை கனேடியத் தூதரகம் நிராகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-சி)

## கொக்கிளாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையாக எச்சரிக்கை செய்து விடுவித்தார் நீதிவான். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

முல்லைத்தீவு கொக்கிளாய் புளியமுனை ஆற்றுப்பகுதியில் கொக்கிளாய் பகுதி மீனவர்கள் தொழில் செய்து வந்தனர். தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பாவிக்காமல் வீச்சு வலை பாவித்தே இவர்கள் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

எனினும் புல்மோட்டை மற்றும் வெலிஓயா பகுதிகளில் இருந்து கொக்கிளாய் கடலுக்கு வரும் முஸ்லிம், சிங்கள மீனவர்கள் சட்ட விரோத உபகரணங்களான தங்கூசிவலை, மடி வலை, கட்டுவலை, இழுவை மடி, வெளியிணைப்பு இயந்திரம் பொருத்தப்பட்ட படகு ஆகியவற்றைப் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

இது குறித்துப் பலமுறை கொக்கிளாய் மீனவர்கள் பல்வேறு தரப்பினரிடம் முறையிட்டுப் பலன் கிடைக்கவில்லை. மாறாக இப்பகுதிக் கடல் வளம் அழிந்து கொண்டே வந்தது.

இந்த நிலையில் நேற்று இந்தப் பகுதிக்குக் கொழும்பில் இருந்து வருகை தந்த நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளும், முல்லைத்தீவுப் பொலிஸாரும், கொக்கிளாய் மீனவர் சமாசப் பிரதிநிதிகளும் இணைந்து சுற்றி வளைத்து மடக்கிப் பிடித்தனர். இதில் முஸ்லிம், சிங்கள மீனவர்கள் 30 பேர் சிக்கிக் கொண்டனர். இந்தச் சம்பவத்தைக் கேள்வியுற்ற புல்மோட்டை மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் உடனடியாகக் கொக்கிளாய்க்கு விரைந்தனர். அங்கு வந்த அவர்கள் இவ்வாறான சட்டவிரோத மீன்பிடியில் எமது மீனவர்கள் ஈடுபட்டது தவறு என்றும் இனிமேல் அவ்வாறு நடைபெறாமல் பார்த்துக் கொள்வதாகவும் கொக்கிளாய் மீனவர்களிடம் உறுதியளித்தனர்.

இதனையடுத்துக் கைதான 30 பேரில் 20 பேர் பொலிஸாரால் விடுவிக்கப்பட்டனர். மிகுதிப் 10 பேரும் பொலிஸாரால் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களைக் கடுமையாக எச்சரிக்கை செய்த பின்னர் நீதிவான் விடுவித்தார். இவர்கள் அனைவரும் முஸ்லிம்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-6)


## அபூர்வ ஜோதிடம்

அதிக மூச்சு கஷ்ட ஆஸ்மா, பித்தப்பைகல், கொலஸ்ரோல் அடைப்பு , பார்வை இழக்கும் கண்பிறசர், குழந்தையின்மை விசேட சாதனை புரியும் சிகிச்சை முறை.
கிழமை நாள் - 3PM - 7PM
சனி, ஞாயிறு - 8AM - 2PM
உயரப்புலம் பிள்ளையார் கோவிலடி, தபால் பெட்டி லேன்,
ஆனைக்கோட்டை. T.P:0773212740

## பணியாளர் தேவை

01) கணக்காளர் (பெண்)
02) வாகன உதவியாளர் (ஆண்- Salesmen)

யாழ்.மாநகரசபை எல்லைக்கு உட்பட்டவர்கள் சுய விவரங்களுடன் 21.10.2011 பி.ப 3-5 மணிக்கு இடையில் நேரில் வரவும்.

சங்கீதா ஏஜென்ட்,
412,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு:0777570488

## வாகனச் சாரதி தேவை

டிமோ பட்டா ரக வாடகை வாகனம் செலுத்த ஆள்கள் தேவை. சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: T.P. 0771728338

## காணி தேவை

சுன்னாகம் வீதியில், நிலாவரைக் கிணத்துக்கும் நவற்கிரிக்கும் இடையில் 5 பரப்பு அல்லது அதற்குட்பட்ட காணி தேவை. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு: [illegible]


## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி நேசபவானி தியாகச்சந்திரன் அவர்களின் அன்புத் தந்தை

**கதிரவேலு ஆறுமுகம்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்.
பிரதேச செயலகம்,
உடுவில்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவராணி ஜெயபாலன்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவராணி ஜெயபாலன் (20.10.2011) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் ஜெயபாலனின் (ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திருமதி அன்னலெட்சுமியின் பெறாமகளும், வவுனியாவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சிவசேகரம்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான சிவநேயன், சிவேந்திரன் மற்றும் வைத்தியகலாநிதி சிவபாலன், சிவதாசன், சிவானந்தன், சிவசுப்பிரமணியம், சிவகுமாரி, காலஞ்சென்ற சிவகுமாரன் மற்றும் சிவயோகன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் (23.10.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 9/1, கவ்டானா றோட்,
தெஹிவளை.
தகவல்:
கணவர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியும்

### 8 ஆவது பிறந்த தினமும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05.11.2003 | 21.10.2009 |

புன்னகை பூத்த வதனம்
பூப்போலே
விரிந்த உள்ளம்
பட்டாம் பூச்சியாய்
பறந்தவள் - நீ
பாதியில் பிரிந்ததேனோ
எத்தனை ஆசைகள்
கனவுகள் கண்டவள் - நீ
ஆசைகள் நனவாகுமுன்
காலனவன்
சடுதியாய்க் கவர்ந்து
சென்றானே
மனதால் அழுகின்றோம்
ஏங்கித்தவிக்கின்றோம்
அன்புள்ளம் கொண்ட
எம் இனியசாலியே
ஆண்டுகள் இரண்டு
சென்றாலும் உன்
புன்சிரிப்பும் பேச்சும் எம்
மனதை விட்டு என்றும்
நீங்காது.

**அமரர் சி.திசாளினி**

கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சிக்கும்
சிவராசா (அப்பா)
விஜிதா (அம்மா)
தினுசன் (தம்பி)

*சக்கலாவத்தை,*
*கரணவாய் வடக்கு,*
*கரவெட்டி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொல்லப்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாற்பத்தி இரண்டு ஆண்டுகள் லிபியாவை ஆண்ட அவர் கடந்த ஓகஸ்ட் மாதம் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அவரை கைது செய்யுமாறு அறிவித்திருந்தது. கடாபியை தாம் கண்டுபிடித்ததாக தெரிவித்த ராணுவ வீரர் ஒருவர், அவர் பிடிபடுவதற்கு முன் 'என்னை சுடாதே' என்று கூறியதாகப் பிபிசியிடம் தெரிவித்தார்.

**கொண்டாடும் கடாபி எதிர்ப்புப் படைகள்**

மும்மர் கடாபி, 1969 ஆம் ஆண்டு ரத்தமில்லா ராணுவ கிளர்ச்சி மூலம் ஆட்சியைப் பிடித்தபோது அவர் லிபியாவின் மீட்பராகப் பார்க்கப்பட்டார். 27 வயதான இளம் ராணுவத் தளபதியான கடாபி, சக இராணுவத்தினரால் சகோதரத் தலைவர் என்று செல்லமாக அழைக்கப்பட்டார். அந்த அளவுக்கு அவருக்கு நல்லபெயர் இருந்தது. அவரும் ஆட்சிக்கு வந்தபுதிதில் தன்னை மக்கள் தலைவனாகவே காட்டிக்கொண்டார்.

1942 ஆம் ஆண்டு பிறந்த கடாபியின் சரியான பிறந்த நாள் எது என்பது முறையாகப் பதிவு செய்யப்படவில்லை. பெட்டோயுன் பழங்குடி இன பெற்றோருக்கு பிறந்த கடாபி, தனது பழங்குடியினப் பின்னணியை விளம்பரப்படுத்துவதில் பெருமைப்பட்டார். உதாரணமாக தனது விருந்தாளிகளை நாடோடிக் கொட்டகையில் 'வரவேற்பது முதல், தனது வெளிநாட்டுப் பயணங்களில் இந்த கொட்டகையைக் கொண்டு சென்று அதைக் காட்சிப்பொருளாக வைப்பதுவரை தனது சாமானியப் பின்புலத்தை அவர் மறக்காமல் காட்சிப்பொருளாக்குவார்.

ஆனால் அவரது ஆட்சியில் நாட்டில் அரசியல் கட்சிகள் எதையும் அனுமதிக்கவில்லை. அதுமட்டுமல்லாமல் சகிப்புத் தன்மையற்ற அவரது தலைமையிலான ஆட்சியில் எதிர்ப்புக்கே இடமில்லை. எதிர்த்தவர்கள் ஒன்றில் சிறை சென்றார்கள். இல்லாவிட்டால் இரக்கமில்லாமல் கொல்லப்பட்டார்கள்.

**ஆட்சியில் இருந்த கடாபி**

ஆரம்பம் முதலே அவர் சர்ச்சைக்குரிய தலைவராக இருந்தார். மத்திய கிழக்கு பிரதேசத்திலும், உலக அரங்கிலும் அவருக்கு ஆதரவிருந்த அளவுக்கு எதிர்ப்பும் இருந்தது.

அவருக்கும் மேற்குலகுக்குமான மோதல் எண்பதுகளில் உச்சகட்டத்தை அடைந்தது. வெளிநாடுகளில் செயற்பட்டுவந்த ஆயுதக் குழுக்கள் பலவற்றை அவர் ஆதரித்தார். பலஸ்தீன விடுதலை குழுக்களிலிருந்து, அயர்லாந்து ஆயுதக் குழுக்கள் வரை இவரது ஆதரவுப் பட்டியலில் இடம்பிடித்தன. இதனால் பயங்கரவாதிகளின் ஆதரவாளர் என்று மேற்குலக நாடுகள் அவரைப் பல தசாப்தங்களாக திட்டிவந்திருக்கின்றன.

லண்டனில் இருக்கும் லிபியத் தூதரகத்திற்கு வெளியே பிரிட்டன் காவல் துறை அதிகாரி யுவன்னா பிளட்சர் சுடப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து, லிபியாவுடனான தனது உறவைப் பிரிட்டன் முறித்துக்கொண்டது.

நான்காண்டுகள் கழித்து, ஸ்கொட்லாந்தின் லாக்கர்பீ நகரத்தின் மேல் வான்பரப்பில் அமெரிக்க ஜம்போ விமானம் ஒன்று வெடிகுண்டு மூலம் தகர்க்கப்பட்டது. இதில் 270 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு இரண்டு லிபியர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. சர்வதேச அரங்கில் கேணல் கடாபி தீண்டத்தகாதவராக மாறினார்.

ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகு, பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு லிபியா இழப்பீடு வழங்கியத்தைத் தொடர்ந்தும், பேரழிவை உருவாக்கும் ஆயுதங்களை கைவிடுவதாக அவர் ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்தும் அவர் சர்வதேச நாடுகளால் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கூட்டாளியாக அங்கீகரிக்கப்பட்டார். மேற்குலக நாடுகளுடனான உறவிலும் மாற்றம் ஏற்பட்டது.

ஆனால் இத்தகைய சாதகமான மாற்றங்களை அவர் தனது உள்நாட்டு அரசியலில் முன்னெடுக்கவில்லை. விளைவு, வட ஆபிரிக்கப் பிராந்தியத்திலும், அரபுலக நாடுகளிலும் வலுப்பெற்ற சீர்திருத்தக் கோரிக்கைகளின் தாக்கம் லிபியாவில் வலுவடைந்தபோது கடாபியால் அதை எதிர்கொள்ள இயலவில்லை. தனது ஆட்சிக்கு எதிரான ஆர்பாட்டங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க முயன்ற கடாபி, கடைசியில் ஆட்சியில் இருந்து விரட்டியடிக்கப்பட்டு சொந்த ஊரான சித்ரில் சென்று தஞ்சம் புகுந்தார். இறுதியில் அங்கேயே நேற்றுக் கொல்லப்பட்டார்.

கேணல் கடாபி இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய நண்பரும் ஆவார். ஜனாதிபதி மஹிந்த கடாபியுடன் நெருங்கிய தொடர்புகளைக்கொண்டிருந்ததுடன் அவரின் அழைப்பின் பேரில் லிபியாவுக்கும் விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-10)


# மாபெரும் விலைத் தள்ளுபடி

(இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்)

| | | |
|---|---|---|
| இரும்புக் கட்டில் | 6660 | 4250 |
| மரக் கட்டில் | 7250 | 6000 |
| ஸ்ரீல் அலுமாரி | 13500 | 11250 |
| செற்றி செற் | 27000 | 22000 |



(மெத்தை(Arpico), கணினி மேசை, கணினி கதிரை, றெசின்ரேசின், சோக்கேஸ், அபன்ரேபிள், பிளாஸ்ரிக் கதிரைகள், T.V. ஸ்ராண்ட், அலுவலக மேசை, பஞ்சு மெத்தை)



தொடர்புகளுக்கு- 0773583879, 0212227892




### தச்சன் தோப்பு விநாயகர் ஆலயம்
### கரவெட்டி
### வள்ளியம்மன் திருமணப் படனமும் கந்தபுராணப் பூர்த்தியும்

அன்புடையீர்

எதிர்வரும் 23.10.2011 ஞாயிற்றுக்கிழமை வள்ளியம்மன் திருமணப் படனமும் கந்தபுராணப் பூர்த்தியும் சிறப்பாய் நடந் தேற இறையருள் பாலித்துள்ளது.

அனறைய தினம் காலை 6.30 மணிக்கு காலைப் பூசை ஆரம்பமாகும் காலை 7.30 மணியளவில் வள்ளியம்மன் திருமணப் படனம் ஆரம்பமாகி பி.ப. 4.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று எம் பெருமான் எழுந்தருளி உள்வீதி வலம் வந்து அருள் பாலிப்பார்.

பௌராணிகர்களும் ஆர்வலர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

அனைவரும் வருக முருகன் அருள் பெறுக.

ஆலய பரிபாலன சபை,
தச்சன் தோப்பு விநாயகர் ஆலயம்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான கர வருஷம் ஐப்பசி மாதம் 5 ஆம் நாள் நாளை (22.10.2011) சனிக்கிழமை மக நட்சத்திரமும் அமிர்தசித்தயோகமும் பொருந்திய முற்பகல் 11.30 மணி தொடக்கம் 12.47 மணி வரையுள்ள சுப வேளையில் எமது சிரேஷ்ட புத்திரி திருநிறைச்செல்வி



## பவனுஜா



அவர்களுக்கு வண்ணை காமாட்சி அம்பிகை திருவருள் துணை கொண்டு ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான திருமண மண்டபத்தில் பூப்புனித நீராட்டு விழா நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்து உபசாரத்திலும் கலந்து வைபவத்தை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல. 1, சபாபதி லேன்,
பூநாறி மரத்தடி,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை
இனிதே நாடும்:
திரு. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனவர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேறு பகுதி மீனவர்களால் மிக மோசமாகத் தாக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. சட்ட விரோதமாக கொக்கிளாய் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த முஸ்லிம் மீனவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டதைக் கேள்வியுற்றதும் ஆத்திரம் அடைந்த சக மீனவர்கள் சிலர் அங்கு தொழில் செய்து கொண்டிருந்த கொக்கிளாய் தமிழ் மீனவர்கள் நால்வரைப் பிடித்து மிக மோசமாகத் தாக்கியதுடன் அவர்களைத் தூக்கிக் கடலில் வீசியதாக கொக்கிளாய் மீனவர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இது குறித்துப் புல்மோட்டைப் பகுதி மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் முறையிடப்பட்டுள்ளதாக அவர்கள் கூறினர். (த-6)

## கண்ணீர் அஞ்சலி



வண்.ஸ்ரீவிஸ்வலிங்க மகாகணபதி கோயில்
முன்னாள் முகாமையாளர்

**அமரர் ச. பாலசுப்பிரமணியம்**

எமது ஆலயத்தில் நீண்டகாலம் நிர்வாகசபை உறுப்பினராகவும் முகாமையாளராகவும் கோயில் பணிகளில் செயல்பட்ட சு.பாலசுப்பிரமணியம் அவர்கள் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடை கின்றோம். அவர் ஆற்றிய பணிகளை நினைவு கூர்ந்து அவருடைய ஆத்மா சாந்தியடைய பன்றிக் கோட்டுப் பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வண். ஸ்ரீவிஸ்வலிங்க மகாகணபதி கோயில்
(பன்றிக் கோட்டுப்பிள்ளையார்கோயில்)
யாழ்ப்பாணம்.

தர்மகர்த்தா சபையினர்.

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராக (J/100) கடமையாற்றும் க.பஞ்சலிங்கம் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் பொன்னையா கந்தையா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
நல்லூர்.

நல்லூர் பிரதேச செயலக
உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்.

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் சோதிவேல்



குப்பிளான் வடக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கு பாலவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சோதிவேல் நேற்று (20.10.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, கதிரேசு, அருட்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரனும். சாரதாம்பாளின் அன்பு மனைவியும், சிவேஸ்வரன் (ஜேர்மனி) காலஞ்சென்ற சிவாயினியின் (சுயவதனி) அன்புத் தந்தையும் கணேசபாலனின் மாமனும், கயந்தன், சுகந்தி, கபிலன், கௌதமன், சிவப்பிரியா, விதுரா, ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2011) வெள்ளிக்கிழமை பி.ப.4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் மேற்கு,*
*பாலஓடை.*

தகவல்:
மருமகன்.

## பொன்னையா கந்தையா



யாழ். கச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கந்தையா நேற்று (20.10.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும் யோகராசா (கொழும்பு), சிவபாக்கியம், சரஸ்வதி (பிரான்ஸ்), பவளராணி, சாவித்திரி (பிரான்ஸ்), பஞ்சலிங்கம் (கிராம உத்தியோகத்தர் J/100 வண், வட. கிழக்கு), ரூபன் (ஜேர்மனி), சுமதி (ஆசிரியை, யா/கொழும்புத்துறை இ.மி.வித்.) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரா (கொழும்பு), சுந்தரம் (ஓய்வுபெற்ற அதிபர்), மகேந்திரன் (பிரான்ஸ்), மகாதேவன் (தொழிலதிபர்), ரட்ணசிங்கம் (பிரான்ஸ்), ருக்மணி, ராதா (ஜேர்மனி), செல்வரட்ணம் (வெளிவாரிப் பரீட்சை அலகு, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனும் சுகந்தி (ஆசிரியை, யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), அகல்யா (ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), சுஜித்தா (யாழ். பல்கலைக் கழகம்), Dr.துஷாந்தி (BSMS), கௌதமி (ஆசிரியை, யா/புனித ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்), அச்சுதன் (பொறியியலாளர், பிரான்ஸ்), ருஷாந் (பிரான்ஸ்), ஜெய்ஷாந் (பிரான்ஸ்), சுபாங்கி (ஜேர்மனி), வித்தகி (ஜேர்மனி), வைஷாலன், விஷாலன், நிவேதிகா, ரட்ணேஸ்வரன் (விரிவுரையாளர், யாழ். தே.க. கல்லூரி), இராஜ்பாரதி (யாழ். செலிங்கோ), மதன், மோகன் (ஜேர்மனி), செல்வராசா (ஆசிரியர், முல்லைத்தீவு ம.வித்.), கௌசிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் அமிசாதன், சாகித்தியன், சுருதிகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2011) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.5, பென்ரிக்கோஸ்ரல் ஒழுங்கை,*
*கண்டி வீதி, யாழ்ப்பாணம்.*

தகவல்: த.பஞ்சலிங்கம்
(கிராம உ. வண். வட. கிழக்கு).

## மீளப்பெறப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்களுக்கென வழங்கப்பட்ட டிராக்டர்களில் சில உயர் மட்ட உத்தரவின் பிரகாரம் மீளப் பெறப்படுகின்றன.

இவற்றை மீளப் பெற்று வவுனியா மாவட்டத்தின் சேருநுவர பகுதி விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

கமநல சேவை நிலையங்களிடம் இருந்து சில டிராக்டர்களை மீளப் பெறுமாறு முல்லைத்தீவு மாவட்டக் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதனையடுத்து முல்லைத்தீவுக் கமநல சேவை நிலையங்களிடம் இருந்து மீளப் பெறப்பட்ட 10 டிராக்டர்கள் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலைய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

(மற்றொரு செய்தி 10 ஆம் பக்கத்தில்)

(த-6)

தேவை
கொட்டகை அமைப்பதுக்கு பாவித்த தகரங்கள் விலைக்குத் தேவை.
தொடர்பு: 0771807672

e.com
Vacancy.... Call:021-7429005
பதவி வெற்றிடம்....
எமது கணினி நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கான நேர்முகத் தேர்வானது எதிர்வரும் 23-10-2011 நடைபெற உள்ளது. விரும்புவர்கள் தங்களின் சுயவிபரக் கோவையுடன் காலை 10.00 மணிக்கு நேரில் சமூகம் தரவும்.



• Marketing Executive (Male/Female)
• IT Lecturer
• Computer Instructor
• Receptionist
A/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம்
No.95A Temple Road, Nallur, Jaffna

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
MyWay ஆசிரியரிடம் நேரடியாக பயிற்சிபெற.... கடைசி சந்தர்ப்பம்
A/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் நுழைவு மாணவர், பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர் கலந்துகொள்ளலாம்
MyWay இல் நடாத்தப்படும் கடைசி அடிப்படை வகுப்பு ஊடாக பயிற்சியில் சேரலாம்
கடைசி அடிப்படை வகுப்பு : 12.30-2.00 சனிக்கிழமை(22.10.2011)
இந்த அடிப்படைவகுப்பில் கலந்து அதன்பின் வார அல்லது சனிஞாயிறு பிரிவில் சேரலாம்
காலம்: 1-3 மாதங்கள் கட்டணம்: 3000 மட்டும்
திங்கள்,புதன், வெள்ளி - 3 பிரிவுகள் 8-9.30, 9.30-11, 4.00-5.30
சனி, ஞாயிறு - 4 பிரிவுகள் 8-10, 10-12, 2-4, 4-6
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற அரச லிகிதர்)



இல.18 பிரப்பம்குளம் வீதி, வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், அண்ணாமலை வீதி சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற அரச லிகிதர்) (20.10.2011) வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - அன்னபூரணம் (பூமணி) தம்பதியரின் அன்பு மகனும், செல்லத்துரை தம்பதியரின் மருமகனும், சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும், நிறைஞ்சலாவின் அன்புத் தந்தையும், வைத்திய பூபதி - அண்ணாமலை தம்பதியரின் பெறாமகனும், புவனேஸ்வரியின் சகோதரனும், ஐயாத்துரையின் மைத்துனரும் மற்றும் சாந்தன், சாந்தமலர், உமையாள், திருமகள் ஆகியோரின் அன்பு மாமனும், சியாமளன், பூரணி, சாரங்கி, சயந்தூரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2011) வெள்ளிக்கிழமை அண்ணாமலை வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அண்ணாமலை வீதி,
சுதுமலை.

தகவல்:
குடும்பத்தினர்.

### பேரம்பலம் ஜெயந்திமாலா



புளிங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் ஜெயந்திமாலா நேற்று (20.10.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - சிவகாமிப்பிள்ளை மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், சறோஜினிதேவி, ஞானசேகரம், குணசேகரம், தனபூபதி, காந்தரூபி, இ.ராஜசேகரம், பாலசேகரம், ஞானரூபி, ஜெயரூபி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலசுப்பிரமணியம், பாக்கியலெட்சுமி, கு.வனிதா, பாலசிங்கம், காலஞ்சென்ற தேவானந்தன் மற்றும் இ.வனிதா, விஸ்ணுகாந்தி, நாகராஜா, செந்தில்நாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மேகலா, சிவகுமார், சசிகுமார், நிஜிகலா, இந்திரகுமரன் ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2011) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்:
குடும்பத்தினர்.

டைல் (Tile) பதிப்போம்
வீட்டை அழகாக்குவோம்
உங்கள் வீடுகளுக்கும் டைல் பதிக்கும் எண்ணம் வந்துவிட்டதா?
அப்படியானால் நாடுங்கள்...
தரமான டிசைன்களை அள்ளி வழங்கும்
AHIE ZER SUPPLIERS
எய்சர் சப்ளயர்ஸ்
இல.289, பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்
★16 x 16 Tile 194 ரூபாவிலிருந்து 225 ரூபா வரை
★12 x 12 (1 x 1) Tile - 82 ரூபாவிலிருந்து 115 ரூபா வரை
★12 x 8 (1 x 8) Tile 50 ரூபாவிலிருந்து 64 ரூபா வரை
★ 8 x 8 Tile 39 ரூபாவிலிருந்து 50 ரூபா வரை
25 இற்கும் மேற்பட்ட டிசைன்களில் மற்றும் பாத்ரூம் கொமேட் வகைகளும் அனைத்து வகையான பாத்ரூம் பிற்றிங்களும் மலிவான விலைகளில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

விக்னா கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
அளவையியல் - திரு.வாசீஷன் B.A.(HONS)
2012 - குறியீட்டு அளவையியல் 11.AM
2013 - விஞ்ஞானம், விஞ்ஞானமுறை மாதிரிப் பரீட்சைகளும் 12.AM
Sat, Sun
A/L DAY-CLASSES
வெதவிளையில்
ஆரம்பம்: 22.10.2011

விக்னா கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
அரசறிவியல்- திரு.ஸ்ரீரங்கநாத்
A/L - 2012 - 9-10
2013 - 10 - 11
ஆரம்பம்: 22.10.2011
Sat - 9.am

வரணி மிஷன்பாம்
இறைச்சிக்கோழி (Broiler)
முட்டை (Egg)
மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0773435719
விற்பனை நிலையம்
வரணி மிஷன் பாம், வரணி

புதிய பிரிவுகள் ஆரம்பம்
22.10.2011
24.10.2011
காலை 10.00மணி
அனைத்து கணனிக்கற்கை நெறிகளுக்கமான புதிய பிரிவுகள் எதிர்வரும் 22.10.2011,24.10.2011 ஆகிய திகதிகளில் ஆரம்பமாகவுள்ளது.
மாணவர்கள் பதிவினை மேற் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்
INSTITUTE OF INFORMATICS STUDIES
100, Clock Tower Road,Jaffna
T.P :021 222 2831 Fax : 021 222 6933

கனடா செல்ல விரும்புகின்றீர்களா?
* விசா தொடர்பான ஆலோசனைகள் இலவசம்
* இதற்குக் கட்டாயம் சித்தியடைந்திருக்க வேண்டிய IELTS பரீட்சைக்குரிய வகுப்புக்கள்
ஆரம்பம்: சனி பி.ப.3மணி
திசைகாட்டி முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 0214914527
(யாழ். நகரிலிருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக வருகையில் யாழ்.இந்துக்கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



லயன்.பொ.அருணகிரிநாதன், J.P
(BA(HONS) Dip.in.Edu,M.Ed,SLPS - I)

கடந்த முப்பது வருடங்களாக கல்வி சமூகத்தில் கடமையாற்றி பொதுநிறுவனங்களிலும், சர்வதேச லயன்ஸ் கழகத்திலும் ஆலயங்களிலும் தொண்டாற்றி வேலணை மத்திய கல்லூரியில் முதல்வராக இருந்து பிரதிக்கல்விப்பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் எமது உறுப்பினரை மேன்மேலும் சிறப்புற சேவை செய்ய வேண்டுமென்று வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.

தீவக அரிமா கழகம்.

இடமாற்றம்
இல. 142 பிரதான வீதி (மக்கள் வங்கி) முன்னால் நெல்லியடியில் இயங்கிவந்த
கணேசன் மோட்டோர்ஸ்
முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் உதிரிப்பாக விற்பனையாளர் (பஜாஜ்) 21.10.2011 ஆம் திகதி தொடக்கம் இல.1-3 பருத்தித்துறை வீதி, நெல்லியடிச் சந்தி எனும் முகவரியில் இயங்கி வருகிறது. என்பதை அன்பர்கள், நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்பு: 0777049364

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org